# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர் 9: இதழ் 5-6 | ஏப்ரல், மே 1957 | விலை சதம்: 30



## அட்டைப் படம்




“ அனுராதபுரத்தில் வீற்றிருந்த திருக்கோலத்தில் அமைந்த புராதன புத்தர் சிலையொன்று என் மனதைக் கவர்ந்தது. ஒரு வருஷம் கழித்து, நான் டெராடூன் சிறையில் இருந்தபொழுது, இலங்கையிலிருந்து நண்பர் ஒருவர் இந்த சிலையின் படமொன்றை எனக்கு அனுப்பிவைத்தார். நான் அதை என்னுடைய சிறையறையில் இருந்த எனது சிறிய மேசையின் மேல் வைத்துக்கொண்டேன். அந்தச் சிலை எனது அருமைத் தோழனாகிவிட்டது. புத்தருடைய சிலையில் காணப்பெற்ற உறுதியான அமைதி தவழ்ந்த உடலமைப்புகள் எனக்கு ஆறுதலையளித்து, சக்தியைக் கொடுத்து, பலதடவைகளில் எனது மனத் தளர்ச்சியையும் போக்கியிருக்கின்றது ” ஜவஹர்லால் நேரு தனது சுயசரிதத்தில் மேற் கூறியவாறு குறிப்பிடும், உலகக் கலை விமரிசகர்களின் மனதைக் கவர்ந்த சிலையின் அருகே அண்மையில் புத்த ஜயந்தி விழாவில் பங்குபற்ற இலங்கைவந்த ஸ்ரீ ஜவஹர் தன்னைமறந்து சிலையின்மீது வைத்தகண் வாங்காது நிற்கும் காட்சியை எமது புகைப்படப் பிடிப்பாளர் அருமையாகப் படம் பிடித்திருக்கிறார்.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பாரதப் பிரதமரின் இலங்கை விஜயம் | 3 |
| 2. | கடல் | 9 |
| 3. | தமிழ் மொழியை நியாயமான அளவு உபயோகித்தல் | 11 |
| 4. | ஈழநாட்டில் வருடப்பிறப்பு | 12 |
| 5. | பௌத்த காவியங்கள் | 15 |
| 6. | கேள்விச் செவி | 17 |
| 7. | கைத்தறி நெசவுத் துணியும் மில்தறி நெசவுத் துணியும் | 18 |
| 8. | புத்தாண்டில் புதுவாழ்வு | 21 |
| 9. | புத்தர் காட்டிய வழி | 22 |
| 10. | புத்த ஜாதகம் | 24 |
| 11. | சதாவதானம் கதிரவேற்பிள்ளை ஞாபகச்சின்னம் | 26 |
| 12. | யாழ்ப்பாண மாவட்ட மாதர் முன்னேற்றச் சங்க சம்மேளனம் | 27 |
| 13. | கடவுளும் நானும் | 28 |
| 14. | இலங்கை நுண்தொழில் கல்லூரி | 29 |
| 15. | விபுலானந்த அமுதம் | 30 |
| 16. | பெண்களும் விசாகமும் | 31 |
| 17. | புலோலி தந்த புலவரேறு | 34 |
| 18. | நம்பியகவல் | 35 |
| 19. | ஆனந்தம் | 38 |
| 20. | யப்பானியப் பிரதமரின் இலங்கை விஜயம் | 40 |
| 21. | சங்கிலி | 46 |


1——J. N. B 65300—5,508 (7/57)



இந்தியப் பிரதமர் ஸ்ரீ ஜவஹர்லால் நேரு புத்த ஜயந்தி விழாவில் பங்குபற்ற இலங்கை வந்தெய்தியபொழுது ஆகாய விமான நிலேயத்தில் இலங்கைப் பிரதமரால் வரவேற்கப்பட்டார். அப்பொழுது பௌத்த குருமார் பிரித் ஓதி ஸ்ரீ நேருவை ஆசீர்வதித்தனர்.

# பாரதப் பிரதமரின் இலங்கை விஜயம்

மே மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்றரை மணிக்கு நேருஜியை ஏற்றிவந்த "ராஜ்ஹம்சம்" எனும் விமானம் இரதமலானே விமான நிலேயத்தை அடைந்ததும், சமுத்திரம் போலத் திரண்டிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் "நேருஜிக்கு ஜே! வாழ்க பாரதப் பிரதமர் என்று வானேப்பிளக்க கோஷமிட்டனர். சிங்கேறு போல விமானத்திலிருந்து புன்னகை தவழும் முகத்துடன் இறங்கினுர் பாரதப்புதல்வர். அவரைத் தொடர்ந்து இந்திரா காந்தியும், சாம்ராச்சிய காரியதரிசி தேசாயும் இதர அதிகாரிகளும் விமானத்திலிருந்து இறங்கினுர்கள். பாரதப் பிரதமரையும் அவருடைய புதல்வியையும் இலங்கைப் பிரதமரும் அவருடைய மனேவியும் வரவேற்றனர். பிரதமரின் மகன் நேருஜிக்கு மாலேயிட, அவருடைய மகள் ஒரு பூச்செண்டை ஸ்ரீமதி இந்திரா காந்திக்கு அளித்தார்.

ஸ்ரீ நேரு தமது விஜயத்தைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டார் :

"யான் மூன்று வருடங்கட்கு முன்னர் வேறு காரணத்துக்காக இலங்கை வந்தேன். இப்பொழுது புத்த ஜயந்தியில் கலந்து கொள்வதற்காக வந்துள்ளேன். இதை ஒரு பெரும் பேருக மதிக்கிறேன். ஜயந்திக் கொண்டாட்டம் எமக்குமட்டுமன்றி அகில உலகத்திற்குமே ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். எனவே என் வருகையை ஒரு யாத்திரை என்று கூறுதல் பொருந்தும்."

ஸ்ரீ நேருவுக்கு இலங்கை இந்திய வர்த்தக சமுகத்தினர் கால் பேஸ் ஹோட்டலில் ஒரு வரவேற்பளித்தனர். இவ்வரவேற்பில் ஸ்ரீ நேரு பின்வருமாறு கூறினுர்.

"இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் நல்லெண்ண உறவுகளே இதுவரை யிருந்தன. இப்போதிருக்கின்றன. இனியும் அவ்வித உறவுகளேயிருந்து வரும். இதனே எப்பொழுதும் மனதில் கொள்ளுதல் வேண்டும். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இருக்கும் பிரச்சினேகள் இவ்விதமே அணுகப்படுதல் வேண்டும்".

### மேயரின் விருந்தில்

ஸ்ரீ நேருவுக்கு நகர மேயர் திரு. சுகததாசாவால் ஒரு பொது ஜன வரவேற்பு 17 ந் தேதி பிற்பகலளிக்கப்பட்டது. இவ்வரவேற்பில் ஸ்ரீ நேரு பின்வருமாறு கூறினுர் :

"இன்று எம்மை நோக்கியிருக்கும் பிரச்சினேகளேத் தீர்ப்பதற்கு இரு மார்க்கங்களே உள்ளன. ஒன்று முற்றுக அழிந்து போதல் அல்லது புத்தர் காட்டிய சகிப்புத்தன்மையைப் பின்பற்றுதல். "மற்றவர்களேப் புண்படுத்திஞல் நீயே புண்படுத்தப்படுவாய்" என்று உலக நியதி போதிக்கிறது. நமது சக்திக்கு மேம்பட்ட பிரச்சினேகள் இன்று நம்மை எதிர் நோக்கியுள்ளன. பகை, சந்தேகம், இவைகளின் அடிப்படையில்தான் இன்று உலகப் பிரச்சினேகள் விவாதிக்கப்படுகின்றன. டில்லியிலிருந்து இலங்கை வரும் வழியில் இந்நிலே பற்றியே நான் யோசித்துக் கொண்டுவந்தேன். இன்று எந்த நாடும் தனித்துவாழ முடியாது. இந்தியாவும் இலங்கையும் இப் பிரச்சினேகள் சம்பந்தமாக உழைக்க வேண்டும்".

ஸ்ரீ நேரு 18 ந் தேதி புகையிரத மார்க்கமாக புனித போதி விருட்சத்தைத் தரிசிக்க அநுராதபுரத்துக்குப் பிரயாணமாஞர். அங்கு புதிய அநுராதபுர நகரின் வீதி யொன்றை ஸ்ரீ நேரு திறந்து வைத்தார். ஒரு பொதுக் கூட்டத்திலும் ஸ்ரீ நேரு சொற்பொழிவாற்றினுர்.

19 ந் தேதி ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ நேரு வெள்ளவத்தை ராமகிருஷ்ணமடத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசினுர். வெள்ளவத்தை ஸ்ரீ விக்கிரம ரோட்டில் சர்வ தேச பௌத்த நிலேயம் ஒன்

றின் அஸ்திவாரக்கல்லையும் நேருஜி நாட்டினார். அகில இலங்கை பௌத்த மாணவர் சம்மேளனக் கூட்டமொன்றிலும் அவர் சொற்பொழிவாற்றினார். ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற பிரமாண்டமான புத்த ஜயந்திக் கூட்டத்தில் ஸ்ரீ நேரு கலந்துகொண்டு சொற் பெருக்காற்றினார்.

### ஸ்ரீ நேருவின் சொற்பொழிவு

அவர் நிகழ்த்திய பிரசங்கத்தின் சுருக்கம் பின்வருமாறு :—

மதிப்புக்குரிய பிக்குகளே, பிரதமரே, நண்பர்களே,

நேற்று முன்தினம் நான் கொழும்பு வந்தேன். சீக்கிரமே எனது இலங்கை விஜயம் முடிவடைய இருக்கிறது. ஆகவே இக்கூட்டத்தில் முதல்முதலாக உங்களுக்கு நன்றி செலுத்த விரும்புகிறேன். நீங்கள் என்னை வரவேற்றதற்கு மட்டும் நான் நன்றி செலுத்தவில்லை. என்மீது நீங்கள் சொரிந்த அன்புக்கும் நன்றி செலுத்துகிறேன்.

உங்கள் சொந்த மொழியில் பேசி உங்கள் உள்ளத்தின் உள்ளே புகுவதற்கு நான் விரும்புகிறேன். ஆனால் அது முடியாத காரியம். இங்கும் வேறிடங்களிலும் சிங்களப் பிரசங்கங்களைக் கேட்டபொழுது பல வார்த்தைகள் எனக்கு விளங்குவதைக் கண்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியுமடைந்தேன். இவ்வார்த்தைகள் நமது வட இந்திய மொழிகள் பலவற்றுக்குப் பொதுவானவை. பாளி மொழியில் செய்த பிரார்த்தனைகளைக் கேட்டபோதும், அதில் ஒரு பெரும் பகுதி எனக்கு விளங்குவதைக் கண்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியுமடைந்தேன். பாளிமொழி சமஸ்கிருதத்தை அண்டியமொழியாக இருப்பதே இதற்குக்காரணம். இப்படிக் கூறுவதால் நான் வடமொழியை நன்கறிந்தவன் என்று அர்த்தமல்ல. இருப்பினும் எனக்குத் தெரிந்த சமஸ்கிருதம் இப்பிரார்த்தனைகளை ஓரளவு புரிந்துகொள்ள உதவிற்று. இவை எப்படியாயினும் நான் இப்பொழுது உங்களில் பலருக்கு புரியாதிருக்கக்கூடிய ஒரு மொழியிலேதான் பேச வேண்டியிருக்கிறது.

மதசம்பந்தமாக, முக்கியமாக பௌத்தம் சம்பந்தமாக அறிவால் மிகுந்த சொற்பொழிவுகளை நீங்கள் கேட்டீர்கள். மதத்தைப்பற்றிப் பேச என்னால் முடியாது. ஏனெனில் நான் மத அறிஞனல்ல. நான் ஒரு சாதாரணன். என்னையும் எந்நாட்டையும் எதிர்நோக்கியுள்ள வாழ்க்கைப் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு, எனக்குப் புரிந்த வரையில் எனது கடமைகளைச் செய்ய முயற்சிப்பவன் நான். ஆனால் எனது கடமைகளென்று சொல்லும்பொழுது எனது இந்திய மக்களின் சேவையை மட்டுமல்ல, இந்தியாவுக்கு அப்பாலுள்ள மக்களுக்குச் செய்ய வேண்டிய சேவையையும் நான் காணுகிறேன். தேசங்களிடையே—எமது அயற்தேசங்களிடையேயும் எமக்குத் தூரத்திலுள்ள தேசங்களிடையேயும் கூட சினேக பூர்வமான, ஒத்துழைப்புத் தொடர்புகளைச் சுமுகத் தொடர்புகளை அபிவிருத்தி செய்ய வேண்டிய அச்சேவையையும் முக்கியமாகக் காணுகிறேன்.

### இலங்கை-இந்திய ஒற்றுமை

இந்தியா இலங்கை போன்ற நாடுகள் பொதுவான பண்புகள் பலவற்றில் ஒருமைப்பாட்டுடன் விளங்குகின்றன. பழமை தொட்டே நிலவும் அடிப்படை ஒற்றுமைகளை நினைவூட்டும் ஒன்றாக மொழிகளில் காணப்படும் ஒற்றுமைகளை நான் இங்கே குறிப்பிட்டேன். ஆனால் எல்லாவற்றிலும் மேலாக எனது நாட்டிலிருந்து இங்கு வந்த புத்தரின் போதனைகள், ஆயிரக்கணக்கான வருடங்களாக நீங்கள் ஆசையுடன் பேணும் போதனைகள் நம்மைச் சேர்த்துவைப்பதால் இவ்விரு நாடுகளிடையேயும் நல்லுறவு மிகவும் விரும்பத்தக்கதாக விளங்குகிறது.

பூமிஅமைப்பு நம்மை நெருங்கிய அயல் நாடுகளாக ஆக்கியுள்ளது அண்டை நாடுகளிடையே கலாசார ஒற்றுமைகளும் இதர ஒருமைப்பாடுகளும் இருப்பது இயற்கையேயாம். நாம் அண்டைத் தேசங்களாக இருப்பதும், பலவித பொதுவான பண்புகளும் நம்மைச் சேர்த்து வைத்திருப்பதோடு உலக விவகாரங்களும் எம்மை ஒன்று சேரசர்க்கின்றன. எமது நாட்டு விவகாரங்களுக்கு வெளியே வந்து சர்வதேச ஒத்துழைப்பையும் நல்லெண்ணத்தையும் நிலை நாட்ட இன்றைய உலக நிகழ்ச்சிகள் நம்மை உந்துகின்றன. சர்வதேச ஒத்துழைப்பு ஏற்படவேண்டும் அல்லது போராட்டமே வழியாகவிடும்—சாதாரண போராட்டமல்ல, உலகப் போரே தோன்றிவிடலாம். மத்திய வழிகள் எல்லாம் இப்பொழுது படிப்படியாக மறைந்து வருகின்றன. உலகம் இப்பொழுது ஒரு வழியைத் தெரிந்தெடுக்க வேண்டும். உங்கள் நாடு, எனது நாடு, எல்லா நாடுமே இரு எதிர் எதிரான வழிகளில் ஒன்றைத் தெரிந்தெடுக்க வேண்டியிருக்கிறது. ஒன்றில் கொந்தளிப்பு, அல்லது சமாதானம், ஒத்துழைப்பு. புத்தரும், ஏன் எல்லா ஞானிகளும் பெரியோரும் தான், இச்சமாதானப் பாதையையே வற்புறுத்திச் சென்றனர். இவ்விரு பாதைகளில் எதை இவ்வுலகம் தெரிந்தெடுக்கப்போகிறது? வாளெடுத்து மாயப்போகிறதா ? அல்லது புத்தரும் இதர மகான்களும் கூறிய பாதையில் செல்லப் போகிறதா ? இன்று வாளெடுப்பதற்கே உலகம் முன்னிற்கிறது போல் தோன்றுகிறது.

வாளெடுக்கும் கொள்கை, போர்க்கொள்கை எத்தனையோ தடவை தலைதூக்கி எத்தனையோ மக்கள் மாண்டனர். அடிக்கடி இவ்வாறு நிகழ்ந்துவந்த போதிலும் வாளெடுக்கும் கொள்கையிலும் பார்க்க, பகைமைக் கொள்கையிலும் பார்க்க சக்திவாய்ந்த ஒன்றிருக்கிறது என்பதையே உலக சரித்திரம் காட்டுகிறது என்றுதான் இன்னும் நம்புகிறேன். ஆனால் வாட்கொள்கைக்குப் பின்னால் இன்று அளவிடற்கரிய பலம் மண்டிக்கிடக்கிறது இப்பலம் ஆக்கபலமன்று—அழிவுச்சக்தியாம். இச்சக்தி முன் எப்போதையும்விட அதிக நாசத்தை விளைவிக்கலாம். ஆகையினாலே உடனடி அவசியத்தை முன்னிட்டு இப்பிரச்சினையை நாம் ஆராய வேண்டியிருக்கிறது.

### யுத்த ஆபத்து

இவ்வாட்கொள்கையின் பின்னே இருப்பது என்ன ? ஆயுதமிருக்கிறது. சிறு ஆயுதம், பெரிய ஆயுதம், வாள், துப்பாக்கி, அணுகுண்டு, ஜலக்குண்டு எல்லாமிருக்கின்றன. இன்னொன்றுமிருக்கிறது. மனித உள்ளத்தைச் சிதைக்கும் பலாத்காரம், பகைமை என்பதே அது. எஃகினால் செய்த ஆயுதத்திலும் பார்க்க, இதர எல்லா ஆயுதங்களிலும் பார்க்கத் தொட்டுணர முடியாத மனித உள்ளம், மனித இதயம் மனித உணர்ச்சி என்பதை நாம் வந்தடைகிறோம். மனித உள்ளமும் இதயமும் பகைமையாலும் பலாத்காரத்தாலும் சிதைக்கப் பட்டால் அதனால் உலகத்திற்கு கஷ்டம். உங்களுக்கும், எனக்கும், நம் எல்லோருக்கும் கஷ்டம்தான். ஆனால் அவ்வாறு மனித உள்ளம் சிதைக்கப்படாவிட்டால் பலாத்காரத்திற்கு உபயோகமாகும் இந்த சக்திகள் நல்ல நோக்கங்களுக்குப் பயன்படும். இந்தத் தொடர்பிலேதான் நாம் தார்மீக, ஒழுக்கப் பிரச்சினைகளைப் பற்றி யோசிக்கவேண்டும். தனிப்பட்ட மனிதர், குழு மனிதர், ஒரு தேசப்பிரஜை என்ற சிறு சிறு பொந்துகளில் இருந்து கொண்டு இப்பிரச்சினைகளைப் பார்க்காது ஒரு பரந்த நோக்கில் இவற்றைப் பார்க்க வேண்டும். தேசிய நலன் என்பது இனி சர்வதேச நலனுக்கு முரண்பட்ட ஒன்றாக இயங்க முடியாது. ஏனெனில் சர்வதேசரீதியில் நாம் வீழ்ச்சியடைய நேர்ந்தால் அவ்வீழ்ச்சி எமது தேசத்தையும் பாதிக்கவே செய்யும். சர்வதேசரீதியில் யுத்தம் ஏற்பட்டால் நாமும் அதனால் கீழ் நிலை உறுவோம். இந்நிலையில் நமது தேசீய நலன்பற்றிப் பேசுவது எவ்வாறு பலனளிக்கும் ?

யுத்தம் கூடாது என்று பலரும் சொல்கிருர்கள். ஆனல் யுத்தம் கூடாது, மிகவும் ஆபத்தானது என்று கூறும் அவர்களே "கெடுபிடியுத்தத்தை" ஆதரித்துப் பேசுகிருர்கள். ஆனல் என்னைப் பொறுத்தவரையில் கெடுபிடி யுத்தத்தைச் சுமந்து நிற்கும் நஞ்சிதயத்தைக் கொண்டிருப்பதைவிட, வாளெடுத்துச் சண்டை புரிவதையே நான் விரும்புவேன். வாளை நாம் கண்ணுல் காணமுடியும். ஆயுதத்தை நாம் பார்க்கமுடியும்—அது கூடாதுதான். ஆனல் அது ஒருவரால் பார்க்கவும் உணரவும் கூடிய ஒன்ருகும். ஒருவரை வெறுப்பின் இருப்பிடமாகமாற்றும் இத்தக் "கெடுபிடியுத்த" த்தை நாம் எப்படி சமாளிக்கப் போகிறேம்? ஓரளவிற்கு அதனை அடக்கிவைக்கலாம். ஆனல் அதுவெளிப்பட்டு உலகம் பூராவும் நச்சைப்பரப்புகின்றது. "கெடுபிடியுத்தம்" மிகவும் அபாயகரமானதென நான் கருதுகிறேன். தற்போதைய நிலைமையை நோக்குமிடத்து, நாம் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படுமென்பதை என்னல் புரிந்து கொள்ள முடிகிறது.

### காந்திஜீ இருந்திருந்தால்

ஓர் அரசியல் வாதி என்ற முறையில் நான் பேசுகிறேன்; எனது நாட்டின் நல்வாழ்வு, பாதுகாப்பு ஆகியவற்றிற்குப் பெருமளவில் பொறுப்பானவன் என்ற முறையில் நான் பேசுகிறேன்; இந்த நிலைமையில் எனது குரு என்ன கூறியிருப்பார் என்பதை என்னல் தெரிவிக்க முடியாதிருப்பதை யிட்டு நான் கவலைப்படுகிறேன். காந்திஜி இவ்வாறு கூறியிருக்கவும் கூடும்:—"ஆயுதங்களை வீசி எறிந்து விடுங்கள், அவற்றைத் தொடாதீர்கள், நன்மையில் அதாவது உங்கள் நன்நோக்கத்திலும் உங்கள் எதிரிகளின் நன்நோக்கத்திலும் நம்பிக்கை கொள்ளுங்கள். தியாகத்தால் உங்கள் எதிரிகளை வெல்லுங்கள்". இதில் எனக்கு அசைக்கமுடியாத நம்பிக்கையுண்டு. ஆனல் நான் அதை எவ்வளவுதான் நம்பினலும், அவ்வாறு என்னல் நடந்து கொள்ள முடியாது. எங்கள் சூழ்நிலையைப் பொறுத்தவரையில். நான் ஒரு முனிவராக இல்லாதபடியால் ஒரு முனிவரைப் போல் என்னல் நடந்து கொள்ள முடியாது என்பதை மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நான் ஒரு சாதாரண மனிதன், எனவே அப்படி அல்லாமல் வேறுவிதமாக நடந்து கொள்ள முயல்வது நல்லதல்ல. எனது மக்கள் புரிந்து கொள்ளாத, அவர்கள் அறியாத, அதற்கான பயிற்சியோ திறமையோ இல்லாத ஒரு வழியில் அவர்களை இட்டுச் செல்ல ஒரு ஜனநாயக நாட்டின் தலைவனென்ற முறையில் என்னல் முடியாது.

### தலைவனின் கடமை

எனவே, துரதிர்ஷ்டவசமாக வாழ்க்கையில் நாம் விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ராஜதந்திரி விட்டுக் கொடுக்கிருன். அரசியல் வாதியும் கூட விட்டுக் கொடுக்கிருன். ஏனெனில் ஏனையோரைத் தன்வழியில் இட்டுச் செல்ல வேண்டியிருக்கும் நிலைமையை (மனிதரிற் தலைவனுனல் ஏனையோர் தன்னைப் புரிந்து கொள்ளும்படி செய்தல் வேண்டும்) உணர்ந்து கொண்ட போதிலும் கூட தன் மக்களைத் தன்னல் தூக்கிச் செல்ல முடியாது என்ற காரணத்தால் அவ்வாறு விட்டுக் கொடுக்க நிர்ப்பந்திக்கப்படுகிருன். தன் நாட்டு மக்கள் எவ்வளவு தூரம் செல்கிருர்களோ அவ்வளவு தூரம் மட்டுமே அவனுல் செல்லமுடியும். அதுவே வரையறுக்கும் அம்சம். வேறு விதமாகச் சொல்லப் போனல், ஒரு நாட்டு மக்கள் எவ்வளவு தூரம் பயிற்சியளிக்கப் பட்டிருக்கிருர்களோ, எவ்வளவு ஒழுக்க சீலங்களைப் பெற்றிருக்கிருர்களோ, எவ்வளவு தூரம் செல்ல அவர்களின் உள்ளங்களும், எண்ணங்களும் அவர்களை அனுமதிக்கின்றனவோ அவ்வளவு தூரத்துக்கு மட்டுமே ஒருவரால் அவர்களைக் கொண்டு செல்ல முடியும். போதியளவு பயிற்சி பெருத காரணத்தால் அவர்கள் தோல்வியடைவார்களேயானல் அதனல் அவர்கள் அழிந்துவிட மாட்டார்கள். ஏனெனில் அழிவதற்கு காலஞ் செல்லும். அது படிப்படியாகத்தான் சம்பவிக்கக்கூடும்.



இலங்கைப் பிரதமரின் உத்தியோக இல்லத்தில் இந்தியப் பிரதமரும், அவருடைய அருமைப் புத்திரியும், பண்டாரநாயகா தம்பதிகளால் வரவேற்கப்பட்டனர்.

ஆகவே எமது நடத்தை வரையறுக்கப் பட்டிருக்கிறது. ஒரு தனிநபர் தனிப்பட்ட வாழ்க்கையை நடாத்தும் காரணத்தால் அதை உணர மாட்டான். ஆனால் அவன் ஏனையோருடன் இணைந்த ஒரு வாழ்க்கையை நடாத்துமிடத்து, (விசேஷமாக ஏனையோரின் எதிர்கால வாழ்க்கைக்கும் பொறுப்பானவனாக இருக்குமிடத்து) தான் நிச்சயித்த ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைதற்கு ஏனையோருடன் கூடச் செல்லும் ஒரு சகபிரயாணியாகி விடுகிறான். அவர்களை விட்டு அவன் ஓடிவிட முடியாது. இதர பல கோடி மக்களுடன் அவன் கைகோர்த்துச் செல்ல வேண்டும். நடையின் வேகத்தையேனும் அவனால் அதிகரித்துக் கொள்ள முடியாது. சிலரைத் தூக்கிக்கொண்டும் இன்னும் சிலரை உந்தித் தள்ளிக் கொண்டும் வேகத்தை சிறிதளவு அதிகரிக்க அவன் முயற்சிக்கலாம். ஆனால் அவன் அவர்களோடு கூடத்தான் சென்றாக வேண்டும். அப்படிப் பட்ட நிலைமையிலிருக்க வேண்டிய ஒரு மனிதனின் விதி அதுவே. எனவே அவன் இணங்கிப் போக வேண்டியிருக்கிறது. பிழையானவற்றுடன் இணங்கிப்போவது எப்பொழுதும் கேடு விளைவிப்பதும் அபாயகரமானதுமாகும். அது பிழையான காரியங்களுக்கே இட்டுச் செல்லும். ஓர் அரசியற் தலைவனை எதிர் நோக்கியிருக்கும் பிரச்னை அதுவே. ஆயினும் திட்டவட்டமாக தீமை எனப்படுபவற்றுடன் இணங்க மறுப்பதன் மூலமாக தன்னையும் தன் நாட்டையும் காப்பாற்றிக் கொள்ள அவன் முயற்சிக்கலாம். தன் மக்கள் தயாராக இல்லாத காரணத்தாலோ வேறேதும் குறுக்கிட்டமையாலோ சரியான பாதையில் முழுமனதுடன் அடியெடுத்து வைக்க அவனால் முடியாது போய்விடுமாயின் அவன் தப்பான வழியிற் செல்லாமலாவது இருத்தல் வேண்டும். உண்மையான சமாதானத்தை நிலைநாட்ட என்னால் முடியாது போய் விட்டாலும்கூட, யுத்தமும் சமாதானமும் மக்களின் உள்ளத்திலிருந்தே பிறப்பதால் மக்களின் மனதில் சமாதானம் நிலைகொள்ளும் நாள் உதயமாகும் என்ற நம்பிக்கையுடன் யுத்தத்தை தடை செய்யவாவது நான் முயற்சிக்கிறேன். ஜலகுண்டு இருந்த போதிலும், மக்களின் உள்ளங்களும் கருத்துக்களும் தீய வழியிற் செல்லும் போதுதான் தீமை தொடர்கின்றது. பல, பல தீமைகளை நாம் இன்று காண்கிறோம்.

வெறுப்பு, பலாத்காரம் ஆகிய மனப்பான்மைகளிலிருந்து நன்மை பிறக்க முடியாதென்பதை நான் திட்டவட்டமாக நம்புகிறேன். எனவே நாம் இந்நிலைமையை உணர்ந்து, ஏனையோரைக் குறைகூறாமலிருக்க முயற்சிக்கிறோம். ஏனெனில் ஏனையோரின் நன்மைகளையும் தீமைகளையும் எடைபோட்டுப் பார்க்க முயற்சிப்பதில் பலன் யாது? சரியான வழியைக் கண்டு பிடிப்பதற்கு அடிக்கடி நாமே எவ்வளவு கஷ்டப்படுகிறோம். மற்றவரின் சரி, பிழை பார்க்க நாம் யார்? இதர நாடுகளைக் குறைகூறுவதற்கு நமக்குள்ள யோக்கியதைதான் என்ன? சரியான வழியில் ஆகுமான எதையும் செய்ய முடியாமலிருக்கும் நாங்கள் மற்றவர்களின் சரி, பிழை பார்த்து அவர்களைக் குறைகூறுவதில் புளகாங்கிதமடைகிறோம். நாம் சொல்வதுதான் சரி மற்றவர் சொல்வது பிழை என்று வைத்துக் கொண்டாலும்கூட, நாம் மற்றவரைப்பார்த்து "நீ சொல்வது சரியல்ல, உன்னைத் திருத்திக்கொள்" என்று சொல்லிக் கொண்டிருப்பதால் ஏதேனும் நன்மை பிறக்குமா? ஏனையோரை தம் பக்கம் திருப்பிக் கொள்ள முடியாது. ஆகவே இச்சங்கடமான நிலையில் சிக் எரிச்சலையே உண்டுபண்ணும். அது அவனை உன்னிடத்திற் கோபம் கொள்ளச் செய்யும். எனவே கோபத்தால் அவனை உன் பக்கம் திருப்பிக் கொள்ள முடியாது. ஆகவே இச்சங்கடமான நிலையில் சிக்கிக் கொண்ட நாங்கள், நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு காரியத்திலும், சரியான வழியில் முன்னேறினும் சரி இல்லாவிட்டாலும் சரி, பிழையான வழியில் மட்டும் செல்லாமல் தப்பிக் கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு வருகிறோம். மற்றவர்கள் பொல்லாதவர்கள், அவர்கள் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கூறி அனாவசியமாக அவர்களின் கோபத்தை சம்பாதித்துக் கொள்ளாமலாவது இருக்க முயற்சிப்போமாக. இவ்வாறு கூறப்படுவதை எவரும் விரும்பார். குழந்தையாயினும் சரி, வயது வந்தவராயினும் சரி, எவராயினும் அவரைத் தம் பக்கம் திருப்பிக் கொள்வதற்கான மார்க்கம் அதுவல்ல. ஒரு நாட்டின் விஷயத்திலோ இது இன்னும் மோசமாகிவிடுகிறது.


ஆகவே, நாம் இதைப் படிப்படியாக செய்து முடிக்க முயற்சிக்கலாம். அவ்வாறு செய்வதால் நாம் அதிகமாக விரும்பும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களைச் செய்து முடிக்கவும் கூடும்.

இலங்கையும் இந்தியாவும் சுமார் பத்து வருடங்களுக்கு முன் சுதந்திரமடைந்தன. நீண்ட காலமாக இன்னலுற்று பல பல தியாகங்களைச் செய்த பின்னரே நாம் இச் சுதந்திரத்தைப் பெற்றோம். இது இவ்வாறு நிகழ்ந்தது நல்லதே. ஏனெனில் எப்பொருளையும் அதற்குரிய முழுப் பெறுமதியையும் செலுத்தாமல் பெற்றுக் கொண்டால் அது பெறுமதியற்றதாகி விடுகிறது. மனிதன் அனுபவிக்கும் துயரங்களும் இன்னல்களும் ஒரு நாட்டை சீரடையச் செய்கின்றன. எனவே நாம் சுதந்திரமடைந்தவுடன் புதுப்புது கஷ்டமான பிரச்சினைகள் எம்மை எதிர்நோக்கின. சுதந்திரத்தைப் பெற எல்லா மக்களுக்கும் உரிமையுண்டு. ஆனால் மக்கள் தங்கள் உரிமையைக் கோரும்போது அதோடு தாங்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளும் இருக்கின்றன வென்பதை மறந்து விடக் கூடாது.

## சுதந்திரத்தின் பொறுப்பு

சுதந்திரம் ஒரு நாட்டின் மகத்தானதும், மாற்ற முடியாததுமான உரிமையாகும். இத்தகைய சுதந்திரம் அதனோடு எண்ணற்ற கடமைகளையும், பொறுப்புகளையும், பிரச்சினைகளையும் கொண்டு வருகின்றது. மக்கள் இதனை மறந்து தாங்கள் சுதந்திரமாயிருந்தால், பொறுப்பற்றவர்களாக விரும்பியவைகளை யெல்லாம் செய்யலாம் என நினைக்கிறார்கள். சுதந்திரத்தோடு பொறுப்பு, கடமை, தளரா உழைப்பு ஆகியவை கலந்திருக்கின்றன வென்பதை மிகவும் மெதுவாகவே மக்கள் உணருகிறார்கள். இவ்விதமாக நாம் பல குற்றங்களைப்புரிந்தும், பல பரீட்சைகள் நடத்தியும் படிப்படியாக இவ்வரிய உண்மையைத் தெரிந்து கொள்ளுகின்றோம். இவைகளைப் பற்றிய அறிவு வளர்ச்சியடைய நாம் முன்னேறிச் செல்கிறோம். நாம் மாத்திரமின்றி கோடிக் கணக்கான என் நாட்டு மக்களும், உங்கள் நாட்டு மக்களும், எல்லோரும் முன்னேற்றப் பாதையில் நடக்கின் நாம் இவ்விதமாக முன்னேறும் பொழுது சுதந்திர நாடுகளென்ற முறையிலே உலகப் பிரச்சினைகளில் சிக்கிக் கொள்ளுகின்றோம். உலக சமுதாயத்தின் சுதந்திர உறுப்பினராக நாமும் உலகப் பொறுப்புகளில் பங்குபற்ற வேண்டும். இது சுதந்திரத்தின் பரிசாகும். உலகப் பிரச்சினைகளைத் தீர்க்க நம்மாலியன்ற அளவு நாம் முயலுகின்றோம். அல்லது இப்பிரச்சினைகளைத் தீர்க்க எடுக்கும் நடவடிக்கைகளைப் பாதிக்காத முறையில் நடக்கவாவது முயலுகின்றோம். நாம் எவ்வளவு தூரம் வெற்றியடைவோம் என்பது எனக்குத் தெரியாது. நாம் உழைக்க வேண்டியது நமது கடனேயொழிய நமது உழைப்பின் பயனை அறிவது நமது வேலையல்ல. அதனால் நாம் உழைக்கிறோம். நம்மிடம் நம்பிக்கை இருக்குமானால், வாழ உழைக்கும் பண்பிருக்குமானால் நாம் நல்வாழ்வு வாழ முடியும். நாம் நம்பிக்கையை இழந்துவிட்டோமானால், நன்மையளிக்கத்தக்கதும், விரும்பத்தக்கதுமான ஒரு இலட்சியத்தை, பயனுள்ள ஒன்றை நிலை நாட்டத் துணியும்

(44 ம் பக்கம் பார்க்க)



ஜவஹர்லால் நேரு சனப்பிரதிநிதிகள் சபைக்கு வருகை புரிந்தபொழுது மந்திரிகள், பிரதிநிதிகள் அவரைப் புடைசூழவிருந்து அளவளாவுகின்றனர்.

# கூட்டறிக்கை

பாரதப் பிரதமர் ஸ்ரீ ஜவஹர்லால் நேரு மே மாதம் 17 ந் தேதியன்று புத்த ஜயந்தி விருந்தாளராக இலங்கை வந்து மூன்று நாட்கள் தங்கியிருந்து மே மாதம் 20 ந் தேதி விமான மார்க்கமாக இந்தியா மீண்டார்.

பிரதம அமைச்சர், தமது அமைச்சர் குழுவுடன் ஸ்ரீ நேருவை வழியனுப்ப வந்தார். பல பிரமுகர்களும் சமுகமளித்தனர். இந்தியப் பிரதமர் இராணுவ அணிவகுப்பினைப் பார்வையிட்டபின், பௌத்த குருமார் பிரித் ஓதினர்.

அமைச்சர்கள், பிரமுகர்கள் ஆகியோரிடம் விடைபெற்றுக் கொண்டு விமானத்தருகே சென்று தமது பிரியாவிடை வாழ்த்துச்செய்தியை ஸ்ரீ நேரு தெரிவித்தார். அவர் கூறியதாவது:—

"மூன்று நாட்கள் தான் இங்கு தங்கியிருந்தேன். எனினும் நான் கண்டவை எண்ணற்றவை. இவ்வனுபவத்தை என்றும் மறக்க முடியாது. இவ்விஜயத்தினுல் பல நன்மைகள் ஏற்படும் என்பதே என் நம்பிக்கை. எனக்கு நீங்கள் காட்டிய அன்பிற்காக இந்நாட்டு மக்கட்கும், அரசாங்கத்திற்கும் எனது நன்றி உரித்தாகுக."


### இலங்கை இந்தியப் பிரதமர்களின் கூட்டறிக்கை

பாரதப் பிரதமர் ஸ்ரீ நேரு அவர்களும் இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்களும், திரு. பண்டாரநாயக்கா அவர்களின் காரியாலயத்தில் கூடிப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியபின் இரு பிரதமர்களும் விடுத்த ஒரு கூட்டறிக்கையின் விபரம் பின்வருமாறு:

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் திருப்திகரமாகத் தீர்த்துவைக்கப்பட வேண்டியிருக்கும் இன்னும் சில பிரச்னைகள் இருக்கின்றன. இரு நாடுகளுக்குமிடையில் நிலவும் அந்நியோன்னிய உறவுகளை முன்னிட்டும் பலதுறைகளில் இவ்விரு நாடுகளும் ஒத்துழைப்பதனுலும், இருநாடுகளுக்கும் திருப்தியளிக்கும் முறையில் இப்பிரச்னைகளைத் தீர்த்து விடலாமென இரு பிரதமர்களும் உறுதியாக நம்புகின்றனர்.

சர்வதேச பிரச்னைகள் சம்பந்தமாகவும் இலங்கை இந்திய உறவுகள் சம்பந்தமாகவும் தங்கள் அபிப்பிராயங்களைப் பரிமாறிக் கொள்ள பிரதமர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டனர். சர்வதேச பிரச்சினைகள் தங்கள் நாடுகளுடன் எந்த அளவு தொடர்பு கொண்டிருக்கின்றன என்பதை ஆராயப் பேச்சுவார்த்தைகள் பெருமளவு உதவியாக இருந்தன. சமாதானம், உலக ஒத்துழைப்பு, சாம்ராச்சியத்துக்குள் தங்கள் நாடுகளின் உறவு போன்ற விஷயங்களில் பிரதமர்களிடையே காணப்பட்ட அபிப்பிராயங்கள் பெருமளவு ஒற்றுமைப்பட்டனவாகவே இருந்தன.

பாண்டுங் மகாநாட்டின் தீர்மானத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பஞ்சசீலக் கொள்கையில் இரு பிரதமர்களும் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றனர். இந்தக் கொள்கைகள் உண்மையான மனதுடன் பின்பற்றப்பட்டால் பல்வேறு அரசியல் கொள்கைகளையும் அபிப்பிராயங்களையும் கொண்டுள்ள நாடுகளுக்கிடையே கூட நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் நட்புறவையும் பலப்படுத்துமென அவர்கள் நம்புகின்றனர். பிரச்னைகளை இந்த



பல்லாயிரக் கணக்கான மக்களின் மத்தியிலே, சுதந்தர மண்டபத்தில் நின்று ஸ்ரீ ஜவஹர் உலகச் சிக்கலைத் தீர்க்கும் மருந்தைப் பற்றிச் சொற்பொழிவாற்றுகின்றார்.

ரீதியில் அணுகினல் உலக நெருக்கடி பெருமளவு குறைவதுடன் உலகச் சண்டைகளும் நீங்கும். ஆக்கிரமிப்பையும், காலனி ஆதிக்கத்தையும் மீண்டும் புகுத்த எடுத்துக்கொள்ளப்படும் எல்லா விதமான முயற்சிகளையும் அவர்கள் அழுத்தமாகக் கண்டிக்கின்றனர்.

மேற்கு ஆசியாவின் சில பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள நிலைமைகளைக் குறித்து அவர்கள் அதிக கவலையடைந்திருக்கின்றனர். அப்பிராந்தியத்தின் பிரச்னைகளை அப்பிராந்தியத்திலுள்ள நாடுகளே தங்கள் தங்கள் விருப்பப்படி சுதந்திரமாகத் தீர்த்துக் கொள்ள விட்டு விட வேண்டும். பிறநாடுகள் அவற்றில் தலையிடுவதால் பிரச்னைகள் மென்மேலும் சிக்கலடைவதுடன் உலக நெருக்கடியும் வளர்ந்துகொண்டே போகும்.

உலக சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு ஐ. நா. சபை அத்தியாவசியம். நிர்வாகம் சீராக நடைபெற இந்த ஸ்தாபனத்தில் உலக நாடுகள் எல்லாமே நிச்சயம் இடம் பெற வேண்டும். சீனமக்கள் குடியரசை அங்கீகரிக்க மறுப்பது சபையின் சாசனத்துக்கு விரோதமானதுமட்டு மன்றி ஐ. நா. சபையின் உபயோகத்தையும் குறைத்து விடுகின்றது.

அணுஆயுத உற்பத்திகள் பற்றியும், அவற்றின் உற்பத்தியும் அபிவிருத்தியும் தடைசெய்யப்படாத பட்சத்தில் மனிதவர்க்கத்தை எதிர்நோக்கியுள்ள ஆபத்தைப்பற்றியும் பிரதமர்கள் குறிப்பிட்டார்கள். யுத்த காலத்தில் இவ்விதமான ஆயுதங்கள் உபயோகிக்கப்பட்டால் மனித வர்க்கமே முற்றுக அழிந்துவிடும். அதைவிட அமெரிக்கா, சோவியத் யூனியன், பிரிட்டன் போன்ற நாடுகள் தற்பொழுது நடாத்தி வரும் பரீட்சைகள் மனித குலத்துக்குச் சொல்லொணுத்துயரம் கொடுக்குமென்பதுபற்றி பிரதமர்கள் ஆழ்ந்த கவலை தெரிவித்தனர்.

யுத்தத்தில் ஈடுபடக் கூடாதென எல்லா நாடுகளுமே ஏற்றுக் கொண்டிருந்தபோதிலும் மனிதவர்க்கத்தின் எதிர் காலத்துக்கு இந்த அணுகுண்டு பரீட்சைகள் உகந்ததல்ல வென உலக மக்கள் அபிப்பிராயப்பட்டபோதிலும் பெரிய வல்லரசுகள் தங்கள் அணுகுண்டு பரீட்சைகளைக் கைவிட்டதாகத் தெரியவில்லை. ஆகவே அணு ஆயுதம் முற்றுகத் தடைசெய்யப்படுமுன் அவற்றின் பரீட்சைகளை நிறுத்தி வைக்க வேண்டுமெனப் பிரதமர்கள் கேட்டுக் கொள்கின்றார்கள்.

## நேருவும் யாழ்ப்பாணச் சிறுவனும்

ஒரு சிறு சம்பவம் என் ஞாபகத்தில் இப்பொழுதும் இருந்துகொண்டிருக்கிறது. அது நேர்ந்தது யாழ்ப்பாணத்துக்குப் பக்கத்திலே என நான் நினைக்கிறேன். ஒரு பள்ளியின் உபாத்திமார்களும் மாணவர்களும் எங்களுடைய மோட்டார் காரை நிறுத்தி சில உபசார வார்த்தைகளை மொழிந்தார்கள். பையன்களுடைய ஆவல் நிறைந்த முகங்கள் தனியாக என்னுடைய பார்வையில் பட்டன. பிறகு அவர்களில் ஒருவன் என்னிடம் வந்து, என்னுடைய கைகளைக் குலுக்கி, யாதொரு கேள்வியும் கேளாமல் வாதமும் செய்யாமல் "நான் ஒருகாலும் தளர்ச்சியடையேன்" என்று சொன்னுன். அந்த இள முகத்தின் விழிகள் ஒளிவீசின. பிடிவாதம் நிறைந்து நின்றது. அந்த முகம் என்னுடைய உள்ளத்தில் நன்ருகப் பதிந்துவிட்டது. அவன் யார் என்று எனக்குத் தெரியாது. அவனுக்கும் எனக்கும் தொடர்பு இல்லாமல் போய்விட்டது. அவன் தனது வார்த்தையைக் காப்பாற்றி வாழ்க்கையின் கஷ்டமான பிரச்னைகளை எதிர்த்துப் போராடும்பொழுது, தயங்கமாட்டான் என்ற உறுதி என்னிடம் எப்படியோ இருந்துவருகிறது.

(ஜவஹர்லால்நேரு சுயசரித்திரம் பக்கம் 453.)

# கடல்

**வி. செல்வநாயகம்**

இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளுள் ஆங்கிலக் கவி மரபைத் தழுவி எழுந்தவை பலவுள. **தேவியர்கள்** பாடியவற்றுட் பல அத்தகையன. அவற்றுட் கடலைப்பற்றி அவர் பாடிய பாட்டு ஒன்றை எடுத்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பாட்டுக்குப் பொருளாக அமைந்த இயற்கைப் பொருள்களுள்ளே கடல் முக்கியமானதொன்றாகும். ஆங்கிலக் கவிகளுட் **பைறன்** முதலான பெரும் புலவர்கள் கடலைப்பற்றிப் பாடியிருக்கும் கவிதைகள் சிறப்பாகப் பாராட்டப்படுகின்றன. அத்தகைய செய்யுட்கள் தமிழிலும் பலவுள ; எனினும், கடலை மட்டுமே பொருளாகக் கொண்ட தனிக் கவிதைகள் 20 ம் நூற்றாண்டிற்குமுன் தமிழில் எழவில்லை என்றே கூறலாம். பேரிலக்கியங்களை இயற்றிய கம்பன் முதலான பெரும் புலவர்கள் தத்தம் நூல்களிலே ஆங்காங்கு கடலை வருணித்திருக்கின்றனர் ; எனினும், அவற்றின்கண் கடலைப் பற்றிய விரிவான வருணனைகளை நாம் காணமுடியாது. புலவன் தான் எடுத்துக் கொண்ட கதைக்கு அல்லது சந்தர்ப்பத்துக்கு உதவக்கூடிய வகையிலே கடலை வருணித்திருப்பானேயன்றிக் கடலை விரிவாக வருணித்திருக்கமாட்டான். அத்தகைய விரிவான வருணனைகளை நாம் காணவேண்டுமாயின் தேவியவர்கள் புனைந்த கவிதையிலேயே காணலாம்.

உலகிலுள்ள பொருள்களுட் புலவன் பாட்டுக்குப் பொருளாகக்கொள்வது எது என்ற வினவுக்கு விடைகாண முற்படுவோமாயின், அவன் கொள்ளாத பொருள் உலகத்தில் யாதுமில்லை என்பதைக் காணலாம். புலவனுடைய உணர்ச்சியைத் தூண்டவல்லது எதுவோ அதனை அவன் வருணித்துக் கூறுதல் அவனுடைய பிறப்புரிமை. இயற்கைக் காட்சிகள் அழகு உள்ளவை ; புலவனுடைய உணர்ச்சியைத் தூண்ட வல்லவை ; ஆகவே, அவை கவிதையில் வருணிக்கப்படுகின்றன. ஒரேவிஷயத்தைப்பற்றிப் பல புலவர்கள் பலவகையாகப் பாடியிருக்கின்றனர். குறித்த ஒரு விஷயத்தை ஒரு புலவன் வருணிப்பதுபோல இன்னொரு புலவன் வருணிப்பதில்லை. இருவரும் காணும் பொருள் ஒன்றுதான் ; எனினும், அதனைக் காணும்வகையிலே அவர்களுக்கிடையே வேறுபாடு உண்டு. அதனாலேதான், அவர்கள் அதனை வெவ்வேறுவகையில் வருணித்துக் கூறுகின்றனர். காணும் பொருள் ஒன்றாக இருந்தபோதும் காண்போருடைய மனோபாவம் வேறுபடுதலினாலே, அப்பொருளை வெவ்வேறுவகையிற் புலவர்கள் கூறுகின்றனர். இயற்கைப் பொருளை ஒருவர் காண்பதுபோல இன்னொருவர் காணமுடியாதிருப்பதனாலேதான் இயற்கை எப்பொழுதும் புதிதாகவும் அளந்தறிய முடியாததாகவும் இருக்கின்றது.

தமிழிலே கடலைப் பொருளாகக் கொண்ட பாட்டுக்கள் பலவுள. அவற்றையெல்லாம் நாம் ஒருங்குவைத்து ஆராய்ந்து பார்ப்போமாயின், அவற்றுள் ஒன்றைப்போல இன்னொன்று இருத்தலைக் காணமுடியாது. எனவே, அவற்றுள் எது நல்லது எது கூடாதது என்பதை எப்படிக் காண்பது என்ற வினா உங்கள் உள்ளத்தில் எழுதல்கூடும். இந்த வினவுக்கு விடை கூறுதற்குமுன் சிலருடைய மனத்தில் எழும் ஐயப்பாடு ஒன்றினை எடுத்துக்காட்டுதல் பொருத்தமுடையதாகும். இயற்கைக் காட்சியொன்றைப் படம்பிடித்துக் காட்டுவதுபோலக் காட்டும் பாட்டுத்தான் சிறந்தது என்று சிலர் கூறுவார்கள். படம்பிடித்துக் காட்டுவதுபோலக் காட்டுதல் புலவனுடைய தொழிலுமன்று, நோக்கமுமன்று. ஒரு பொருளின் படத்தைப் பார்ப்பதிலும் அப்பொருளை நேரிற்கண்டு மகிழ்தல் சாலச் சிறந்தது. படம் எவ்வளவு அழகாக இருந்தபோதும் அதற்கு ஆதாரமாக இருந்த பொருள் அதனினும் சிறந்து காணப்படும் என்பதில் ஐயமில்லை. கடலைப் படம்பிடித்துக் காட்டும் பாட்டிலும் கடல் சிறந்ததாகல்வேண்டும். அங்ஙனமாயின் அப்பாட்டைப் படித்து அனுபவிப்பதிலும் அக்கடலை நேரிற் கண்டு அனுபவித்தல் நல்லது. பாட்டே தேவையில்லை என்று கூடச் சொல்லலாம். ஆனால், கடலைப் பார்த்து அனுபவிப்பதிலும் பன்மடங்கு சிறப்பாக நாம் கடலை வருணிக்கும் பாட்டைப் படித்து அனுபவிக்கின்றோம். அதற்கு நாம் ஒரு காரணம் கூறலாம். இயற்கைக் காட்சி புலவனுடைய கற்பனையைத் தூண்டுவதனாலே அவனுக்கு உண்டான உணர்ச்சியனுபவத்தை வெளிப்படுத்த அக்காட்சி ஒரு கருவியாக அமைகின்றது. ஆகவே, அக்காட்சி வருணனையிலே நாம் அவனுடைய அனுபவத்தைக் காணமுடிகிறது. அது எம்முடைய உணர்ச்சியைத் தூண்டுதலினால், அக்காட்சியிலும் அக்காட்சியை வருணிக்கும் கவிதை எமக்குப் பயன்படுகிறது. அதனால், கடலிலும் பார்க்க அக்கடலை வருணிக்கும் கவிதையை நாம் பெரிதும் விரும்புகின்றோம்.

புலவன் கடலை வருணிக்கும்போது அவன் காட்சிக்கு அகப்படும் அம்சங்கள் எல்லாவற்றையும் வருணிப்பதில்லை. தன்னுடைய உணர்ச்சியைப் புலப்படுத்த எது எது பயன்படுமோ அதை அதை அவன் வருணித்துப் பயன்படுத்திக் கொள்ளுகின்றான். அதற்கு நளவெண்பாவிலுள்ள ஒரு செய்யுளை உதாரணமாகக் காட்டலாம். நளன் கடலைப் பார்த்துக் கூறுவதாக அது அமைந்துள்ளது. அதன்கண் அவனுடைய மனோபாவம் பிரதிபலிக்கின்றது.

போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய்—தீவா
யரவகற்று மென்போல வார்கலியே மாதை
இரவகற்றி வந்தாய்கொல் இன்று.

என்பது அப்பாட்டு. நளன் தன் காதலியைக் கானகத்திற் காரிருளிற் கைவிட்டுப் பிரிந்து செல்கின்றான். அவளைவிட்டுப் பிரிய முடியாமையால் மீண்டு போதலும் வருதலும் புரண்டு விழுதலும் இரங்குதலும் குழறுதலும் நடுங்குதலுமாகிய பல தொழில்களைச் செய்கின்றான். பின்னர் அவன் செல்லும் வழியிலே கடலைக் காண்கின்றான். கண்டபோது, தன்னுடைய மனோநிலையை வெளிப்படுத்தும் நோக்கமாக அக்கடலின் காட்சியை இந்தச் செய்யுளிலே வருணித்துக் கூறுகின்றான். அவ்வருணனை அவனுடைய மன ஒருமைப்பாட்டையும் துன்பத்தையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. கடல் அலைகளின் தொழிலுக்கும் அவனுடைய மன நிலைக்கும் உள்ள தொடர்பினை நாம்

1*——J. N. B 65300 (5/57)

கண்டு இன்புறமுடிகின்றது. அதனுல், நாம் இதனை ஒரு நல்ல பாட்டு என்று கூறுகின்ருேம். இந்த முறையிலே நாம் தேவியவர்களுடைய பாட்டையும் ஆராய்வோமானுல் அதன் கண் காணப்படும் சிறப்புக்களை அல்லது சிறப்பின்மைகளைக் கண்டுகொள்ளலாம். பாட்டு வருமாறு :

எல்லை அறியாப் பெருங்கடலே—நீதான்
  இரவும் உறங்கா யோகடலே
அல்லும் பகலும் அலைகடலே—உனக்கு
  அலுப்பும் இலையோ கருங்கடலே.

உருண்டு திரண்டு வருங் கடலே—உடைந்து
  ஓடிப்போவ தேன் கடலே
வெருண்டு மதிகெட் டாய்கடலே—பாறை
  விலகிப் போகு மோகடலே.

பொங்கு திரைக ளோகடலே—அவை
  புரவி நிரைதா மோகடலே
எங்கும் உனதொளி யோகடலே—அன்றி
  இடியின் முழக்க மோகடலே.

ஓடம் எடுத்தெறி யுங்கடலே—தயை
  உனக்குச் சற்றிலை யோகடலே
ஆடல் வீடித னைக்கடலே—நீயும்
  அழிப்ப தழகா மோகடலே.

மலையை வயிற்றடக் குங்கடலே—எண்ணில்
  மகர மீனுல வுங்கடலே
விலைகொள் முத்தளிக் குங்கடலே—சிப்பி
  விளையா டற்குத வுங்கடலே.

மழைக்கு மூலமும் நீகடலே—அதை
  வாங்கி வைப்பதும் நீகடலே
வழுத்து மகிமையெல் லாங்கடலே—எவர்
  மதித்து முடிக்கவ லார்கடலே.

ஒரு பாட்டை நல்லதா அல்லது கூடாததா என்று மதிப்பிட முன் அதை நாம் பலமுறை உணர்ச்சியோடு படித்துப் பார்த்தல் வேண்டும். பாட்டிலுள்ள ஓசை அப்பாட்டில் அமைந்துகிடக்கும் உணர்ச்சியனுபவத்தை வெளிப்படுத்தும் கருவியாதலின், ஒன்றைப் படிக்கும்பொழுது ஓசையுடன் சேர்த்துப் படித்தல்வேண்டும். பாட்டிலுள்ள அனுபவ பொருளை நாம் பெறுவதற்கு ஏற்ற மனே நிலையை ஏற்படுத்திக்கொள்ளாவிடின், பாட்டைப் படித்துப் பயனடையவும் முடியாது. அது நல்லதா அல்லது கூடாததா என்று மதிப்பிடவும் முடியாது. எனவே, இப்பாட்டைப் படித்தற்கு வேண்டிய மனே நிலையை ஏற்படுத்திக்கொண்டு இதனைப் படித்துப்பார்க்கும் பொழுது இது ஒரு நல்ல பாட்டு அன்று என்ற முடிபிற்கே வரவேண்டியிருக்கிறது. ஒரு பாட்டைக் கூடாதது என்று இலேசாகச் சொல்லிவிடலாம். அது ஏன் கூடாதது என்று நிரூபிப்பதுதான் கஷ்டமானது. ஒரு பாட்டிலே அதாவது பல செய்யுட்களைக் கொண்ட ஒரு கவிதையிலே காணப்பட வேண்டியது ஒரு மனேபாவம். அதாவது ஒரு உணர்ச்சிநிலை. ஒரு உணர்ச்சியனுபவத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மெய்ப்பாடுகளைக் காணமுடியாது. ஒரு நல்ல கவிதையாயின் அதற்கு உயிராக ஒரு அனுபவம் அமைதல் இன்றியமையாததாகின்றது. அனுபவம் இல்லாததொன்று பாட்டாகாது, ஆகவே, இந்தப் பாட்டில் அனுபவப்பொருள் உண்டா என்பதை ஆராய்ந்து பார்க்கும்போது, அதில் அது இல்லை என்பதைத்தான் காண முடிகிறது.

புலவன் தன்னை ஒரு விளையாட்டுப் பிள்ளையாகப் பாவித்து இப்பாட்டைப் பாடியிருக்கின்ருன் என்பது பாட்டைப் படிக்கும் போது தெரிகிறது. ஆகவே, அப்பிள்ளையின் அனுபவம், மன ஒருப்பாடு, அதன் விருப்பு அல்லது வெறுப்பு முதலியன இப் பாட்டில் அமைந்திருத்தல் வேண்டும். இரண்டொரு கண்ணிகளிலே அப்பிள்ளையின் மனேநிலை புலப்படுகின்றது.

" ஆடல் வீடித னைக்கடலே—நீயும்
  அழிப்ப தழகாமோ கடலே. " என்றும்
" சிப்பி—விளையாடற் குதவும் கடலே " என்றும் கூறுவனவற்றைக் கொண்டுதான் அப்பிள்ளையின் மெய்ப்பாட்டை நாம் அறியவேண்டியிருக்கிறது. ஆடல் வீட்டை அழிக்கும் கடலில் பிள்ளைக்கு ஒரு வெறுப்புணர்ச்சி ஏற்படுதல் இயல்பாகும். இது ஒரு நல்ல பாட்டாயின் அவ்வுணர்ச்சி பாட்டு முழுவதிலும் செறிந்திருத்தல் வேண்டும். பாட்டு அவ்வாறு அமையவில்லை. முதலிலுள்ள இரண்டு செய்யுட்களிற் காணப்படும் பொருள், மனேபாவம் முதலியவற்றை நோக்கும்போது, புலவன் ஒரு பிள்ளையாக நின்று பாடவில்லை என்பது தெரிகின்றது. நெய்தற் றிணைப் பாட்டுக்கள் சிலவற்றிலே தலைவனைக் காணப்பெருத தலைவி இரவிலும் பகலிலும் உறங்காதிருத்தலும், அங்ஙனம் இருக்கும்போது கடலின் ஒலியைக் கேட்டு " நீயும் என்னைப் போலக் கவலை நிரம்பிய காரணத்தால் துயிலப்பெருதிருக்கின்ருயோ " என்று கடலைப் பார்த்துக் கூறுதலும் வழக்காருகும். அங்ஙனம் வினவுதலால் அவளுடைய துன்பம் வெளிப்படுத்தப்படுகின்றது. இரவும் பகலும் உறங்காத ஒருவருக்கு மட்டுந்தான் கடலைப்பார்த்து " நீ இரவும்பகலும் உறங்காயோ ? " என்று வினவுதற்கு உரிமையுண்டு. அங்ஙனம் வினவும்போதும் அது ஒரு பயன் கருதி—அதாவது தன்னுடைய மனேநிலையை வெளிப்படுத்துதற்பொருட்டு வினவப்படுவதாதல் வேண்டும். அங்ஙனமன்றி வாளா வினவுதலால் ஒரு பயனும் உண்டாகாது.

இனி ஓர் உணர்ச்சியனுபவத்தை ஒரு கவிதையிற் புலப்படுத்துவதென்ருல், அது சிறிது சிறிதாகப் புலப்படக்கூடிய வகையிற் செய்யுட்கள் ஒன்றன்பின் ஒன்றாக அமைதல்வேண்டும். அந்த அனுபவம் சிதைந்துவிடக்கூடிய வகையிலே செய்யுட்கள் அமைதல் பொருந்தாது. ஒரு பிள்ளையின் உணர்ச்சி நிலையை வெளிப்படுத்துதல் தான் புலவருடைய நோக்கமாயின், ஆடல் வீடதனை அழித்ததனுல் உண்டான வெறுப்புணர்ச்சிக்கு மாறுபட்ட வியப்புணர்ச்சி முதல் மூன்று செய்யுட்களிலும் அமைதல் பொருத்தமில்லை. கடலின் திரைகளைக் குதிரைப் படைக்கு ஒப்பிடுதலும், கடல் ஒலிக்கு இடிமுழக்கத்தை உவமையாகக் கூறுதலும் கவிமரபாயினும், பிள்ளையின் அனுபவத்தை வெளிப்படுத்த அவை கருவியாக அமையவில்லை. ஓடத்தை எடுத்தெறிதல், மலையை வயிற்றடக்குதல், முத்து அளித்தல், மழைக்கு மூலமாக இருத்தல், மழை நீரை வாங்கி வைத்திருத்தல் முதலியன கடலின் தொழில்கள். கடலின் பெருமையை வியந்து கூறுதற்கு அவையெல்லாம் வேண்டியவை. அவற்றைக் கூறுதல் நோக்கமாயின் இக்கவிதை ஒரு கட்டுரையாகுமன்றிக் கவிதையாகாது. அது கவிதையாயின் அப்பிள்ளையின் வெறுப்புணர்ச்சி புலப்படக்கூடிய வகையில் அக்கவிதை முழுவதும் அமைதல்வேண்டும். அங்ஙனம் அமையாதபோது அதை நாம் ஒரு நல்ல பாட்டு என்று எப்படிக் கூறுமுடியும் ?

(39ம் பக்கம் பார்க்க)

# தமிழ் மொழியை நியாயமான அளவு உபயோகித்தல்

## பிரதமர் கூறும் உறுதிமொழி

தமிழுக்கு நியாயமான அந்தஸ்து வழங்குவதுபற்றிய அரசாங்கத்தின் கொள்கையை நிர்ணயிக்கும் ஆதாரங்களை பிரதம மந்திரி அவர்கள் கடந்த வாரம் பிரதிநிதிகள் சபையில் விளக்கினார். அவையாவன :—

(1) தமிழர் ஒவ்வொருவரும் அவரது சொந்த மொழியில் உயர்தரக் கல்விவரை கற்பதற்கு அவருக்குள்ள உரிமை.

(2) தமிழர் அரசாங்க சேவைப் பரீட்சைகளில் தங்கள் சொந்த மொழியில் பரீட்சை எழுத அவர்களுக்கு உரிமை இருத்தல் வேண்டும். இவர்கள் வேலைக்கமர்த்திக் கொள்ளப்பட்ட பின்னர் ஒரு குறிப்பிட்ட கால அளவில் சிங்கள மொழியில் ஒரு கணிசமான அளவு அறிவு பெறவேண்டும்.

(3) அரசாங்கத்துக்குத் தமிழில் கடிதமெழுதவும் அதற்கான பதிலைத் தமிழில் பெற்றுக்கொள்ளவும் தமிழருக்கு உரிமை வழங்கப்படல் வேண்டும்.

(4) தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள தலத்தாபனங்கள் மத்திய அரசாங்கத்துடன் தங்கள் உத்தியோக பூர்வமான அலுவல்களைத் தமிழ் மொழியில் நடாத்துவதற்கு அவற்றிற்கு அதிகாரம்வழங்கப்படல் வேண்டும்.

பிரதம மந்திரி அவர்களின் சொற்பொழிவின் சாரம் வருமாறு :—

சிங்கள மொழியை இந்நாட்டின் உத்தியோக மொழியாகப் பிரகடனப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்ட போதிலும், இச்சட்டத்தை அமுல் நடாத்துவதில், சிங்கள மொழியல்லாத பிற மொழியை உபயோகிப்பவர்களுக்கு அநீதி இழைக்கவோ அனுவசியமான கஷ்டத்தையுண்டு பண்ணவோ அரசாங்கக் கட்சி எப்பொழுதும் உத்தேசித்திருக்கவில்லை என்பதை இச்சபை அங்கத்தவர்களும் நாட்டு மக்களும் நன்கறிவர்.

சிங்கள மொழியை நாட்டின் உத்தியோக மொழியாகப் பிரகடனப்படுத்துவது தங்கள் உத்தேசமாக இருந்தபோதிலும் தமிழ் மொழிக்கும் நியாயமான அந்தஸ்து வழங்கப்படுமென கடந்த பொதுத் தேர்தலுக்கு முன் அரசாங்கக் கட்சி உறுதியளித்த தென்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ் மொழிக்குரிய சரியான அந்தஸ்தை எவ்விதமாக வழங்குவதென்பதை நாங்கள் பொறுத்திருந்து ஆராயவேண்டியிருந்தது.

அரசாங்கத்தின் சார்பாக ஒரு பொதுவான அறிக்கையை விடுக்கக்கூடிய நிலைமையில் நான் இருக்கிறேன். ஏனைய விவரங்கள் தொகுக்கப்பட்டு, சபை அங்கத்தவர்களும் ஏனையோரும் தங்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட சந்தர்ப்பமளிக்கப்படும்.

தமிழ் மொழிக்கு நியாயமான அந்தஸ்து வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுவது போன்ற விஷயங்கள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிர்வாகத் துறையில் சில வேலைகள் ஏற்கெனவே செய்யப்பட்டுவருகின்றன, உதாரணமாக, அரசாங்கப் பாடசாலைகளிலோ உதவிபெறும் பாடசாலைகளிலோ போதனு மொழி தமிழ் மொழியாக இருத்தலை அரசாங்கம் எப்பொழுதும் தடைசெய்ய வில்லை. எனவே தமிழ் மொழியில் கல்வி பயின்ற ஒருவருக்கு உயர்தரக் கல்வி வரை அதே மொழியில் கற்கும் உரிமை இயற்கையாகவே வழங்கப்படுகின்றது.

பல்கலைக் கழக அதிகாரிகளுடன் நாங்கள் நடாத்திய பேச்சுவார்த்தைகளில், சுயமொழி உபயோகிக்கப்படும் கலாபீடங்களில் தமிழ் மொழியும் உபயோகிக்கப்படல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது சபை அங்கத்தவர்களுக்கும் பொது மக்களுக்கும் ஞாபகமிருக்கலாம்.

மற்றப் பிரச்சினை கடிதம் எழுதுதல், அரச கருமங்களை நடாத்தல் முதலியவற்றைப் பற்றியது. தமிழ் மொழி போதனு மொழிகளில் ஒன்றுக ஏற்கப்பட்டிருப்பதிலிருந்து இப்பிரச்சினை கிளம்புகிறது. தமிழ் மொழியில் கல்வி கற்றவர்கள் அம்மொழியில் கடிதம் எழுதவும் பதில் பெறவும் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என்பதிலிருந்து இபபிரச்சினை எழுகிறது. ஆனுல் இவற்றைப் பற்றிச் சகல விபரங்களையும் வகுத்துக்கூற நான் முன்வரவில்லை. தமிழ் மொழியை நியாயமான முறையில் வழங்குதற்கு அரசாங்கம் மற்றவர்களின் ஆலோசனையுடன் வழிவகைகளைப் பொதுவாக எவ்விதத்தில் வகுக்கும் என்பதையே நான் எடுத்துரைக்கிறேன்.

பிறிதொரு பிரச்சினை தலத்தாபனங்கள், பிரதேச சபைகள் ஆதியன பற்றியது. தலத் தாபனங்களின் வேலைகள் இருவகையானவை. ஒன்று தலத்தாபனத்தில் ஏதாவது மொழியில் நிகழ்த்தப்படும் பேச்சுகள் பற்றியது. இது விஷயம் அவ்வச்சபையின் நிரந்தர விதிகளால் நிர்ணயிக்கப்படும். பாராளுமன்றத்திலும் இவ்வாறு நடைபெறுகிறது. மற்றவேலை மத்திய அரசாங்கத்துடன் மேற்கொள்ளப்படும் உத்தியோக பூர்வமான வேலைகள் பற்றியதும் ஒவ்வொரு தலத்தாபனமும் தனது உத்தியோக பூர்வமான வேலைகளை நடாத்துதல் பற்றியதும், தமிழ் மொழியில் உத்தியோக பூர்வமான காரியங்களை நடாத்த விரும்பும் தலத்தாபனங்கள் வட இலங்கை, கிழக்கிலங்கையிலுள்ள சிற் சில இடங்களிலேனும் அவ்வாறு நடாத்துவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்று நாம் நினைக்கிறேம்.

ஆனுல் இது விஷயத்தை நாம் மேலும் நுணுக்கமாக ஆராய வேண்டியதும் மற்றவர்களுடன் கலந்தாலோசிப்பதும் அவசியம். இப்பொழுது நான் இவ்விஷயமாகப் பேசும்போது மிகப் பொதுவான ரீதியிலேயே பேசுகிறேன்.

இத்தாபனங்களின் வேலைகள் இருவகையானவை. விவாதங்கள், கூட்டங்கள் முதலியன ஒன்று. மற்றது கடிதப்போக்குவரத்து, தலத்தாபன கரும நடவடிக்கைகள் முதலியன. கூறப்போனுல் நான்கு பிரச்சினைகள் உள்ளன. கல்விபற்றியது, அரசாங்க சேவைபற்றியது, அரசகருமங்கள்பற்றியது, தலத்தாபனம் போன்ற அமைப்புகள் பற்றியது. இந்த நான்கு துறைகளிலும் தமிழ் மொழியின் உபயோகத்தை நாம் அங்கீகரிக்க விரும்புகிறேம்,

(23 ம் பக்கம் பார்க்க)

# ஈழ நாட்டில் வருடப் பிறப்பு

(அம்பலவாணன்)

இற்றைக்கு 2,500 ஆண்டுகட்கு முன்னர் உரோகிணி ஆற்றின் கரையிலே அமைந்த கபிலவாஸ்து எனும் நகரிலே சித்தார்த்தர் அவதரித்திருப்பதை உணர்ந்த தவசிரேட்டராகிய அசித முனிவர் அந்த அற்புதக் குழந்தையைப் பார்க்க விரைந்து சென்றார். சித்தார்த்தரின் தந்தை சுத்தோதன மன்னன் அவரை வரவேற்றுத் தன் அருமைக் குழந்தையை ஆசீர்வதிக்குமாறு வேண்டினான். குழந்தையை எடுத்துவருமாறு தன் மனைவி மாயாதேவியிடம் கூறினான். மாயாதேவி குழந்தையைக் கொணர்ந்து "தவசிரேட்டரை வணங்கடா, கண்ணே!" என்றாள். குழந்தையோ தன் காலை முனிவர்பக்கம் நீட்டிக்கொண்டு மாயாதேவியின் முகத்தைப் பார்த்தது. "வணங்கடா கண்ணே முனிவரை" என்றாள் மாயாதேவி. மும்முறையும் குழந்தை சும்மாவிருந்தது. அக்குழந்தையின் தெய்வத்தன்மையை அறிந்திருந்த அசிதமுனிவர், "மன்னா! அவரை வணங்க வேண்டியவன் நானே. அவர் என்னை வணங்குவதா? இல்லை, இல்லவே யில்லை.

"மதலாய் நின்னடி மலரினை தொழுதேன்
அவனே நீயாம் ஐயம் அதற்கிலை
உண்மை ஒளியால் உள்ளிருள் போக்கி
நன்மை விளைக்கும் ஞாயிறு நீயே"

என்று கூறி வணங்கினார்.

வயது முதிர்ந்த தவசிரேட்டர் கூட பச்சிளங் குழந்தையை வணங்கித் தம் மரியாதையைச் செலுத்தினார். இதுவே பாரத நாட்டுப் பண்பு. தமிழ் நாட்டுப் பண்பும் அதுவே. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்; தந்தை தாய் பேண்; பெரியாரைத் துணைக்கொள் ஆதியாம் நீதிமொழிகள் இடித்திடித்துரைப்பதும் இதனைத்தான்.

புது வருடப் பிறப்பன்று இந்து மக்கள் யாதுசெய்தல் வேண்டுமென்பது பஞ்சாங்கத்திலே சுருக்கமாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். உதாரணமாக ஏவிளம்பி வருடப் பஞ்சாங்கத்திலுள்ள குறிப்பைக் கீழே காட்டுதும்:

ஏவிளம்பி வருஷம்: வருஷப்பிறப்புக் கருமம். இத்தினத்தில் யாவரும் வைகறையில் துயிலெழுந்து மனத்தூய்மையுடன் வழிபடுங் கடவுளைத் தியானித்துத் தாம் முன் செய்தவைகளையும் மேற் செயற்பாலவாகிய அறம் பொருள் இன்பங்களையும் சிந்தித்து, கண்ணாடி, தீபம், நிறைகுடம், தன் வலக்கை, தாய் தநதை ஆசிரியரின் பாதம், தேவதைகளின் திருவுருவம், திருமுறைப் புத்தகம், தாமரை முதலிய பூக்கள், பழவகை, மஞ்சள், குங்குமம், சந்தனம், வெற்றிலை, பாக்கு முதலிய மங்கலப் பொருட்களைத் தரிசித்து, அவசிய கருமம், தந்த சுத்தி முதலியவற்றை முடித்து, புண்ணிய காலத்தில் விதிப்படி சங்கற்பித்து, மருத்துநீர் தேய்த்து, சிரசில் புன்கிலையும், காலில் ஆலிலையும் வைத்து ஸ்நானஞ்செய்து வெள்ளை நிறமுள்ள பட்டாயினும், வெள்ளைக் கரை கறுப்புக்கரை அமைந்த ஆடையாயினும் தரித்து நீலம் முத்து முதலியவற்றாலாகிய ஆபரணம் அணிந்து, சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி தத்தம் குலதெய்வ வழிபாடு செய்து, இயன்ற தான தருமங்கள் இயற்றி, சூரியனுக்குப் பொங்கல் பூசை வழிபாடு செய்து, குரு பெற்றார் முதலிய பெரியாரை வணங்கி, அவரின் ஆசிபெற்று, உற்றார் நண்பருடன் அளவளாவி, அறுசுவை உணவுடன் வேப்பம் பூ பிட்டு முதலியவை சேர்த்தருந்தி, தாம்பூலந்தரித்து, கண்ணாடியில் முகதரிசனஞ்செய்து, புதிய வருஷ பலன்களை வாசித்தும், கேட்டும் நன்குணர்ந்து, தத்தம் சமய நூல்களைப் பாராயணஞ் செய்து, மங்களகரமாக வாழக்கடவர்—ஏவிளம்பி வருஷ வாக்கியப்பஞ்சாங்கம்.

தம்மைப் பெற்றெடுத்துத் தாலாட்டிச் சீராட்டி நித்திரை விழித்து வளர்த்தெடுத்த தாய் தந்தையரை வணங்குதல் இழிவான செயலென இக்கால இளம் பிள்ளைகள் கருதுகின்றார்கள். தாய் தந்தையர், பெரியோர் வீட்டுக்கு வருமிடத்துக் கால் நீட்டிக்கொண்டு உல்லாசமாகச் சாய்மனைக் கதிரையில் இருந்துகொண்டு சிகரெட் சுருட்டு முதலியவற்றைப் புகைப்பது நவநாகரிகமெனக் கருதுகின்றனர் இளம் வாலிபர். ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற முதுமொழிவெறும் பிதற்றுரை எனக் கருதுகின்றனர். புத்தாண்டில் புதிய உடை தரிக்கவேண்டியது அவசியமா என்று சடாவுகின்றனர். இவை காரணங்கூற முடியாத குருட்டுப் பழக்க வழக்கங்கள் என்கின்றனர் இக்கால இளங்காளைகள். பெரியாரை வணங்குவதால் நமது உள்ளத்தையே பண்படுத்துகின்றோம். ஆலய வழிபாட்டினால் நமது உள்ளத்திலே கடவுள் என்பதோர் சித்தமுண்டாகச் செய்கின்றோம். பணிவுடைமையினால் ஏற்படும் நன்மைகளைத் திருவள்ளுவர் நன்கெடுத்துக்காட்டியுள்ளார். வருடப் பிறப்பன்று பொங்கலிட்டுப் படைத்து இறைவனை வணங்கும் வழக்கம் ஈழநாட்டில் அருகிவருகின்றது. இறைவனை வழிபடுதலும் ஆலயம் செல்வதும் முன்போலக் காணப்படவில்லையென்றுதான் கூறவேண்டும்.

இந்து மக்கள் சித்திரை மாதத்து முதல் தினத்தையே புது வருடப் பிறப்புத் தினமாகக் கொண்டாடிவருகின்றார்கள். சூரியன் சித்திரை மாதத்தில் மேட இராசியில் சஞ்சரிப்பதால், அது புண்ணிய காலமாகக் கருதப்படுகின்றது. இது பொதுவாகச் சைத்திர விஷு புண்ணிய காலமெனக் கொள்ளப்படும். சித்திரை தமிழாண்டின் முதல் திங்களாகக் கருதப்படுகின்றதென்பது "சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென" எனவரும் சிலப்பதிகாரச் செய்யுளால் அறியக்கிடக்கின்றது.

இந்துக்கள் எந்த அலுவலையும் தொடங்குமிடத்து அது முட்டின்றி முடியும் பொருட்டு நல்ல நேரத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்பதில் நம்பிக்கை கொண்டிருந்தனர். எனவே புதிதாக எந்தத் தொழிலையோ, கருமத்தையோ தொடங்கும்போது, மங்களமான ஓரையில் ஆரம்பிக்கவேண்டுமென நம்பினர். எனவே வீடுகட்டத் தொடங்குவது எப்போது நன்று, கலியாணம் பேசத் தொடங்குவது எப்போது நன்று, தாலி கட்டுவது எப்போது நன்று, கோயில் கட்டத்தொடங்குவது எப்போது நன்று, உழத் தொடங்குவது எப்போது நன்று என்று இவ்வாறு இந்துமக்கள் தங்கள் கிரியைகளுக்கும் சடங்குகளுக்கும் நல்ல நேரத்தை வகுப்பதில் பூரண நம்பிக்கை கொண்டிருந்தனர். இதற்கு உதவிபுரியவே கிராமத்தில் புரோகிதர்களும் வானநூலறிஞரும், குறிநூலறிஞரும் தோன்றினர்,

இப்பொழுது இவர்கள் பஞ்சாங்கம் என்ற பெயருடன் ஒரு நூலை ஆண்டுதோறும் வெளியிடுவதால் அவர்களின் வீடுகளுக்குச் சென்று அலையாமல் அந்நூலின் துணைகொண்டே தங்கள் தேவைகளுக்கேற்ற மங்களகரமான நேரத்தை பொதுமக்கள் தெரிந்துகொள்ளக் கூடியதாக விருக்கின்றது. பஞ்சாங்கம் என்பது **திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம்** என்ற ஐந்து உறுப்புக்களையுடைய காலக் குறிப்பு நூலாகும்.

கிரகங்களுக்கெல்லாம் அதிபதி சூரியன் என்று இந்துக்கள் கொள்கின்றார்கள். யக்ஞங்கள், தர்ப்பணங்கள் முதலியன யாவும் சூரியன் மூலமாகத் தேவதைகளுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன. சூரியனது சாரத்தை அல்லது இயக்கத்தை யொட்டியே முக்கியமான சமயங்களெல்லாம் வைதிக விசேடம்பொருந்தியவை என்பதும் தேவ பூசைக்குரியவை என்பதும் இந்துக்களின் மதமாகும். எனவே சூரியோதயம், நண்பகல், சூரியாஸ்தமனம் ஆகிய மூன்று வேளைகளும் சிறப்பாக மதிக்கப்படுகின்றன. சூரியனது நித்திய கதியானது மாறுபாடடைகின்ற அயனங்களும், சூரியன் ஓர் இராசியை விட்டு மற்றோர் இராசியிற் பிரவேசிக்கிற சௌரமாதத்து முதல் தேதியும் கிரகண தினங்களும் அவ்வாறே சிறப்பாக மதிக்கப்படுகின்றன. சூரியனுக்கு அடுத்த படியாகப் பிரதான இடம் பெறுபவன் சந்திரன். சந்திரனையும் இந்துக்கள் வழிபடுகின்றார்கள். இந்துக்களுடைய பஞ்சாங்கத்திற் கவனிக்கப் பெறுகிற ஐந்து அமிசங்களும் சூரிய சந்திரர்களின் சம்பந்தமான விடயங்களாகும்.

**திதி** யென்பது சூரியனுக்கும் சந்திரனுக்குமுள்ள தூரத்தைக் குறிக்கின்றது. அமாவாசை தினத்தில் சூரியனுஞ் சந்திரனும் ஒரே இராசியில் ஒரே நட்சத்திர மண்டலத்தில் இருக்கின்றார்கள். பௌர்ணமி தினத்தன்று அவர்கள் ஒருவருக்கொருவர் நேர் எதிராக 180° பாகைகள் விலகியிருக்கிறார்கள். இவ்விரண்டு தினங்களுக்குமிடையே ஒவ்வொரு நாளும் அவர்கள் இருக்கும் நிலைதான் பஞ்சாங்கத்தில் **திதி** எனக் குறிக்கப்படுகின்றது. சூரியனுடைய அயனங்கள் உத்தராயணம், தட்சிணாயனம் என இரண்டுள. இவ்விரண்டு அயனகோளங்களும் சந்திக்கும் இடங்கள் இரண்டு உள. இந்த இரண்டு கோள சந்திகளுக்கும் **கிராந்தி பாதங்கள்** (சூரியாயன சந்திகள்) என்று பெயர். ஒரு கோள சந்தியில் பூசநட்சத்திரமும், மற்றொரு கோள சந்தியில் திருவோண நட்சத்திரமும் இருக்கின்றன. இந்த இரண்டு நட்சத்திரங்களினின்றும் சூரிய சந்திரர்கள் இருக்கும் நிலையைக் கணக்கிட்டுச் சொல்வதே **யோகம்** எனப்படுவது. **யோகம்** என்னவென்று தெரிந்து கொள்வதற்கு மேற்சொல்லிய கோள சந்திர நட்சத்திரங்களிலிருந்து சூரிய சந்திரர்கள் சஞ்சரிக்கும் நட்சத்திரங்களை எண்ணித் தொகுக்க வேண்டும்.

தினத்துக்குரிய **நட்சத்திரமாவது** அந்தத் தினத்திற் சந்திரன் சஞ்சரிக்கும் தாராகணம். **வாரம்** என்பது அந்தத் தினத்திற்கு அதிபதியாகிய கிரமத்தைக் குறிக்கின்றது. கரணம் என்பதும் காலத்தைப் பாகுபடுத்திக் காட்டுவதற்குப் பயன்படுவது. இது பவம், கௌலவம், கைதுலம், கரசை, வணிசை, பத்திரை, சகுனி, சதுஷ்பாதம், நாகவம் கிமித்துக்கினம் என பதினொன்றாக வகுக்கப்பட்டுள்ளது. உற்று நோக்குமிடத்து காலத்தை யளக்கும் கருவி யென்பது மக்கள் பாவனை செய்துகொண்ட தொன்றாகும்.

திதி இன்னதென்று தெரிவதனால் இலக்குமியின் அருளுக்குப் பாத்திரராகிறோம். வாரம் இன்னதென்று தெரிவது ஆயுள் விருத்திக்கு அனுகூலமாகும். நட்சத்திரம் இன்னதென்று தெரிந்துகொள்வதனால் பாவம் தொலையும்; யோகம் இன்னதென்று தெரிந்து கொள்வதனால் நோய் தீரும்; கரணம் இன்னதென்று தெரிந்துகொள்வதனால் காரியசித்தியுண்டாகும் என்று வடமொழிச் சுலோகம் ஒன்று குறிப்பிடுகின்றது.

பஞ்சாங்கப் பிரதிகள் இப்பொழுது பல்லாயிரக் கணக்காக விற்பனையாகின்றன. ஆனால் அச்சியந்திரம் ஏற்படுவதற்கு முன்னர் பனையோலைகளில் இவற்றை எழுதிவைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனவே கிராமத்திலுள்ள புரோகிதர் மாத்திரம் ஒரு பிரதி வைத்திருந்தார். எனவே ஒரு திருவிழாவைப்பற்றியோ விரதத்தைப்பற்றியோ, திவசத்தைப்பற்றியோ அறிவிக்கும் பொறுப்பு கிராமத்திலுள்ள தலைமைப் புரோகிதருக்கிருந்தது. கிராமத்திலுள்ள மக்கள் புதுவருடப் பிறப்பன்று புத்தாண்டு தங்கட்குத் தரக்கூடிய இலாப நட்டங்களை அறிய விரும்பினார்கள். இவ்வாண்டில் கால மழை பெய்யுமா! விவசாயம் விருத்தி யடையுமா? ஆடு மாடுகள் விருத்தியடையுமா? பிள்ளை குட்டிகள் பெருகுமா? ஒன்றின் ஞோரன்னவற்றை யெல்லாம் அறிய விரும்பினார்கள். இவற்றையெல்லாம் கணித்து அறிந்து புது வருடப் பிறப்பன்று கோயிற் சந்நிதானத்திலே தலைமைப் புரோகிதர் பொதுமக்கள் பலரும் தெரிந்து கொள்ளும் பொருட்டு எடுத்துச் சொல்லும் வழக்கம் ஏற்படலாயிற்று.

இராமபிரான் இலங்கைக்கு வந்து இராவணனைக் கொன்று வெற்றிமாலை சூடி பெருங் கீர்த்தியுடன் அயோத்திமா நகரில் காலடிவைத்தது சித்திரை வருடப் பிறப்பன்றாகும் என்றதனாலும் இத்தினம் முக்யத்வம் வாய்ந்த தினமாகக் கருதப்படுகின்றது. வருடப் பிறப்பன்று மக்கள் தம் சுற்றத்தவர் அயலவர் வீடுகட்குச் சென்று சிற்றுண்டி யருந்தி தாம்பூலம் தரித்துச் சுகம் விசாரித்துத் திரும்புவது வழக்கம். வருடப் பிறப்புத் தினத்தன்று ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யாவரும் ஒரே வீட்டில் இருக்க வேண்டுமென்ற நம்பிக்கை யிருந்தமையால் வெளியூர்களுக்குச் சென்றிருப்பவர்களும் வருடப் பிறப்புத் தினத்திலாவது தங்கள் சொந்த வீட்டில் மனைவி மக்களுடன் நிற்கவிரும்புவர்.

வருடப் பிறப்பன்று வேப்பம் பூ வடகம் அல்லது வேப்பம் பூவும் சர்க்கரையும் சேர்த்து இடித்துச் செய்த உருண்டைகளை விருந்தினருக்கு அளிக்கும் வழக்கம் தமிழ் நாட்டில் சில கிராமங்களில் உண்டு. வேம்பின் சிறப்பியல்பினைத் தமிழ் நூல்களிற் பரக்கக் காணலாம். பாண்டிய அரசன் வேம்பன் வேம்பின்கண்ணியன், வேம்பின் தாரோன் எனப் பலபடப் புகழப்படுகின்றான் "சினையலர் வேம்பன் றேரானுகி" என்கின்றது சிலப்பதிகாரம். சித்திரைத் திங்களில் வேப்பமரம் கொத்துக் கொத்தாகப் பூத்திருக்கும். சோழகக்காற்றானது அவ்வழகிய பூக்களைத் தழுவி வீசிப்பின் மனிதர் உடம்பில் படுமிடத்து தீராத பிணியும் தீர்ந்துவிடுமன்றோ! வேப்பம் இலைகளை, தொற்று நோயைச் சங்கரிக்கும் ஆயுதமெனக் கண்டவர் தமிழரன்றோ ?.

தொழில் காரணமாகக் கணவன் மனைவியைவிட்டு வேற்றூர் செல்ல வேண்டியேற்பட்டது. கணவன் பிரிந்து செல்வதைச் சிறிதளவேனும் விரும்பாதவளாயிருந்த போதிலும், அவனைத் தடை செய்ய விரும்பவில்லை. அவன் எப்படியாவது விரைவில் தன் ஊருக்குத் வந்து விட்டாற் போதும் என எண்ணினாள் மனைவி. அவள் ஒரு வைத்தியரின் உதவியை நாடினாள். புறப்பட்டுச் செல்லும் பொழுது, இரவிலே புளிய மரத்தின்கீழ் படுத்துறங்கும்படியும், வீட்டுக்குத் திரும்பிவரும்

பொழுது இரவில் வேப்ப மரத்தின் கீழ் படுத்துறங்கும்படியும் கணவனிடம் சொன்னார் வைத்தியர். அதன் பிரகாரம் கணவன் புறப்பட்டுப் பிரயாணஞ் செய்தபொழுது இரவில் புளிய மரத்தின்கீழ் படுத்துறங்கியதால் அதிலிருந்து எழும் திராவகம் நிறைந்த ஒருவகைக் காற்று அவனுக்குச் சுகவீனத்தை உண்டு பண்ணியது. எனவே தான் நினைத்தவாறு அதிககாலம் பிரயாணம் செய்யாது விரைவில் வீடுதிரும்ப நேரிட்டது. திரும்பி வரும் வழியில் வேப்பமரத்தின்கீழ் அவன் படுத்துறங்கினான். அவன் தன் வீட்டுக்குத் திரும்பிவந்து சேர்ந்தபொழுது எவ்வித நோயுமில்லாதவனாய் சுகதேகியாய்க் காணப்பட்டான். வேப்பம் இலையைப் போலவே வேப்பங்கூர், வேப்பெண்ணெய் முதலியன பல நோய்களைத் தப்பாது கண்டிக்கும் மருந்தாக உபயோகிக்கப்படுகின்றன. வேப்ப மரத்தின் பிரயோசனத்தை நன்கறிந்தவர் தமிழர். தென்னிந்தியாவில் தொற்றுநோய் பரவிய வீடுகளில் வேப்பிலைகள் மக்கள் வீட்டுக் கூரைகளிற் சொருகியிருப்பதைக்காணலாம். எனவே சித்திரை வருடப் பிறப்பன்று, அக்காலத்திலே எங்கும் இலகுவாகக் கிடைக்கும் வேப்பம் பூவிலிருந்து தின்பண்டம் செய்து அளிப்பது மிகப் பொருத்தமானதே.

வேப்பம் பூ மிகவும் கசப்பானது என்பதை யாவரும் அறிவர். எனவே வேப்பம்பூ வடகமோ வேப்பம்பூவினாற்றயாரிக்கப்பட்ட உண்டியோ உருசியாக இருக்க மாட்டாது என்பது கூறாதேயமையும். எனினும் அதனைப் புதிய வருடப் பிறப்பன்று உட் கொள்ளுவதில் தமிழர்கள் ஒரு சிறந்த தத்துவார்த்தத்தை விளக்கியுள்ளார்கள். வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறி மாறி ஏற்படும். எனவே இன்பமலரையும் துன்பமலரையும் இன்முகத்துடன் வரவேற்கத் தயாராயிருத்தல் வேண்டும். இன்பம் வந்துற்ற காலை மகிழ்வதும், துன்பம் வந்துற்ற காலைத் துயருறுவதும் வேண்டா. துன்பத்திலும் இன்பம் மலரச் செய்வதே சிறந்த வாழ்க்கையாகும். எனவே புத்தாண்டில் துன்பம் வந்தாலும் நிலைகலங்காது வாழ்க்கையில் வெறுப்புக் கொள்ளாது அதனையும் அனுபவித்தே தீரவேண்டும் என்பதை நினைவூட்டுவது போல விளங்குகின்றது அந்த வேப்பம்பூ உண்டி. இறுதியில் அது நிலையான சுகத்தையே அளிக்கும் என்பதையும் கூறாமற் கூறுகின்றது.

**ஈழநாட்டில்**

தென்னிந்தியாவில் வாழும் தமிழரும் இலங்கை வாழ் தமிழரும் புதுவருடப்பிறப்பினைக் கொண்டாடுவதில் அதிக வேற்றுமையில்லை யென்றுதான் சொல்லவேண்டும். சித்திரை மாதத்தில் சோழகக்காற்று வீசுவதால், கிராமமக்கள் எட்டுமூலக் கொடி, கொக்குக்கொடி போன்ற பலவடிவக் கொடிகளைப் பறக்கவிடுவது வழக்கம். இந்தக் கொடிகளுக்கு விண்பூட்டிப் பறக்கவிடும் வழக்கம் தமிழர்கட்கே சிறப்பாக உரியதுபோலும். போர்த் தேங்காய் அடித்தல், பாக்குக் கட்டுதல், ஒற்றை இரட்டைபிடித்தல், கிளித்தட்டு, பிள்ளையார்பந்து, கிட்டி அடித்தல் முதலிய தேசிய விளையாட்டுக்கள் இப்பொழுது சிறிது சிறிதாகப் புத்துயிர் பெற்று வருகின்றன. அவ்வாறே முறுக்கு, வடை, பயற்றம் பணிகாரம், மோதகம், கொழுக்கட்டை, அதிரசம் (இது யாழ்ப்பாணத்தில் அரியதரம் எனமருவி வழங்கப்படுகின்றது) முதலிய உள்ளூர்ச் சிற்றுண்டிகளும் புதுவருடப் பிறப்பன்று தகுந்த மரியாதை பெறுகின்றன. புத்தாடையுடுத்து இளம்பெண்களும் இளைஞரும் பெரிய மரத்திலே ஊஞ்சல்கட்டி உதைந்தாடிப்பாடி மகிழ்வதும் வழக்கம். புதுவருடப் பிறப்பின் பேரழகையும் பொலிவையும் பார்த்தின்புறவேண்டுமானால் நகரத்தைவிட்டு கிராமப்புறத்துக்குத்தான் செல்லவேண்டும்.

**சிங்கள வருடப் பிறப்பு**

ஈழ நாட்டில் வசிக்கின்ற சிங்களர் பெரும்பாலும் பௌத்த சமயத்தை அநுட்டிப்பவர்கள். அவர்கள் தங்கள் பௌத்த ஆலயங்களில் விஷ்ணு, கதிர்காமக் கடவுள், பத்தினி (கண்ணகி) முதலிய தெய்வங்களை வைத்து வழிபட்டு வருகின்றனர். சிங்களப் பஞ்சாங்கத்தை எடுத்துப் பார்த்தால் வருடம் பிறக்கும் சுபநேரம், எண்ணெய் வைக்க வேண்டிய சுபநேரம், அடுப்பிலே நெருப்பு பற்றவைக்க வேண்டிய சுபநேரம், நெருப்பு பற்ற வைக்கும் போது நிற்க வேண்டிய திசை, அணிய வேண்டிய ஆடைகளின் நிறம் முதலியன யாவும் விரிவாகக் கொடுக்கப்பட்டிருத்தலைக் காணலாம். இதனால் இவ்விரு சமூகத்தினிடையே புதுவருடப் பிறப்பு வைபவங்கள் சம்பந்தமாக காணப்படும் ஒற்றுமை குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

இலங்கையில் மன்னர் ஆண்டுவந்த காலத்தில் வருடப்பிறப்பு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதென ஜோன் டொயிலி எனும் சரித்திர அறிஞர் குறிப்பிட்டுளார். வருடத்துக்கு முந்திய சில நாட்களுக்கு ராஜவைத்தியருக்கும் சோதிடருக்கும் போதிய வேலை இருக்கும். கண்டியிலுள்ள நாத தேவாலயத்தில் மருத்துநீர் தயாரிக்கப்படுவதைக் கண்காணிக்கும் வேலை இருக்கும். அதனை ஆயிரம் முட்டிகளிலிட்டு மூடி ஏனைய தேவாலயங்கட்கு அனுப்பும் வேலையை மேற்பார்வை செய்ய வேண்டிய பொறுப்பு அவருக்குண்டு. ராஜ சோதிடர் (1) புது வருடம் பிறக்கும் சுபநேரம் (2) மருத்துநீர் தேய்ப்பதற்குரிய சுப நேரம் (3) உணவு உண்பதற்குரிய சுப நேரம் (4) தொழில் ஆரம்பிப்பதற்குரிய சுப நேரம் (5) ஸ்நானஞ் செய்வதற்குரிய சுப நேரம். (6) அரசனுக்கு அன்பளிப்புச் செய்தற்கேற்ற சுப நேரம் ஆகிய இவற்றையெல்லாம் நுணுக்கமாகக் கணித்து நிரற்படுத்தி அறிவிக்க வேண்டும். ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தொழில் காரணமாகப் பிற ஊருக்குச் சென்றிருந்தாலும், வருடப்பிறப்பின் போது தம் சொந்த ஊருக்குத் திரும்பிவிடுவார்கள். கூலி வேலை செய்பவர்கள்கூட அனுமதி பெற்றுத் தம் சொந்த ஊருக்குத் திரும்பி விடுவார்கள். சிங்கள மக்களும் ஊஞ்சல் ஆடுவதில் விருப்புடையவர்களாதலின், பெரிய மரத்தில் ஊஞ்சல் கட்டி ஆடுவது வழக்கம். அவர்கள் வருடப் பிறப்பின் போது விருந்தினருக்குக் கொண்டைப்பணிகாரமும் (சிங்களத்தில் இதனை கவுன் என்பர்) பாற்புக்கையும் (பாற்சோறு) தவறாது கொடுப்பார்கள். அவர்கள் ஆஸ்மி, கொக்கிசு, பயற்றம்பணிகாரம், அதிரசம் முதலிய பணிகாரங்களைச் செய்வது வழக்கம். இதைவிட கறுப்புநிற தொதொல் என்ற ஒரு வகைச் சிற்றுண்டியும் தயாரிப்பது வழக்கம். புத்தாண்டினைப் புத்துணர்ச்சியுடன் மங்களமாக வரவேற்பதற்கு ஏற்ற சகல ஒழுங்குகளையும் அவர்கள் செய்து வந்தார்கள்.

நகரத்திற் குடியேறிய மக்கள் புதுவருடப் பிறப்பினைக் கொண்டாடுவதில் அக்கறை காட்டா திருந்த போதிலும், கிராமவாசிகள் இக்காலத்திலும் வருடப் பிறப்பினைக் குதூகலமாகக் கொண்டாடி வருகின்றார்கள். புதுவருடப் பிறப்பினை உண்மையிற் கிராமத்திற்றான் கண்டு களிக்கலாம்.

# பௌத்த காவியங்கள்

வித்வான் கி. வா. ஜகந்நாதன்

**பௌத்த சமயக் காப்பியங்களிற் பழமையானது மணிமேகலை**

சங்க காலத்தில் தமிழ்நாட்டிலே பௌத்த சமயத்தினரும் வாழ்ந்து வந்தனர். போதியாரென்பது ஒரு சங்கப் புலவர் பெயர். அவர் ஒரு பௌத்தராகவே தோற்றுகிறார். போதியென்பது பௌத்தர்கள் அரச மரத்தைக் குறிக்கும் பெயர். பௌத்த சமயத்தைச் சார்ந்த புலவர்கள் இருக்கும்போது பௌத்தசமய நூல்கள் உண்டாவதற்குத் தடையென்ன ?

விம்பசாரகதை, குண்டலகேசி என்னும் இரண்டு நூல்கள் பௌத்த சமயத்தைச் சார்ந்த காப்பியங்களென்பது இப்பொழுது தெரியவருகின்றது.

### விம்பசார கதை

விம்பசாரன் என்பவனுடைய வரலாற்றைக் கூறும் காப்பியமாக இதைக் கருதல் ஆகும். விம்பசாரன் என்பவன் மகத தேசத்து மன்னவனாக இருந்தவன். புத்தருடைய உபதேசம் பெற்றுப் பௌத்தனானவன். இக்காப்பியத்திலிருந்து ஒரு பகுதி நீலகேசி உரையில் மேற்கோளாகக் காட்டப்படுகின்றது.

"உலும்பினி வனத்து ளொண்குழைத் தேவி
வலம்படு மருங்குல் வடுநோ யாறுமல்
ஆன்றோ னவ்வழித் தோன்றிய ஞதலின்
ஈன்றோ ளேழானா ளின்னுயிர் வைத்தாள்"

என்பது அப்பகுதி. அதன் கீழ் உரையாசிரியர் "என்பது பிம்பிசாரகதை யென்னும் காவ்யம். பௌத்தருடையது" என்று குறித்துள்ளார்.

இங்கே கூறப்பட்டுள்ள பகுதியில் புத்தர் பிறந்த ஏழாம் நாள் அவருடைய தாய் இறந்தாளென்ற செய்தி சொல்லப்பட்டுள்ளது. இதைக் கொண்டு, புத்தருடைய வரலாறும் இக்காப்பியத்தின் கண் விரவி அமைந்திருந்ததென்று கொள்ளவும் இடமுண்டு. மேற்காட்டிய பகுதி ஆசிரிய அடிகளால் அமைந்தது. அது கொண்டு ஏனைய பகுதிகளும் ஆசிரியப்பாக்களால் ஆனவை என்று கொள்ளுதலில் தவறென்றும் இல்லை. உதயணன் கதை, கலியாணன் கதை யென்ற கதைகள் இரண்டும் அத்தகையன வேயாதல் அறிதற்குரியது.

### குண்டலகேசி

பௌத்தசமயக் காப்பியங்களுள் ஒன்றாகிய குண்டலகேசி விருத்தயாப்பால் ஆனது. இதற்குக் குண்டலகேசி விருத்தமென்றே ஒரு பெயர் உண்டென்று தெரியவருகின்றது. இதன் யாப்பு முறையால் இது சங்ககாலத்துக்குப் பிற்பட்டதென்பது போதரும். இது வாத நூல்களில் ஒன்றாக யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரால் எண்ணப்படுகின்றது. "தருக்கமாவன, ஏகாந்தமும் அநேகாந்தமும் என்பன: அவை குண்டல நீல பிங்கல அஞ்சன கால தரிசன தத்துவ கேசிகளினும் சாங்கிய முதலிய ஆறு தரிசனங்களினும் கண்டுகொள்க".

அன்றியும், நீலகேசியில் குண்டலகேசிச் செய்யுட்களிலுள்ள கருத்துக்கள் பல மறுக்கப்பட்டிருக்கின்றன. இன்ன செய்யுளை அநுவதித்தவாறென்று நீலகேசியுரையிற் கண்ட பல செய்யுட்களின் முதற் குறிப்புக்கள் குண்டலகேசிச் செய்யுட்களைக் குறிக்கின்றனவென்பதில் ஐயமில்லை.

நீலகேசி உரையில், குண்டலகேசியின் வரலாறு பின்வருமாறு கூறப்படுகின்றது :—

குண்டலகேசி யென்பாள் ஒரு வைசிய கன்னிகை: இவள் ஒரு நாள் பிராஸாதஸ்தலத்து விளையாடுகின்றாளாக, ஒரு கிதவைசியபுத்ரன் காளன் என்பான், இவன் புத்த தரிசனங் கொண்டு பல்வழியுஞ் சோரவிருத்தி பண்ணிச் செல்வானை அரசன் வதிக்கவென்று ஏவச் சிறைப்பட்டுப் போகின்றானை முன் சொன்ன குண்டலகேசி கண்டுகாம பரவசையாக, அதனை அறிந்து அவளுடைய பிதா ராஜாவைக் கண்டு யாதானும் ஒருபாயத்தால் மீட்டு இவனுக்குக் குண்டலகேசி யென்னும் கன்னிகையினை விவாக விதியாற் கொடுத்து இனிது செல்கின்ற காலத்து, ஒரு நாள் பிரணயகலகத்து நர்மோக்தி முகத்தால், நீ கள்வனன்றே யென்று குண்டலகேசி சொல்லக் காளனும் தன் உள்ளத்தே சினங்கொண்டு, பின்பு ஒருநாள் வித்தியா ஸாதன வியாஜத்தால், இவளைத் தனிக்கொண்டு ஒரு பருவதத் தேறி, "நீ என்னை இவ்வாறு சொல்லுதலில் யான் உன்னைக் கொல்லத் துணிந்தேன்" என்ன, குண்டலகேசியும், "தற்கொல்லியை முற்கொல்லிய வென்பவன்றே! இவனை யான் கொல்வேன்" என நினைந்து, யான் சாகின்றேனாகில் உம்மை வலங்கொண்டு சாவல்" என, அதற்கு இயைந்த காளனை வலங்கொள்கின்றாள் வரையினின்றும் வீழநூக்கினாள். நூக்கக் காளனும் புத்தஸ்மரணத்தினால் மோக்ஷித்தான். குண்டலகேசியும் பர்த்ருவிரஹ துக்கிதையாகித் துறப்பனென நினைந்து பரஸமயங்களெல்லாம் நாவல் நட்டு ஜயித்துப் பௌத்த தரிசனங் கொண்டு முக்தி பெற்றனள்.

இதனால் குண்டலகேசி என்பது ஒரு பௌத்தசமய நூலென்றும் அதனை மறுக்கவே நீலகேசி எழுந்ததென்றும் விளங்குகின்றது.

நீலகேசியிற் கண்ட செய்திகளால் குண்டலகேசி நாதகுத்தனாரென்னும் ஒருவரோடு வாதம் புரிந்தாளென்பது தெரியவருகின்றது.

புறத்திரட்டில் குண்டலகேசியிலிருந்து பல செய்யுட்கள் வந்துள்ளன.

"முன்றான் பெருமைக்க ணின்றான்முடி வெய்து காறும்
நன்றே நினைந்தான் குணமொழிந் தானற னக்கென்
றென்றானு முள்ளான் பிறர்க்கேயுறு திக்கு ழந்தான்
அன்றே யிறைவ னவன்றாள்சர ணங்க ளன்றே"

என்பது இதன் கடவுள் வாழ்த்துச் செய்யுளென்று தெரிகின்றது.

இக்காப்பியத்தின் உள்ளுறை ஒருவாறு நீலகேசி யுரையிற் சொல்லப்பட்டது. குண்டலகேசி யென்னும் ஒருத்தி பௌத்த சங்கத்தில் பிக்ஷுணியாகி இருந்தாளென்பது தேரிகாதை யென்னும் நூலால் தெரியவருகின்றது அங்கே

அவருடைய வரலாறு சொல்லப்படுகின்றது. அவ்வரலாறும் நீலகேசியிற் கண்ட வரலாறும் பெரும்பாலும் ஒன்றியிருக்கின்றன. ஆயினும், அதனுல் வேறு சில புதிய செய்திகளும் அறியப்படுகின்றன. குண்டலகேசி தன் கணவனைக் கொன்ற பின்பு, பல மதவாதிகளையும் ஜயித்துப் புத்தசமயத்துட் புக்காளென்பது நீலகேசியிற் கூறப்பட்டது. தேரிகாதையில் உள்ள வரலாறு சிறிது விரிவாக அமைந்தது :—

" கணவனைக் கொன்ற பத்திரை தன் வீடு சென்றாளில்லள். நிக்கந்தவாதிகள் கூட்டத்துப் புக்காள். அவர்கள் அவள் மயிரைக் களையச் செய்து, தம் குழுவினுட் சேர்த்துக் கொண்டனர். அவளுக்கு மீண்டும் கூந்தல் வளர்ந்தபோது அது சுருள் சுருளாக அமைந்தது. அதனுல் அவளை யாவரும் குண்டலகேசி என்று அழைக்கத் தொடங்கினர். நிக்கந்தவாதிகளின் கொள்கை முற்றும் அறிந்த பின்னர், அதனுல் மனவமைதி பெருது பல சமயவாதிகளிடத்தும் சென்று வினுவி வாதம் புரிந்து இறுதியாகச் சிராவஸ்தி நகரத்துக்கு வந்தாள். அந்நகரத்து அருகில் இருந்த ஜேதவன விகாரத்தில் புத்தர் இருந்தார். அவருடைய சிஷ்யனுகிய சாரிபுத்தனென்பன் குண்டலகேசியோடு வாதம் புரிந்து வென்று அவளுக்குப் புத்த தர்மம் உபதேசித்தான்.

புத்தர்களுடைய நூல்களுள் ஒன்ருகிய தம்மபதத்திலும் குண்டலகேசியின் வரலாறு சொல்லப்பட்டது. அது கூறப்படும் பகுதிக்குக் குண்டலகேசித் தேரிபத்து என்று பெயர். அங்கே குண்டலகேசி நிக்கந்தவாதியாக இருந்த செய்தி சொல்லப்படவில்லை.

தமிழ்க் குண்டலகேசி மேலே கூறிய தேரி காதையிற் கண்ட வரலாற்றையே ஆதாரமாகக் கொண்டு இயற்றப்பெற்றதென்பதில் ஐயமில்லை, நாதகுத்தனரென்பவர் நிக்கந்தவாதியாக இருந்தாரென்றும், அவரோடு குண்டலகேசி வாதித்து அவரையும் புத்தவாதியாக்கினளென்றும் நீலகேசியுரையிற் கண்ட குறிப்புக்களால் ஊகிக்கவேண்டியிருக்கின்றது.

குண்டலகேசியின் வரலாறு இங்ஙனமாகவும், இதனை சிறிதேனும் அறியாமல் வைசிய புராணம் பாடிய புலவர் அப்புராணத்தில் 34 ம் சருக்கமாகிய " பஞ்சகாவியத் தலைவரில் காவேரி குண்டலகேசி பெற்ற சருக்கம் " என்பதில் குண்டலகேசியின் தொடர்பில்லாமலே ஒரு கதையை அமைத்திருக்கின்ருர். அதன் சுருக்கம் வருமாறு :—

சோழ அரசனும் வக்குவ மகரிஷி மரபில் உதித்த காவேரியென்னும் வைசியனும் நெருங்கிய நட்புப் பூண்டு வாழ்ந்து வந்தனர். அவ்விருவரும் எல்லாக் கலைகளிலும் தேர்ச்சி பெற்றனர். அக்காலத்தில் மதுரையை ஆண்டிருந்த பாண்டிய அரசனும் அங்ஙனமே கலைகள் யாவற்றிலும் சிறந்துவிளங்கினுன். செண்டாடலில் அவன் இணையற்ற திறமையை அடைந்து அதற்குரிய அடையாளமாகக் கொடியொன்றையும் வைத்துக் கொண்டான். பிறகு சோழனுக்குத் தூது அனுப்பித் தன்னேடு போர் புரிவதற்கு அறை கூவினுன். சோழன் தன் நண்பனுகிய காவேரியைப் படைகளுடன் பாண்டியன்பால் அனுப்பினுன். காவேரிக்கும் பாண்டியனுக்கும் செண்டாடற்போர் நடைபெற்றது. அதிற் காவேரி வென்ருன். பாண்டியன் தோற்ற பொருள்களை அவன் கைக்கொண்டு மீளுகையில் இடைவழியில் பாண்டியனுடைய படைத்தலைவனுகிய கொல்லத் தாயனென்பவன் மறித்துப் போர் புரிந்தான். காவேரியென்னும் வைசியன் அவனை எதிர்த்து அவன் தலையைத் துணித்து அதனைக் கொண்டு தன் ஊர் நோக்கிச் செல்லலானுன். அப்பொழுது கொல்லத்தாயனுடைய மனைவி பெருந்துயருற்று அங்கே வந்து தன் கணவன் தலையை இரந்தாள். காவேரி என்பவன் சோழ அரசன் முன் சென்று நடந்தவற்றைக் கூறினுன். பின் அரசனது ஏவலால் கொல்லாத்தாயனது தலை அவன் மனைவிக்கு அளிக்கப்பட்டது.

இந்தக் கதைக்கும் குண்டல கேசிக்கும் எள்ளளவேனும் இயைபில்லையென்பது சொல்லாமலே விளங்கும். குண்டலகேசியைப்பற்றிய செய்தியோ, அவள் பெயரோ இக்கதையில் எங்கும் காணப்படவில்லை. இவ்வாசிரியர்,

" சீராளு மன்னர் பின்னர்
செய்யமூன் ருங்கு டிக்குப்
பேராளுந் தலைவ ரானேர்
பெருமையைங் காவி யத்தின்
நேரார்குண் டலகே சிப்பேர்
நெடுநூலின் சீரு ரைத்தாம் "

என்று கூறித் திருப்தி அடைகின்ருர்.

---

## புத்தாண்டு பிறந்தது

(நடனப் பாடல்)

" செவ்வேள் "

பிறந்தது புத்தாண்டு பீடையெலாம் நீங்கிச்
சிறந்து பொலிக உலகு.

(வேறு)

சித்திரை பிறந்தது தென்றலும் எழுந்தது
செங்கதிர் ஒளிநனி சிறந்ததுபார் ;
இத்தரை புத்தெழில் பெற்றெளி பொங்கிட
இளவெயிற் காலமும் வந்ததுபார். (1)
பூங்குயில் பாடிடப் பூவைகள் பேசிடப்
பூமலர்ச் சோலைகள் பொலிவன பார் ;
பாங்குடன் வசந்தநற் பருவத்தை வரவேற்றுப்
பாரினில் உயிரெலாம் களிப்பன பார். (2)
மங்கல முழவெழ மகளிரும் மைந்தரும்
மணவினை புரிந்துளம் மகிழுவர்பார் ;
செங்கதிர்ச் செல்வற்குப் பூசையும் பொங்கலும்
செய்து தமிழர்கொண் டாடுவர்பார். (3)
பூமகள் இளநலப் பொலிவொடு தோன்றப்
புத்துயிர் பெற்றுநம் மக்களும் பொலிவர் ;
தீமைகள் எமக்கிங் கிழைப்பவர் தோற்ருர்
சித்திரை கூறுநற் செய்தியி தாகும். (4)
எங்குலம் தாழ்வுறுந் திட்டங்கள் வீழ
எம்மொழி பண்டைநற் பீடத்தி லேற
வெங்கலி மாள வையகம் வாழ
வேண்டிநாம் இறைவனை ஏத்துவமே. (5)

(வேறு)

ஏவிளம்பி யாண்டில் ஏரிகுளம் நீர்நிறையப்
பூவிலெங்கும் மாரி பொய்யாது பெய்திடுக ;
நெல்முதலாந் தானியங்கள் நிறைந்திடுக வயலெல்லாம்
செல்வ வளம் பெருகிச் செழித்திடுக நாடெல்லாம் ;
போரச்சம் போயொழிக பொதுமைநெறி மேலோங்க ;
கோரச் செய லொழிக கொடுங்கோன்மை தான்வீழ்க ;
ஒற்றுமையைப் போற்றி உலகத்தின் மாந்தர்ஒரு
சுற்றமெனச் சேர்ந்து துயரின்றி வாழ்ந்திடவே.

# கேள்விச் செவி

(சோ. சண்முகபாரதி)

முன்னொரு காலத்தில் அம்மா—சின்ன
முயலொன் றிருந்தது கேளாய்
கன்னங் கரேலென்ற வண்ணம்—தந்த
காட்டினி லேமரத் தோப்பினிலே
மத்தளந் தூக்கி உகையாம்—கானல்
மாமரம் நின்றது மற்றதன்கீழ்ப்
புத்தி லிருந்தது முயலும்—பச்சைப்
புல்லுந் தழையும் புசித்திடுமே
வானத் தெழுந்தந்த மாவும்—பற்பல
வடிவிற் கிளைகளை வைத்ததுவே
தேனொத்த பாகினைச் செய்தே—ஊறுந்
தீஞ்சுவைக் கனிகளும் பொத்தினதே
தண்ணிழற் பொந்தினில் வாழும்—முயலோ
தன்னை மறந்து துயின்றிடுமே
மண்ணகந் தன்னில் உயர்ந்த —தேவர்
வானகந் தன்னை நுகர்ந்திடுமே
காலைப் பொழுதொரு நாளே—பொன்னைக்
கக்குங் கதிரவன் கண்டிடவே
வாலுங் கிளம்ப முயலும்—ஓடி
வந்து மரத்தடி குந்தியதே
ஏதோ பொறிந்தது தலையில்—நெஞ்சம்
ஏங்கி யிடிந்தது நிலையில்
காதோ வடைத்தது கண்ணும்—புகையே
கக்கிச் சுழன்றது விண்ணும்
பாய்ந்தது பாய்ந்தது பதறி—முள்ளுப்
பற்றைகள் புற்றுகள் கதறித்
தோய்ந்தது தோய்ந்தது குருதி—வெள்ளைத்
தோலுஞ் சிவந்தது பெருகி
" உலக மழியுதே ஓஓ—இந்த
உலக மழியுதே ஓஓ
விலகிடும் விலகிடும் ஓடி—மேலே
விண்ணும் ஒடியுதே யாடி "
என்று குழறிட முயலும்—ஓலம்
எட்டெட்டுத் திக்குமே எட்ட
தின்றிடும் புல்லையும் விட்டே—செல்லுந்
திக்கற்ற மான்கன்று கேட்கும்
" அச்சப் படுவதும் ஏனோ—மெல்ல
அறைகுதி அறைகுதி ஐயா "
" நிச்சயம் உலகமின் றழியும்—நீயும்
நில்லாதே யோடிவா தம்பீ ! "
" எப்படி நீயறி வாயோ—அதையே
எடுத்துரை எடுத்துரை ஐயா "
" தொப்பென விழுந்ததே யேதோ—நானோ
தொங்கிக் குதித்தோடி வந்தேன் "
ஓடிடும் மானினைக் கண்டே—தொண்டை
உறுமியோர் பன்றி தொடரக்
காடிடங் கொண்டதோர் பசுவும்—வெள்ளைக்
கன்றுங் கரைந்துபின் னோடக்
குந்திய மந்திகு தித்தே—கேரிக்
குய்யென்று கூவியே யோட
நந்தியுங் கரடியும் நரியும்—குரைக்கும்
நாயும் புலிகளும் ஓட
மானை மறித்தன " மைந்தா—இன்று
வந்ததென் சொல்லென " வினவ
" வீணில் வினவாதீர் என்பின்—பற்றி
விரைந்து தொடர்ந்திடு வீரே
உலக மழியுதே ஓஓ—இந்த
உலக மழியுதே ஓஓ
விலகிடும் விலகிடும் ஓடி—மேலே
விண்ணும் ஒடியுதே யாடி "
என்றிடும் வார்த்தை செவியில்—சற்றே
ஏறிட விலங்கின மெல்லாம்
ஒன்றுடன் ஒன்றுபின் னாகக்—கூடி
ஓடிக் குதித்திட வெங்கும்
ஆனைகள் ஆயிரம் ஓடும்—பின்னே
ஆயிரம் புலிகளும் ஓடும்
சேனையின் வெள்ளங்கள் போலே—சுழலுஞ்
செறுபுயல் சீறுதல் போலே
திக்குகள் எட்டுஞ் சிதறக்—காடு
தேங்கிய மாக்களெல் லாமும்
துக்கஞ் சுழன்றிட நெஞ்சில்—பீதி
தொட்டிடப் பாய்ந்தன வெங்கும்
கானகம் ஆண்டிடும் ராஜன்—இந்தக்
கலகத்தைக் கண்டு நகைத்தே
வானெழுங் குன்றொன்றில் ஏறி—இங்கே
வம்மின் எல்லீருமென் றகவிக்
" கூக்குரல் போட்டுநீர் எங்குங்—கதறிக்
குலைந்திடக் காரண மென்னோ ?
" காத்திட நானிருக்கின்றேன்—நெஞ்சங்
கலங்குதல் ஒழிமின் " என்றிட்ட
கர்ச்சனை கேட்டிடும் மாக்கள்—ராஜன்
காலில் விழுந்திவை கழறும்
" அர்ச்சனை செய்துநாம் அடியேம்—நொந்தே
அறைவது கேட்குதி மன்னா !
வானம் இடியுது வாழும்—நீண்ட
மண்ணும் அழியுதிந் நேரம்
ஊனப் பொதியுடல் காக்க—எட்டி
ஓடுகின்றோ மெங்கும் ஐயா "
" நில்லுங்கள் அமைதி நிலவ—உடனே
நீக்கிடும் அச்சத்தை நெஞ்சில்
சொல்லுங்கள் பீதியை யின்று—வீணே
தொடக்கிய தோழனிங் காரோ ?
யானைகள் யாதுரைக் கின்றீர் ? "—" அந்தோ !
யாருமில எங்கள் அரசே !
பூனைகள் சொல்லின வானம்—கீழே
பொறிந்தது பூமியில் " என்றே
பூனைகள் யாது புகல்வீர் ? "—" ஐயோ !
புலிகள் புலம்பின ஓடி
" மலைகள் நடுங்கின " வென்றே—தத்தம்
வாயிற் குரைத்தன கேட்டோம் "
" புலிகள்நீர் என்ன புகல்வீர் "—" மன்னா !

(30 ம் பக்கம் பார்க்க)

1**—J. N. B 65300 (5/57)

# கைத்தறி நெசவுத் துணியும் மில்தறி நெசவுத் துணியும்

கடந்த பங்குனி மாதம் யாழ்ப்பாண மாதர் முன்னேற்றச் சங்கச் சம்மேளனம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற பொழுது, **நவாலி மாதர் முன்னேற்றச் சங்கம்** ஒழுங்குசெய்து நடாத்திய சம்பாஷணை கீழே தரப்படுகின்றது. இதில் **செல்வி நல்லதம்பி பகவதியும், செல்வி செல்லப்பா சிவகுணநாயகியும்** பங்குபற்றினர். இலங்கை மக்கள் உள்ளூர்த் துணிகளை ஆதரிக்க வேண்டுமென்ற பொருள் பற்றி ஆழ்ந்த கருத்துக்களை எடுத்துக் காட்டியிருக்கின்றனர். புது வருஷப்பிறப்பின்போதாவது உள்ளூர்ப்புடவையை உபயோகிப்பது விரும்பத்தக்கது.

**கமலா :** விமலா இன்று உமது முகத்தில் என்றுமில்லா ஆனந்தம் நிறைந்திருக்கின்றதே. இதன் காரணம் யாது? நீர் இப்பொழுது ஆனந்தமாக எங்கே செல்கின்றீர்?

**விமலா :** கமலா இன்று ஏதோ மாபெரும் சம்மேளனமொன்றை மாதர் சங்கத்தினர் இராமநாதன் கல்லூரியில் நடாத்தப் போகிறார்கள் என அறிந்தேன். அதனைப் பார்க்கலாமென்னும் நோக்கத்தோடு புறப்பட்டேன். நீரும் என்னுடன் கூடவருகின்றீரா?

**கமலா :** ஆம் விமலா, நானும் உம்முடன் கூட்டத்திற்கு வரச் சம்மதம். அது நிற்க, இப்போது சுதேசிவாரம் கைத்தறி இயக்கம் என்றெல்லாம் மக்கள் பேசுகின்றார்களே, இதைப் பற்றி உமக்கு என்ன தெரியும். அதைத் தயை புரிந்து எனக்குச் சற்றே விளக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

**விமலா :** பல நூற்றாண்டு காலமாக அடிமைத்தளையென்னும் இரும்பு விலங்கால் பூட்டப்பட்டிருந்த நம் நாடு இன்று விடுதலை பெற்றுள்ளதை நீர் அறிவீர் அல்லவா? நம் நாடு அந்நியர் ஆதிக்கத்திலிருக்கும் பொழுது நாம் அந்நிய நாட்டுப் பொருட்களையே பெரும்பாலும் எதிர்பார்த்திருந்தோம். நாடு சுதந்திரமடைந்த பிற்பாடும் நாம் நமது தேவைகட்கு அயல் நாடுகளை நம்பியிருக்கும் அவலநிலையை ஒழித்துக்கட்டி நாடு பொருளாதார வளம் எய்துதற்குரிய வழிவகைகளைக் கைக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் எய்திவிட்டது. நாமே நமக்கு வேண்டிய பொருட்களை உற்பத்தி செய்து சுய தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டியவர்களாயிருக்கின்றோம். நம் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சுதேசப் பொருட்களை உபயோகிக்கும்படி பிரசாரஞ் செய்து மக்களின் உணர்ச்சியைத் தட்டி யெழுப்பி ஊக்குவதற்காகக் கொண்டாடப்பெறும் வாரம் சுதேசிவாரமாகும். இனி கைத்தறி இயக்க மென்றால் நம் நாட்டிலே கைத்தறி மூலம் நெய்யும் நெசவுக்கு ஊக்கமூட்டுதலும் அத்துணிகளைச் சுதேச மக்கள் உபயோகிக்கும்படி செய்தலுமாகிய இயக்கமாகும்.

**கமலா :** என்ன விமலா! நீர் சொல்வது எனக்குப் புரியவில்லை. நாடு சுதந்திரமடைந்ததற்காக ஏன் கைத்தறி இயக்கத்தை அமுல் நடத்த வேண்டும். எம்முடைய பணத்தைக் கொடுத்துத்தானே நாம் பொருட்களை வாங்குகின்றோம். அது சுதேச பொருளாயிருந்தாலென்ன அன்றி அந்நிய நாட்டுப் பொருளாயிருப்பினென்? எமக்கு அதைப் பற்றிய கவலை எதற்கு? நமது பணத்திற்குத் தக்க பொருள் கிடைத்தால் நமக்குச் சரிதானே.

**விமலா :** கமலா! நீர் கூறுவதை நோக்கினால் உமது உள்ளத்தில் சுயநல மனப்பான்மை தான் நிறைந்துள்ளதாகத் தெரிகின்றது. பொது நலம் சிறிதளவாவது கலந்துள்ளதாகத் தெரியவில்லை. இன்று நம்நாட்டு மக்களில் வேளைச் சோற்றுக்கு வழியின்றித் தவிப்போர் எத்தனைபேர்? உத்தியோகம் பார்க்க விரும்பி ஓரளவு கல்வியைக் கற்றுவிட்டு ஒரு வேலையுமின்றி அலையும் வாலிபரினதும் நங்கையரினதும் தொகை எண்ணவுங் கூடுமா? **பால்ய வயதிலே மாங்கல்யம் இழந்து விதவைகளாகத் திரிவோர் எத்தனை பேர்?** ஐயையோ இவர்களின் வாழ்க்கையை நினைத்துப் பார்க்கவே பரிதாபமாயிருக்கின்றது. இவர்களுக்கு வாழ்வளித்துக் கைதூக்கி விடுவது நம்போன்ற படித்த பெண்மணிகளின் கடனன்றோ! இன்று நம் நாட்டிலே தலைதூக்கியுள்ள ஒரு முக்கிய பிரச்சினை வேலையில்லாத் திண்டாட்டம். **இப் பயங்கரப்பேயை ஓட்டுதற்குரிய வழிகளில் ஒன்று கைத்தறி நெசவை ஆரம்பிப்பதும் அதன்மூலம் மக்களுக்கு வேலை தேடிக் கொடுப்பதுமாகும்.**

மில் தறியிலே ஆடை நெய்யும்பொழுது ஒரே நேரத்தில் இரு மில்களை மேற்பார்வை செய்வதற்கு ஒரு மனிதன் தேவைப்படுகிறான். ஆனால் கைத்தறி ஒன்றில் வேலை செய்வதற்கோவெனின் நால்வர் தேவைப் படுகின்றனர். இந்த ரீதியில் நூறு மில்தறியையும் நூறு கைத்தறியையும் எடுத்துக் கொள்வோமாயின் முறையே 50 மனிதருக்கும் 400 மனிதருக்கும் வேலை கிடைக்கின்றது. எனவே கைத்தறியினால் மில்லினும் பார்க்க 350 தொழிலாளர் மேலதிகமாக வேலை செய்கின்றனர். ஆகவே 850 பேரின் வேலையில்லாத திண்டாட்டம் நீங்கி அவர்களின் சீவனத்திற்கு வழி பிறக்கின்றதல்லவா? நீங்கள் அந்நிய நாட்டுத் துணியை வாங்கி உபயோகித்தால் நம் நாட்டில் கைத்தறியில் வேலை செய்வோர் தங்கள் துணிகளை யாருக்கு விற்பது? இதனால் அவர்கள் தமது தொழிலைக் கைவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமன்றோ. அவ்வாறாயின் நம் நாட்டு ஏழை மக்களின் கதி என்னாவது?

**கமலா :** என்ன விமலா! நீர் பெரிய வேதாந்த மெல்லாம் பேசுகின்றீரே! உம்போன்ற ஒரு சிலர் மாத்திரம் கைத்தறி நெசவுத் துணியை ஆதரித்தால் அதனால் அத் தொழில் முன்னேறி விடுமா? நம் நாட்டு மக்களிற் பெரும்பாலோர் விரும்புவது எந்தத் துணியை? மில் துணியைத்தானே யாவரும் விரும்புகின்றனர். மில் துணி கண்ணுக்குக் கவர்ச்சியாக இருக்கின்றது. மெல்லியதாக இருக்கின்றது. ஆனால் கைத்தறித் துணியோ வெனின் மிகவும் பாரமுள்ளதாக இருக்கின்றது. மென்மையின்றிக் கரடு முரடாக இருக்கின்றது. துவைத்துக் காயவிட்டாலும் அதிலுள்ள ஈரம் உலர நான்கு நாட்கள் செல்லும். மில் துணியின் பெருமை இவ்வாறிருக்க கைத்தறி ஆடையை அணியுங்கள் என்று நீர் செய்யும் பிரசாரத்தையும் உங்கள் கைத்தறி இயக்கத்தையும் ஏற்றுக்கொள்ள யாரால் முடியும்?

**விமலா :** மில் துணியினும் பார்க்கக் கைத்தறித்துணி ஓரளவுக்கு அழகிற் குறைந்ததாக இருக்கலாம். **காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு, குரங்குக்கும் தன் குட்டி பொன் குட்டி என்பார்களே!** இவற்றை நீர் அறியீரா? **ஒரு தாய் துரதிர்ஷ்ட வசமாக ஓர் அவலட்சணமான மகவைப் பெற்றால் அக்குழவியைக் கைவிட்டு விடுவாளா?** அத்தாயின் முன்னால் ஏனையோர் அவளது சேயை அழகில்லையென்று கூறினால் அத்தாயானவளுக்கு எவ்வளவு கோபம் வரும்?

அதேபோல இந்நாட்டு மக்களாகிய நாம், நம் நாட்டிலே உற்பத்தியான துணியை அது அழகிற் குறைந்ததாய் இருந்த போதிலும் மிக அழகுள்ளதாக நினைத்து ஆதரித்தல் வேண்டும்.

மேலும் நாம் மில் துணியை வாங்கி உபயோகிப்பதனுல் நம் நாட்டிலுள்ள பணத்தில் எத்தனையோ கோடி ரூபா வருடா வருடம் வெளிநாடுகட்குச் சென்று கொண்டிருக்கின்றது. கைத்தறித் துணி உற்பத்திக்கு ஊக்கமளித்து அதனை நம் நாட்டு மக்கள் உபயோகிப்பார்களானுல் உடையின் பொருட்டு அந்நியநாடுகட்கு வெளியேறும் பணம் நம் நாட்டிற் தங்கும். அதனுல் நாடு பொருளாதார வளத்தில் முன்னேறும். எங்கள் நாட்டிலே மில் துணியை உற்பத்தி செய்யலாமோவெனின் அதுவும் முடியாத காரியமே. இங்கே மில் வசதிகளில்லை. வெளி நாடுகளிலிருந்து தான் மில்லை வரவழைக்க வேண்டும். அதற்காக எத்தனையோ ரூபாக்கள் வெளி நாட்டுக்குச் செல்லும். சுதந்திரமடைந்த இந்திய நாட்டின் பொருளாதார வளம் மகாத்மா காந்தியின் கைராட்டை இயக்கத்தாலேயே விருத்தியடைந்தது. எனவே நம் நாட்டுப் பொருளாதாரத்தை முன்னேற்றவும் சுதேசி என்ற பெருமையோடு நம் நாட்டில் நாம் வாழவும் வேண்டுமானுல் கைத்தறித் துணியை ஆதரித்தே தீரவேண்டும். இது சரியா கமலா!

**கமலா :** விமலா, நீர் உடையின் பொருட்டு நம் நாட்டுப் பணம் அயல் நாடுகட்குச் செல்வதைக் கைத்தறி இயக்கத்தின் மூலம் தடுக்கலா மென்றும் கைத்தறி இயக்கத்தினுல் ஏழை மக்களுக்கு நன்மை ஏற்படுமென்றும் கூறினீரே! மில் துணியிலும் பார்க்கக் கைத்தறித்துணி மிக விலையாக இருக்கின்றது. கைத்தறிச்சேலை ஒன்று வாங்கும் பணத்திற்கு, மில் சேலை இரண்டு வாங்கிக் கொள்ளலாமே. ஏழை மக்களால் நம் நாட்டுப் பொருள் என்பதற்காக கைத்தறிச் சேலையை அதிக பணம் கொடுத்து வாங்க முடியுமா?

**விமலா :** நீர் விளங்காமற் சொல்லுகின்றீர் கமலா! மில்சேலை ஒன்று ஆறுமாத காலம் உபயோகிக்கமுடியுமானுல் கைத்தறிச் சேலை ஒன்று இரண்டு வருட காலங்களுக்கு நீடித்து உழைக்கும். இது நான் எனது அநுபவ வாயிலாக அறிந்த உண்மை. அப்படி நீடித்து உழைக்கும் பட்சத்தில் கைத்தறி ஆடையால் தானே ஏழைகட்கு நன்மை ஏற்படுகின்றது. கைத்தறித் துணியை வாங்கி அணிந்து பார்த்தாலன்றோ உமக்கு அதன் நன்மை விளங்கும்.

**கமலா :** ஏழைகட்கு உதவி செய்வது சுதேச உணர்ச்சி என்றெல்லாம் பேசுகின்றீர். உம்முடைய பேச்சுக்களைக் கேட்டு நடக்க யாரால் முடியும். நாமெல்லொரும் சாதாரணமாகப் படித்த பெண்கள். நாம் கைத்தறித் துணியை அணிந்து கொண்டு பொது இடங்களுக்குப் போனுல் நம்மைக் கண்ணுறும் ஏனையோர் எம்மைப் பட்டிக்காட்டார் என எள்ளி நகையாடுவார்களே. கைத்தறி ஆடை அணிவதெல்லாம் அந்தக்காலம், கண்ணுக்கழகிய ஆடை அணிவது இந்தக்காலம் என்கிறுர்களே? இதனுல் கண்ணுக்கழகான மெல்லிய மில் ஆடை அணிந்துகொண்டு சென்ருற்ருனே எம்மைப் படித்தவர்களென்றும் நாகரீகம் தெரிந்தவர்களென்றும் ஏனையோர் மதிப்பார்கள். எனவே உமது கொள்கையை அனுசரிக்க என்னுல் முடியாது.

**விமலா :** ஆகா! உமது மனப்போக்கே மிக விந்தையாயிருக்கிறது கமலா! இவ்வளவு படித்த பெண்ணுகிய நீர் இவ்வாறு கூறுவீர் என்று கனவிலும் நான் கருதவில்லை. நாகரீகம், நாகரீகம் என்று கண்மூடித்தனமாகப் போலி நாகரீகத்தைப் பின்பற்றும் தற்கால நங்கையரைப் பார்க்கையில் எனக்கு மிகவுந் துக்கமாயிருக்கின்றது. இன்றைய படித்த பெண்களிற் சிலர் நாம் படித்துவிட்டோம் என்ற மமதையினுல் பழையகால வாழ்க்கையையும் பண்டைய நம் நாட்டிற்கும் சமூகத்திற்கும் ஏற்ற நாகரீகங்களையும் வெறுக்கின்றனர். படித்த பெண்களாகிய நாம் நம் நாட்டிற்குச் சேவை செய்ய வேண்டும் என்ற உன்னத உணர்ச்சி அன்னுர் உள்ளத்தில் எழுவதில்லை. விஜய லட்சுமி பண்டிற், சரோஜினி நாயுடு போன்ற புகழ் பெற்ற பெண்மணிகளெல்லோரும் நாகரீக வாழ்க்கையை மேற்கொண்டார்களா? அன்றி நாட்டு நலனுக்காகப் பணி புரிந்தார்களா?

அவர்கள் புகழென்னும் ஏணியிற் கால் வைத்தது, அவர்களின் அறிவு ஆற்றல், உலக ஞானம், சுதேச உணர்ச்சி இவற்றினுலும் நாட்டின் நலனுக்காகப் புரிந்த பொது நலப்பணிகளாலுமே அன்றி நீர் நினைப்பது போன்று நாகரீகத்தினுலன்று. டக்கா மஸ்லீன்நெசவு தொழிலாளரின் பெருவிரல்களை கிழக்கிந்திய கொம்பனியர் ஏன் வெட்டினுர்கள்! தங்கள் மஸ்லீன் துணிகளை மஸ்லீன் தொழிலாளர்களுடன் போட்டு போட்டி விற்க முடியாமலன்றே. நாட்டின் நலம் நங்கையர்கையில் என்பது பாரதியார் பாடல். நாட்டின் பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்வதற்குப் பெண்கள் வேண்டுமென்பதற்காக நமது அரசாங்கம் அதற்கேற்ற நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகின்றது. கைத்தறி நெசவுக்கும் ஊக்கமளித்து வருகின்றது. 1957 ம் ஆண்டு முடிவதற்குள் 1,000 நெசவுப் பயிற்சி நிலையங்களை இலங்கை முழுவதிலும் ஆரம்பித்து அதில் பெண்பிள்ளைகளுக்குப் பயிற்சியளித்துக் கைத்தறி இயக்கத்தை அமுல் நடத்த வேண்டுமென்பது அரசாங்கத்தின் இரண்டாவது ஆறு வருடத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளது. இதற்காக எத்தனையோ கோடி ரூபாவை அரசாங்கம் ஒதுக்கிவிட்டுள்ளது. இப்பொழுது பல நிலையங்களைத் திறந்து அந்நிலையங்களிற் பயிற்சிபெறும் பயிற்சியாளருக்கு நன்கொடைப் பணமும் நாளொன்றுக்கு 75 சதவீதம் உபகாரமாக அளித்து வருகின்றது.

**கமலா :** சரோஜினி நாயிடு, விஜயலட்சுமி பண்டிற் இவர்கள் தாம் உமக்குத் தெரிந்த உலகப் பெண்மணிகளா? நாம் எல்லோரும் பெண்கள் இல்லையா? விஜயலட்சுமி பண்டிற் சரோஜினி நாயிடு ஆகிய இருபேரும் சுதேச உணர்ச்சியோடு நின்று பணிபுரிந்தார்களா? மற்றைய எத்தனை எத்தனை கோடிக்கணக்கான பெண்கள் இதனை விரும்பாமலிருக்கின்றுர்கள். சரோஜினி நாயிடு விஜயலட்சுமி பண்டிற் ஆகியோரைப் போல சுதேச உணர்ச்சியுள்ளவர்களாக நாமும் இருக்க வேண்டியதவசியமா?

**விமலா :** கமலா! உலகிலே சில நல்லகாரியங்களும் கெட்ட காரியங்களும் நடைபெறுவது இயல்பு. பாலும் நீரும் கலந்த கலவையில் பாலைப் பருகிக்கொண்டு நீரைக்கழித்து விடும் அன்னம் போன்று எமக்கும் பிறருக்கும் நல்லதெனக் கண்டவற்றைக் கொண்டு தீயவற்றை விலக்கல் நமது கடமையாகும். கைத்தறியினுல் தான் இந்திய நாட்டின் பொருள் வளம் பெருகியது. இந்திய நாட்டின் தேசியக் கொடியில் கைராட்டை இடம் பெற்றுள்ளது ஏனென்பதை உற்று உணர்ந்து பாரும். உலகம் போற்றும் உத்தம பிதா காந்தியடிகள் மக்கள் சுதந்திரமா

கச் சீவிக்க விரும்பினுல் கைராட்டையைக் கையிலெடுங்கள் என்று கூறிய உபதேசத்தை நீர் கேள்விப்படவில்லையா? நம் நாட்டு உடையை நாம் அணிந்து கொள்வதால் நமக்குள் ஓர் பெருமையும் சுதேசி என்ற மேலான கௌரவமும் மகிழ்ச்சியும் ஏற்படும். காந்திஜி அவர்கள் 2 வது எலிசபெத் மகாராணியின் விவாகத்தின் போது தம் கையால் நெய்யப் பட்ட மேசை விரிப்பொன்றை இராணியாருக்கு அன்பளிப்பாக அனுப்பி வைத்தார். அந்த மேசை விரிப்பு முதலாவது பரி சாகக் கணிக்கப்பட்டு இராணியாரின் மாளிகையில் உலக மக் கள் கண்பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இதை நீர் பத்தி ரிகை வாயிலாகச் சிறிது காலத்திற்கு முன் அறியவில்லையா? இது என்னத்தைக் காட்டுகின்றது. சுதேசப் பொருளின் மதிப்பையே காட்டுகின்றது.

கமலா : காந்திஜியின் காலத்தின் பிற்பாடுதானே உங்கள் கைத் தறி இயக்கம் அமுலுக்கு வந்தது விமலா! அதற்கு எத்தனை வருடங்கட்கு முன் மில் நெசவு இருந்து வந்துள்ளது. முன்பு தொடங்கிய மில் நெசவையெல்லாம் வெறுத்து இப்பொழுது சமீபத்திற் தோன்றிய கைராட் டையை வெகுவாகப் புகழுகின்றீர்களே.

விமலா : ஓகோ! நீர் மில் நெசவா முன்பு தொடங்கியதென்று கூறுகின்றீர். கி.மு. எத்தனையோ நூற்றுண்டுகட்கு முன்பு போய்ப்பாரும். அக்காலத்தில் வாழ்ந்த திருவள்ளுவநாய ஞர் எத்தொழிலை மேற்கொண்டார்? அவர் நெசவுத் தொழிலையே பாவமற்ற தொழிலாகக் கருதினர். அதனுல் அவர் தம் சீவியத்திற்கு அத் தொழிலை மேற்கொண்டார். இவர் நெசவுத் தொழிலை மேற்கொண்டு வாழ்க்கை நடத் தினுர் என்பதற்கு அவர் இயற்றிய குறள்—

**இழை நக்கி நூல் நெருடும் ஏழையறிவேனே**
**குழை நக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து.**

என்ற குறள் வெண்பாவால் அறியக்கிடக்கின்றது. அவர் செய்தது கைத்தறி நெசவையே. மனிதன் என்று ஆடை யணியத் தொடங்கினுனே அன்று தொடங்கியது கைத்தறி நெசவு என்பது ஆன்றோர் துணிபு. கைத்தறி நெசவு சரித்திர காலத்திற்கு முற்பட்டது.

இனி மில் நெசவு எப்பொழுது ஆரம்பமாயது எனப் பார்ப்போம். 17 ம், 18 ம் நூற்றுண்டுகளிலே பிரிட்டனில் கைத்தறிப் புரட்சி உண்டாயது, அக்காலத்திலேயே மில் கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதன் பின்பே மில் நெசவு ஆரம்பமாயதெனத் தற்காலச் சரித்திரம் கூறும். ஆகவே மில் நெசவினும் பார்க்கக் கைத்தறி நெசவே பண்டைப் பெருமை வாய்ந்த தென்பதை இனியாவது அறிந்து கொள்ளும். இப்பொழுதாவது கைத்தறி இயக்கத்தை நீர் ஆதரிக்கின்றீரா?

கமலா : ஆம் விமலா! நான் நீர் கூறியவற்றை யெல்லாங் கேட்டுத் தெளிந்து கொண்டேன். உம் உபதேசத்தால் என் மனத்தை மறைந்திருந்த அறியாமை யென்னும் மாயத் திரை அகன்று விட்டது. **உள்ளம் சுதேச உணர்ச்சியால் விழிப்பெய்திவிட்டது.** என் கண்களை இது காறும் மறைத் திருந்த நாகரிகம் என்னும் இருள் மறைந்து விட்டது. **ஏழை மக்களின் அன்புப்பார்வையைக் காணும் நாள் சமீபித்துவிட்டது. நாட்டின் நலனுக்குழைக்கவும் கைத்தறி உற்பத்தியைப் பெருக்கவும் நானும் கைத்தறித் துணிகளை அணிந்து ஏனைய பொதுமக்கட்கும் அதைப் பற்றிய பிரசா ரம் புரியவும் உம்முடன் ஒத்துழைக்க** முன் வருகின்றேன்.

விமலா : உமது மனம் மாறியது கண்டு எனக்கு மிக்க சந் தோஷம் கமலா! **வருங்கால நாட்டின் சுபீட்சத்திற்குப் பெண்மணிகளாய நாம் ஒத்துழைப்போமாக!** ஆடவர்க ளாகிய நம் சகோதரர்களும் எம்மோடு ஒத்துழைப் பார்களாக! அவர்களும் எங்கள் கைத்தறித்துணியை வாங்கி அணிவார்களாக! வீட்டுக்கொரு கைத்தறியை அமைப் போமாக! காந்திஜியின் கைராட்டை இயக்கம் மேலோங்கு வதாக! வாழ்க காந்தீயம்! வாழ்க கைராட்டை! வாழ்க சமுதாயம்.

---

## புத்தாண்டில் புதுவாழ்வு

(21 ம் பக்கத் தொடர்ச்சி)

என்று மேலைநாட்டு அறிஞர்கள் கூறியதை வற்புறுத்துகிறுர் தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள். ஆகவே இந்நாட்டு மங்கைய ராகிய யாமெல்லாம் ஒருங்கு சேர்ந்து இவ்வீழ நாடு செழிப் படையக் கை கொடுத்து உதவுவோமாக! இதையே நாம் நமது புத்தாண்டுத் தீர்மானமாகக் கொள்ள வேண்டும்.

ஏவிளம்பி என்று அழைக்கப்படும் இப்புது வருடம் ஏப்ரல் மாதம் 13 ம் திகதி பிற்பகல் 4.12 மணிக்குப் பிறந்துள்ளது. இச் சுபதினத்தையும் சுப வேளையையும் நாமனைவரும் வழமை போல் எதிர்பார்த்தோம். "இத் தினத்தில் யாவரும் வைகறை யில் துயில் எழுந்து, மனத் தூய்மையுடன் வழிபடும் கடவுளைத் தியானித்து, மங்கலப் பொருட்களைத் தரிசித்து, தந்த சுத்தி முதலியவற்றை முடித்துப் புண்ணிய காலத்தில் விதிப்படி சங்கற்பித்து, மருத்து நீர் ஸ்நானம் செய்து, ஆடை, ஆபரணம் அணிந்து, தத்தம் குல தெய்வ வழிபாடு செய்து, இயன்ற தான தருமங்களியற்றிச், சூரியனுக்குப் பொங்கல் பூசை வழி பாடுசெய்து, குரு, பெற்றுர் முதலிய பெரியோரை வணங்கி, அவரின் ஆசி பெற்று, உற்றுர் நண்பருடன் அளவளாவி எல்லோருடனும் சேர்ந்தருந்தித், தத்தம் சமய நூல்களைப் பாராயணம் செய்து வாழவேண்டும்" என்று பஞ்சாங்கம் எடுத்துரைக்கின்றது.

### வேற்றுமையில் ஒற்றுமை

இக்காலத்தில் பெரும்பாலானோர் மேற்கூறிய அம்சங்கள் முழுவதையும் வசதியீனங்கள் காரணமாக அநுசரிப்பதில்லை. மேலும் அநேகர் இவற்றை விரிவாகத் தெரிந்து கொள்வது மில்லை. இவை எப்படியிருந்த போதும் வருடப் பிறப்பைக் கொண்டாடும் ஆர்வம் இயற்கையாகவே யாவருக்கும் உண்டு. நம்நாட்டில் இந்து சமயத்தவர்கள் மாத்திரமன்றிப் பௌத்தர் களும் இத்தினத்தைக் கொண்டாடுகின்றனர். சிங்களப் பஞ்சாங் கத்தை எடுத்துப் பார்க்கின் வருஷம் பிறக்கும் நேரம், இதர சுப வேளைகள் ஆதியனவும், அன்றைய தினத்தில் அணிய வேண்டிய ஆடைகளின் நிறங்களும், பிறவும் ஒரே மாதிரியாக இருப்பதைக் காணலாம். மதம், மொழி, கலாசாரம் ஆகிய யாவற்றிலும் இந்து மதத்தினருக்கு வேறுபட்ட பௌத்த மதத்தினர் ஆகிய இவ்விரு மதத்தினருக்கும் இத்தகைய வேற்றுமைகளிடையே ஒற்றுமைகள் காணப்படுதல் வியப்புக்கும் ஆராய்ச்சிக்கும் உரியதாகும்.

இப்புத்தாண்டில் மக்கள் புது வாழ்வும் புத்துணர்வும் பெற வேண்டும். ஈழநாடு எண் திசையிலும் நீர் வளம், நில வளம் பெறவேண்டும். அடிமை என்ற அரக்கர் வாழ்வு அகலவேண்டும். இப்புத்தாண்டிலே அகில உலகினும் அமைதி யும், ஆனந்தமும், சுகமும், சுபிட்சமும் நிலவ வேண்டும்.

# புத்தாண்டில் புதுவாழ்வு

" விநாயகி "

ஏவிளம்பி வருடத்தில் யாவருக்கும் சகல நலன்களும் உண்டாக வேண்டு மென்று விழைகின்றோம். யாவரும் கஷ்டமற்றவர்களாய், ஒருவரை ஒருவர் நேசிப்பவர்களாய், ஊக்கமுள்ளவர்களாய் வாழ்ந்தால் ஈழநாடு மேன்மேலும் முன்னேற்றமடைந்து கொண்டே போகும். "பிறந்த நன்னாடு நற்றவ வானினும் சிறந்தது" என்பதை நாம் அனைவரும் நன்றாக உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

ஆண்டுகள் பல பிறந்து நம்மை மகிழ்வித்துக்கொண்டே செல்கின்றனவெனினும் நாம் ஒரு சில விஷயங்களில் பிற்போக்கான நிலையிலிருந்து வருகிறோமென்பதை ஓரளவுக்கு ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். எல்லாவற்றிலும் கவனம் செலுத்தும் நாம் உணவு, உடை, வீடு என்பவற்றில் சுயதேவைகளைப் பூர்த்தி செய்யாதிருப்பது ஈழத்திற்கு இழைக்கும் ஒரு பெருங் குற்றமாகும். சுதந்திரமடைந்து சுதந்திரமாகச் செயலாற்ற விரும்பும் நாம் சுயதேவைகளைப் பூர்த்தி செய்யப் பாடுபட வேண்டியது அவசியம். சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு தனி மனிதனின் விடாமுயற்சி மட்டும் போதாது. மக்களுக்குள் ஒற்றுமை நிலவ வேண்டும் என்பதைப் புத்தாண்டை வரவேற்கும் ஒவ்வொருவரும் நினைவிற் கொள்ள வேண்டும்.

### பழம்பெருமை பேசிப் பயனில்லை

தமிழ் மக்களுள் ஒற்றுமையின்மையால் தமிழினம் படும் கஷ்டங்கள் யாவருமறிந்ததே. ஒற்றுமையின்றேல் நாம் நமது உரிமையை இழப்பதுடன் செல்வம், மானம், தானம் முதலிய யாவற்றையும் இழக்க நேரிடும். இதையே கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்

"என்றும் தமிழ் மக்கள் யாவரும் ஒத்திணங்கி
ஒன்றித்து நின்றால் உயர்வுண்டாம்—அன்றெனில்
மானம் போம், செல்வம் போம்,
மானிட வாழ்விற்குரிய தானம்போம் யாவும்போம்தாழ்ந்து"

என்று பல ஆண்டுகளுக்கு முன்னரேயே ஓர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

இதை உணராத நாம் இன்றும் ஒற்றுமையுடன் முன்னேறும் நோக்கத்தைக் கடைப்பிடிக்காது நமது பழந் தமிழர் சாதித்த பழம் பெருமையை நினைத்து இறுமாப்புற்றிருக்கிறோம். நமது முன்னோர் சாதித்த வீரச்செயல்களைக் கொண்டல்லவா நாம் அவர்களை நினைவுபடுத்துகிறோம்? அதுபோல நமது பிற்காலச் சந்ததியார் நம்மைப் பெருமையுடன் நினைப்பதற்கு நாம் ஒற்றுமையுடன் ஒன்றுகூடி ஒன்றையேனும் சாதிக்க வேண்டாமா? காலத்திற்கு ஏற்ற கல்வி பயின்று நற்கொள்கைகளைக் கடைப்பிடித்து இவ்வுலகில் வாழ வேண்டாமா?

"பண்டைத் தமிழர் பழம் பெருமை பாடி இன்னும்
மண்டையுடைத்து வருந்துவதேன்—அண்டும் இக்
காலத்திற்கு ஏற்ற கல்வி கற்றுக் கடைப் பிடித்து
ஞாலத்தில் வாழ்ந்திடுவோம் நன்கு"

### உணவு விருத்தியில் ஊக்கமின்மை

செழித்த மண்ணுக்கும் சிறந்த நீரோடைகளுக்கும் திடகாத்திர வாலிபர்களுக்கும் பஞ்சமேயில்லாத ஈழவள நாட்டில் உணவு பற்றுதிருப்பது வெட்கத்திற்குரியதாகும். நம் நாட்டில் உணவு விருத்தி செய்யாமல் இருப்பது நம் முன்னோர்கள் தங்கள் காலத்தில் ஈழ நாட்டிற்குத் தேடி வைத்த "கீழைத் தேசங்களின் தானியக் களஞ்சியம்" என்ற புகழ் ஆரத்தை இகழ்வது போலாகும். அன்று அப்புகழ் ஆரத்தை அணிந்த ஈழத்தாய் இன்று தன் சொந்தப் புதல்வர்களின் ஊக்கமின்மையாலும் ஒற்றுமையின்மையாலும் கையில் ஓடேந்திப் பிறநாடுகளில் உணவுப் பிச்சையும், பணப் பிச்சையும் கேட்டு வருகிறாள். நமது தேசத்தாய் இப்படி அலைய நாம் வீணே காலம் கழிப்பது முறையன்று. படிக்கிறோம், படிக்கிறோமென்று கூறி அலைந்து அரைகுறையான படிப்புகளை முடித்துவிட்டுக் குமாஸ்தா வேலையே வேண்டுமென்று அலையும் வாலிபரின் உள்ளத்தில் தேசிய உணர்ச்சி சுடர் விட்டெரியத் தொடங்க வேண்டும்.

"வாணிகம் செய்வோம்
வயலிற் பயிர் செய்வோம்
காணரிய கைத்தொழிலும்
கண்டு செய்வோம்"

தமது கல்வியின் பயனை அவர்கள் கைத்தொழில், கமத்தொழில் மூலம் செயலில் காட்ட வேண்டும். பாமர மக்களுக்குத் தேவையான எத்தனையோ விஷயங்களுக்கு வேண்டிய பணத்தை மீதப்படுத்தும் வழியைப் படித்த மக்களே அரசாங்கத்திற்குக் காட்ட வேண்டும். ஜனப் பெருக்கம், உணவின்மை, பணக் கஷ்டம், வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பாதையில் நம் நாடு சற்றே விலகிச் செல்லப் பார்ப்பதை நாட்டு மக்களாகிய நாம் விழிப்புடன் கவனிக்க வேண்டியது அவசியம். வெள்ளம் வரும் முன் நாம் அணை கட்ட வேண்டும். "முயற்சி திருவினையாக்கும்" என்ற மூதுரை புதுவருடத்தில் நமக்கு ஊக்கமளிக்கும் சுலோகமாக அமைந்துவிட்டால் எக்கஷ்டத்தையும் இலகுவில் வெல்லலாம்.

### மங்கையரின் தலையாய கடமை

"ஒரு நாடு முன்னேறுவதும் பின்னடைவதும் அந்த நாட்டு மங்கையரிலேயே தங்கியிருக்கின்றது" என்று ஓர் ஆங்கிலப் புலவர் கூறியுள்ளார். இவ்வுலகம் பெண்களின் கையில்தான் அடங்கியுள்ளது என்கிறார் இன்னொரு பெரியவர். அதேபோல் ஈழவளநாட்டின் பெருமையும் சிறுமையும் ஈழ மங்கையரின் கைகளில்தான் தங்கியிருக்கின்றது. அவர்கள் தாம் நாட்டில் அறங்கள் வளர உதவுகின்றவர்கள். உலகம் புகழும் நற்குடி மக்களைத் தந்து உதவுகின்றார்கள். நீதி நெறி வழி நில்லா வம்பரைக்கூட நேர்வழி வரச் செய்பவர் பெண்களே! மானம் இழந்தவரை உத்தமராக்குவதும் அவளே!

மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா
பங்கயக் கைநலம் பார்த்தலவோ—இந்தப்
பாரில் அறங்கள் வளரும் அம்மா!

* * *

நீதி நெறிநில்லா வம்பருமே—நல்ல
நேர்வழி வந்திடச் செய்பவர் ஆர்?
ஓதிய மானம் இழந்தவரை—உயர்
உத்தமர் ஆக்க முயல்பவர் ஆர்?

(20ம் பக்கம் பார்க்க)

# புத்தர் காட்டிய வழி

(திரு. க. லக்ஷ்மணன் எம். ஏ.)

நம்முள் யாராவது தம் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சியனைத்தும் சிறிது தொடங்கிப் பெரிதுவரை தாம் விரும்பிய விதமே நிகழ்ந்தன ; ஏமாற்றம், தோல்வி, துன்பம் என்பனவற்றை நாம் அறிந்ததேயில்லை என்று கூறமுடியுமா ?

ஒரு வேளை முன்வினைப்பயனால் அங்ஙனம் கூறவல்லோர் ஒரு சிலர் நம்மிடையே உளரென வைத்துக்கொள்வோம். நினைத்த வற்றையெல்லாம் நினைத்தவாறு முடிக்கவல்லோருக்கே, தம் இளமையைத் தேக்கி வாழ்வை நீடிக்கச் செய்ய வேண்டுமென்ற பெரு மோகம் ஏற்படுவதும் இயல்பு.

எனவே அன்னோருக்கு வேறு துன்பமெதுவும் இல்லையெனினும், இளமையும் வனப்புங் கழிகின்றனவே என்ற ஏக்கம், முதுமை விரைந்து தம்மை அணுகுகின்றதே என்ற துக்கம், மரணம் தம்மை நிச்சயம் பற்றிக் கொள்ளப்போகின்றதே என்ற பயம் ஆகிய துன்பங்கள் இல்லாமற்போகா. அல்லாமலும் துன்பத்தை அறியாத எவரும் இன்பத்தை உணரமுடியாது. கசப்பையும் சுவைத்திருந்தாற்றான், பின் இனிப்பை இனிப்பென்று உணரமுடியும். துன்பத்தின் பக்கலிலே, துன்பத்தோடு ஒப்பிடும்போதுதான் இன்பம் இன்பமாகும். துன்பந்தான் இன்பத்தை இன்பமாக்குவது. எனவே எவன் தனக்குத் துன்பமெதுவுமில்லை யென்கின்றானோ அவனுக்கு இன்பமும் இல்லை.

பிறப்பிலே துன்பம் ; மூப்பிலே துன்பம் ; பிணியிலே துன்பம்; மரணத்திலே துன்பம். இங்ஙனம் சூழ்ந்து நிற்குந் துன்பத்தினின்று எங்ஙனமாவது தப்பிவிட வேண்டுமென்ற துடிப்பு எல்லோருக்குமுண்டு. ஆனால் துன்பம் என்பது யாது ? அதனைத் துடைக்க வழிஉண்டா ? என்று எவரும் ஆழ்ந்து சிந்திப்பதில்லை. ஆழ்ந்து சிந்திப்பதென்பது இலகுவான காரியமல்ல. ஞானிகளின் நிலையிலே தான் அது இயலும். ஞானிகளுக்கெல்லாம் ஞானியாக விளங்கத்தக்க பெருமையுடையவர் புத்தர் பெருமான். துன்பம் அவர்தம் சிந்தனையைத் தூண்டியது. அவர் சிந்தனையில் ஆழ்ந்தார். முன் எவரும் அடைந்திராத ஞானங்கள் பல அவருக்கு உதயமாயின. அவர் கண்ட மகத்தான உண்மைகள் சிலவற்றை இங்கு சுருக்கமாகக் குறிப்பிடுவோம்.

(1) துன்பம் காரணமில்லாது ஏற்படக் கூடிய வொன்றல்ல. அது தனக்குத்தானே காரணமாகக் கூடியதுமல்ல. துன்பத்துக்குக் காரணமுண்டு என்று கொண்டாற்றான் காரணத்தைக் கண்டுபிடித்து, அதனை நீக்கக் காரியமாகிய துன்பமும் நீங்கும். காரணமில்லாமலும் துன்பம் உண்டாகவல்லது எனக் கொள்ளின் அதனை நீக்க முடியாது. அதற்குக் காரணமுண்டு. ஆனால் அக்காரணம் புறத்ததல்ல. தானே தனக்குக் காரணமாயது எனக் கொள்ளினும் அதனை நீக்க முடியாது. துன்பத்துக் காரணமுண்டு எனக் கொண்டால்தான் துன்பத்தை நீக்க முடியும் என்பது இங்கு வலியுறுத்தப்படுகிறது.

இங்ஙனம் துன்பத்துக்குக் காரணம் கிடையாது என்றோ அதற்கு அதுவே காரணமென்றோ கொள்ளாது அதற்குப் புறக் காரணமுண்டு எனக் கொள்வது தத்துவஞான உலகிலே மிக அடிப்படையான ஒரு கருத்தைத் தழுவியதாகும். எப்பொருள் தனது தோற்றத்துக்கும் நிலைபேற்றுக்கும் பிற பொருள்மேல் தங்கியுள்ளதோ அப்பொருள் நித்தியமானதல்ல. அது அழிவுடையது. எது தன் தோற்றதுக்கோ நிலைபேற்றுக்கோ புறக்காரணங்களில் தங்காது. தானே தனக்குக் காரணமாயுள்ளதோ அதுவே நித்தியப் பொருள். அது அழியாது. அதனை அழிக்க முடியாது. இது நினைவிலிருத்த வேண்டிய மிக முக்கியமான ஒரு கருத்து. இத்தொடர்பில், வேதாந்தக் கொள்கைப்படி பிரமம் அல்லது பரமாத்மா மட்டுமே தனக்குத்தானே காரணமாயுள்ளது. எனவே அது ஒன்றுமே நிலையான மூலப் பொருள் என்பது குறிப்பிடத்தக்கது. அன்றியும் துன்பம் காரணமில்லாமல் எழவல்லதல்ல என்பதன் பெருநோக்கம் அதனை நீக்கலாம் என்ற நம்பிக்கையை அளிப்பதேயாகும். துன்பம் ஒரு காரியம். அதன் காரணத்தை ஆராய வேண்டும். காரணத்தை ஆராய்வதே காரியத்தை நீக்குவதற்கு முதற்படி.

(2) நம் எல்லோருக்கும் ஏற்படும் துன்பங்களின் மூலமனைத்தையும் எளிதான இரு பிரிவுள் அடக்கி விடலாம். ஒன்று விரும்பியவை கிடையாமை. மற்றது விரும்பாதவை கிடைப்பது. "வருந்தி யழைத்தாலும் வாராத வாராமை". "பொருந்துவன போமினென்றால் போகாமை." நமக்கு இத்தகைய மனைவி இத்தகைய மக்கள், இத்தகைய இல்லம் இத்தகைய வாழ்வு வேண்டுமெனக் கற்பனை பண்ணுகிறோம். பெரும்பாலும்அவை கிடைப்பதில்லை. விரும்பாதன கிடைக்கின்றன. கிடைத்த வற்றைக் கொண்டு திருப்தியடைய மனம் ஒப்புவதில்லை.

(3) துக்கோற்பத்தி பற்றிய விசாரத்தை, அதாவது துன்ப மூலம் பற்றிய ஆராய்ச்சியைக் கௌதமர் இம்மட்டில் நிறுத்தி விடவில்லை. பொருளையும் போகத்தையும் அடைய விழையும் நாம் யார் ? எமது உண்மையியல்பு என்ன ? எம்மால் விரும்பப்படுவனவும் துன்பத்துக்குப் பற்றுக்கோடாவனவுமான பொருள்கள் எத்தன்மையன ? அவற்றின் உண்மையியல்பு யாது ? என விசாரிக்கத் தலைப்பட்டது அவரது உள்ளம். இங்ஙனம் நமது விருப்பு வெறுப்புக்குக் காரணமாகும். பொருள்களையும், அவ்விருப்பு வெறுப்பைச் செய்து துன்பத்தையடையும் நம்மையும் ஆராய்ந்தோர் பலர். அவருள் வேதாந்திகள், காணப்படும் பொருள் யாவும் தோற்றம். இப்பிரபஞ்சமே ஒரு தோற்றம். இத்தோற்றம் ஒரு காரியம். இத்தோற்றத்துக்குக் காரணமான, ஆனால் இத்தோற்றத்தால் பாதிக்கப்படாத பிரமம் எனப்படும் ஒரேயொரு மூலப்பொருள் மட்டுமே உள்ளது. அதுதான் உண்மைப் பொருள் ஏனைய யாவுந் தோற்றம் என்ற முடிபுக்கு வந்தனர். இவர்களுக்கு நேர்மாறாக எழுந்தனர். உலோகாயதர் எனப்படுவோர். எந்த உலகத்தை வேதாந்திகள் தோற்ற மெனத் தள்ளினரோ அந்த உலகத்தையே உண்மைப் பொருளெனக் கொண்டனர் உலோகாயதர். எந்த ஆத்மாவை உண்மைப் பொருளென வேதாந்திகள் கொண்டனரோ அந்த ஆத்மாவைப் பொய்யெனத் தள்ளினர் உலோகாயதர். இரு பகுதியினரும் தத்தம் முடிபுகளை நிலைநாட்டத் தர்க்கத்தையும், சாமர்த்தியத்தையும் நன்கு கையாண்டிருக்கின்றனர். அவற்றின் விபரங்கள் இங்கு வேண்டாம். இவ்விரு சாராருடைய முடிவுகளும் தவறு என்பது தான் புத்தர்

கண்ட முடிபு. அவரது முடிபை, இவ்விரு கடுநிலைகளுக்கும் இடையேயுள்ள நடுநிலை என்று கூடச் சொல்லலாம். அது ஒரு மத்தியபாதை. பௌத்த மதத்தின் நாலு பெரும் உட் பிரிவுள் ஒன்றுக்கு மாத்தியமிகம் என்று பெயர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. புத்தரின் உபதேசங்களின் தத்து வத்தை உள்ளபடி எடுத்துரைப்பது மாத்தியமிகந்தான் என்பது அறிஞர் பலரின் கருத்து.

4. தோற்றங்களுக்குக் காரணமாய்த், தான் அவற்றால் பாதிக்கப்படாத, நிலையான ஒரு மூலப் பொருளுண்டு என வேதாந்திகள் கொள்வதுந் தவறு. அத்தகைய நிலை பேறு டைய மூலப் பொருள் எதுவுமில்லையென உலோகாயதர் சாதிப் பதுந் தவறு. "இருக்கின்றது" என்பதும் உண்மையல்ல. "இல்லை" யென்பதும் உண்மையல்ல. புத்தர் கருத்துப்படி "ஆகின்றது" என்பது தான் உண்மை. **நாம் ஒவ்வொருவரும் நமக்குள்ளே அழியாது நிலையாக நிற்கும் ஆத்மா என்ற அடிப் படைப் பொருள் ஒன்று இருக்கின்றது என நம்புகின்றோம்.** இத்தகைய நிலைத்த பொருள் இல்லையானால் அன்று இளைஞ யிருந்த யானே இன்று முதியவனாயுள்ளேன். அன்றைக்கும் இன்றைக்குமிடையில் நிகழ்ந்த அனுபவங்கள் அனைத்தையும் அனுபவித்தவன் யானே என்ற உணர்வு ஏற்பட இடமில்லை என நாம் கருதுகின்றோம். ஆனால் புத்தருக்கேற்பட்ட ஞானோ தயம் ஆத்மா என்ற இந்த அடிப்படைப் பொருளைத் தகர்த் தெறிந்து விட்டது. இத்தகைய பொருள் ஒன்று உண்டு எனக் கொள்வது அறியாமையின் விளைவு என்பது புத்தரின் முடிபு. இது வேதாந்தத்துக்கு நேர்மாறான ஒரு முடிவென்பது நினைவு கூருதற்குரியது. வேதாந்தத்தின் கருத்துப்படி மாற்றமடை யாத மூலப்பொருள் மாற்றமடைவது போலவும் அனுபவங் களுக்கு நிலைக்களனாவது போலவுந் தோன்றுவதே அறியாமை யின் விளைவு. ஆனால் புத்தர் கருத்தின்படி மாற்றமும் அனுப வங்களும் மட்டுமே உள்ளவை. அவை தமக்கு ஆதாரமாக, தமக்கு நிலைக்களனாக மாற்றமடையாத நிலையான மூலப் பொருள் ஒன்றையுடையனவாகத் தோன்றுவதுதான் அறி யாமை. ஆத்மா என்ற நிலையான பொருள் எதுவுமில்லை யென்ற புத்தரது இந்த வாதம் நைராத்மிய வாதம் எனப் படும். இதனை அனாத்ம வாதம் எனவும் வழங்குவதுண்டு. ஆத்மா உண்டென வாதிக்கும் வேதாந்தத்தையும், ஏனைய இந்து மதங்களையும் ஆத்ம வாதம் எனலாம்.

(5) மாற்றம் மட்டுமே உள்ளது. மாற்றத்தை யடையும் பொருளெதுவுமில்லை என்ற இந்த உண்மை ஆத்மாவுக்கு மட்டுமன்றி உலகிலுள்ள பொருள்களனைத்துக்கும் பொருந்தும். விசித்திரமான இந்த உண்மையை, புத்தர், பொருள்கள் மாறு கின்றன அழிகின்றன என நாம் பேசும்போது உண்மையில் என்ன நிகழ்கின்றது என்பதை ஊன்றி ஆராய்ந்ததன் பயனாக அடைந்தார். **எந்தப் பொருளிலும் எந்தப் பகுதியும் ஒரு கணத்துக்குமேல் நிலைப்பதில்லை. எப்பொருளுந்தோன்றிய அக்கணமே அழிந்தும் விடுகின்றது. இதற்குத்தான் கணபங்க வாதம் என்று பெயர்.** அழிவதன் முன் தன் போன்ற இன்னொன்றை ஆக்கிவிட்டு அழிகின்றது. அந்த இன்னொன் றும் அக்கணமே இன்னொன்றை ஆக்கிவிட்டுத் தான் அழியும். இந்த ஆக்கமும் அழிவும் நடக்கும் வேகத்திலே இடையீடு தோன்றாது ஒரே பொருளே தொடர்ச்சியாக நிலைத்து நிற்ப தாகத் தோன்றுகின்றது. உங்கள் கையிலிருக்கும் இக்கட்டுரை அச்சிடப்பெற்ற பத்திரிகை கணத்துக்குக் கணம் தன் போன்ற ஒன்றைத் தோற்று வித்துவிட்டுத் தான் மறைந்து விடுகின்றது. வாசிக்க எடுத்த பத்திரிகையல்ல வாசித்து முடியும்போது கையி லிருப்பது. நீங்களும் அப்படித்தான் வாசிப்பைத் தொடங்கின வர் அல்ல வாசிப்பை முடிப்பவர். ஆக ஒன்று இன்னொன்று ஆதல்; அது தன்போன்ற இன்னொன்றாதல் ஆகிய இந்த ஆதலேமேலே குறிப்பிடப்பட்ட "ஆகின்றது." இடையறாது நிகழ் ந்து கொண்டிருக்கும் இவ்வாக்க அழிவின் விளைவுதான் இப் பிரபஞ்சம்.

(6) இந்த ரீதியிலே சிந்திக்கின் துன்பம் என்ற பொருளோ, அதனைத் துய்ப்போன் என்ற பொருளோ கிடையாது என்ற நிலையில் போய் முடியும். நிகழ்ச்சிகளின் கோவை (இதனைப் பௌத்தர் "சந்தானம்" என்பர்) மட்டுமே உளது. இச் சந்தானத்திலே ஒன்று தன் போன்ற மற்றொன்றைக் தோற்று விப்பதன் காரணங்களை அறிந்தால் கோவையை அறுக்கலாம். அறுந்தால் துன்பமும் நீங்கும். அந்த நிலை பௌத்த மதத் தில் நிர்வாணமெனப்படும்.

(7) இவற்றைக் கொள்கையளவில் அறிவது ஓரளவு இலகு. ஆனால் அனுபவமாக உணர்வது புத்தர் போன்ற ஞானிகளாலே யே இயலும். ஏனையோருக்கு இது கைவருவது எளிதல்ல. ஏனையோரும் சரியான சீலம், சரியான ஞானம், சரியான நிட்டைபோன்ற எண்வகை நியமங்களின் மூலம் நிர்வாண— நிலையை எய்தலாம் எனப் பௌத்தம் உபதேசிக்கின்றது.

இங்கு மிகச் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்ட பௌத்த மத முடிவுகளைப் படிப்படியாக அடையும் தர்க்க ரீதிகளையும் விவர நுட்பங்களையும் அம்முடிவுகள் பற்றிய வேறுபட்ட விளக்கங்களை யும் இச்சிறு கட்டுரையில் காட்டுதல் இயலாது.

(8) விசாக நன்னாளே புத்தர் பெருமான் ஞானோதயம் பெற்ற நாள். அவர் தோன்றிய நாளும் மறைந்த நாளும் அதுவே என்பர். இம்முப்பெரு நிகழ்ச்சிகளும் ஒருங்கு பொருந்திய இந்த நன்னாளிலே இம்மகானின் உபதேசங்களை நாம் சிந்தித் துப் பயனடைய விரும்புவது இயல்பே.

---

## தமிழ் மொழியை நியாயமான......

(11ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நான்குமே பிரதான பிரிவுகள். ஆனால் வேறு பல உப பிரிவுகள் எதிர்காலத்தில் தோன்றும். நான் வெறுமனே நான்கை மட்டும் இங்கு குறிப்பிட்டேன்.

வாக்காளர் இடாப்புப் பற்றி தேர்தல் கமிட்டியின் பெரும் பான்மை அங்கத்தினர் ஒரு சிபார்சு செய்திருக்கின்றனர். ஒரு உத்தியோக பூர்வமான பிரதி உத்தியோக மொழியில் இருக்கும். ஆனால் தமிழ்ப் பிரதேசங்களில் வசிப்பவர்களின் நன்மைக்காகச் சில பிரதிகளைத் தமிழ் மொழியில் வைத்திருப்போம்.

**சுருக்கமாகக் கூறினால் சிங்களத்தை உத்தியோக பூர்வமான மொழியாக ஏற்கும் அதே சமயத்தில் சிங்களம் அறியாதார் துன் பத்திற்கு ஆளாகக் கூடாதென்பதே அரசாங்கத்தின் கொள்கை.**

எதிர்க் கட்சியிலுள்ள எனது கௌரவ நண்பர்களில் சிலர் தீவிரமான கருத்துகளை உடையவர்கள், இருதரப்பிலும் தீவிர வாதிகள் உள்ளனர். இவ்விஷயங்களைப்பற்றி பகுத்தறிவுக் கொத்த நியாயமான கொள்கையை நாம் அனுஷ்டிக்கவேண் டும். சிங்களம் உத்தியோக மொழியாகப் பிரகடனம் செய்யப் பட்டிருப்பது உண்மைதான். இப்பொழுது அரசாங்கம் இந் நடவடிக்கைகளை எடுக்க உத்தேசித்துள்ளது. எல்லோருக்கும் ஆலோசனைகள் கூற இப்பொழுது சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

நாங்கள் செய்ய உத்தேசித்திருப்பதைப்பற்றி ஓரளவு பொது வாக நான் இங்கே விளக்கியுள்ளேன்,

# புத்த ஜாதகம்

## பௌத்தமதம் தமிழ் நாட்டிற் செல்வாக்குப் பெற்றிருந்த காலம்

(குல. சபாநாதன்)

தோற்றுவாய்

அரியேறு முன்னுயர்த்த வாதியான் வண்டின்
புரியேறும் போதி நிழற்கீப்—பெரியோன்
அடித்தா மரைமலரை யன்போடுஞ் சென்று
பிடித்தார் பிறவார் பெயர்ந்து (1)

போதி நீழற்
சோதி பாதம்
காத லால்நின்
றேதல் நன்றே! (2)

போதிமேவினை! புன்மை அகற்றினை
சோதி வானவ தொழ எழுந்தருளினை
ஆதி நாத! நின் அடியினை பரவுதும்!

புத்தர் பலவகைப் பிறப்புக்களையும் கருணை மிகுதியால் எடுத்தார் என்று புத்த ஜாதகக் கதைகள் கூறுகின்றன. புத்தருடைய பழம் பிறப்புக் கதைகள் புத்த ஜாதகம் எனப்படும். இக்கதைகளுட் பல தமிழ் நாட்டிலும் வழங்கி வந்தன என்பது மணிமேகலை, நீலகேசி யுரை, வீரசோழியவுரை முதலியவற்ருல் நன்கு புலப்படுகின்றது. புத்த ஜாதகக் கதைகளை அறியாதிருப்பின் மேற்கூறிய நூல்களுள் ஆங்காங்கே குறிக்கப்பட்ட பழம் பிறப்புக் குறிப்புக்களின் பொருள் நன்கு புலப்படாது. தமிழ் நாட்டில் ஒரு காலத்தில் நன்கறியப்பட்டு வழக்கிலிருந்த கதைகள் பின்னர் எக்காரணம் பற்றியோ மறைந்து விட்டன. எனவே அந்நூல்கள் குறிப்பட்ட ஜாதகக் கதைகளுள் முக்கியமானவற்றை மீண்டும் தமிழ் நாட்டில் ஞாபகப்படுத்தி வைத்தல் நன்றெனக் கருதி, அவற்றைச் சுருக்கமாகக் கூற முன் வந்தாம். பாளி மொழியிலுள்ள ஜாதகக் கதைகளை அறிஞர் பலர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கின்றனர். பேராசிரியர் ஈ. பி. கவெல் அவர்களின் 'மேற்பார்வையில் வெளிவந்த ஆங்கில மொழி பெயர்ப்பினையே' ஆதாரமாகக் கொண்டு இக்கதைகளின் பொழிப் பினைக் கூற முன்வந்தாம். புத்தருடைய பழம் பிறப்புக் கதைகளைக் கூறத் தொடங்க முன்னர் பௌத்த மதம் தமிழ் நாட்டில் தோன்றிய வரலாற்றினையறிந்திருத்தல் பயனுடைத்தது. எனவே அதனைச் சுருக்கமாகக் கூறுவாம்.

கிறிஸ்துவுக்குமுன் ஐந்தாம் நூற்ருண்டில் கௌதம புத்தர் வட இநதியாவில் நிலைநாட்டிய பௌத்த மதம் தமிழகத்திலும் புகுந்தது. மணிமேகலை சிலப்பதிகாரம் முதலிய நூல்களை நோக்குமிடத்து, அவை இயற்றப்படுவதற்குப் பல்லாண்டுகட்கு முன்னரே பௌத்த மதம் தமிழ் நாட்டிற் குடிகொண்டுவிட்டதெனக் கொள்ளலாம். மேலும் கி. மு. மூன்ரும் நூற்ருண்டில் ஆட்சி புரிந்த மௌரிய மன்னர்களுட் தலைசிறந்து விளங்கிய அசோகச் சக்கரவர்த்தி பௌத்த மதத்தைத் தழுவி, அம்மதத்தைப் பலவிடங்களிலும் பரவச் செய்தான். தன்னுடைய மகன் மகிந்தன் அல்லது மகேந்திரனை இலங்கைக்கு அனுப்பி பௌத்த மதத்தை ஈழநாட் டிலும் நிலைபெறச் செய்தான் எனத் தீபவம்சமும் மகாவம்சமும் குறிப்பிடுகின்றன. இதன் பயனுக தமிழ் நாட்டிலும் இலங்கை யிலும் விகாரங்களும் பள்ளிகளும், சேதியங்களும், ஆராமங்களும் ஆங்காங்கே யெழுந்தன. பௌத்த மதம் தமிழ் நாட்டிற் செல்வாக் குப் பெற்றிருந்த செய்தி சிலப்பதிகாரம், மணிமேகலை, நீலகேசி, ஆதியாம் நூல்களினுல் நமக்கு நன்கு அறிவுறுத்தப்படுகின்றது. தமிழ்நாட்டிலும் பௌத்தப் பெரியார் பலர் தோன்றினர். கடைச் சங்க காலத்தில் இளம்போதியர் எனும் பௌத்தப் புலவர் ஒருவர் இருந்தாரென அறியக்கிடக்கின்றது. போதியென்பது வெள்ளரச மரமெனப் பொருள்படும். இவருடைய பெயரே இவர் பௌத்த மதத்தினர் என்பதை எடுத்துக் காட்டுகிறது. இவருடைய பாடல் எட்டுத் தொகையுள் ஒன்ருகிய நற்றிணையிற் சேர்க்கப் பட்டுள்ளது.

இனி, 'மறவண நீத்த மாசறு கேள்வி யறவண வடிகள்' காவிரிப் பூம்பட்டினத்திலிருந்த புத்த சங்கத்துள்ள ஒரு முனிவர் என்பதை 'மணிமேகலை' யெனும் காப்பியம் குறிப்பிடுகின்றது. மணிமேகலை யென்பவளுக்கு ஆபுத்திரன் வரலாற்றையும், அமுத சுரபியின் பெருமையையும் உணவளித்தலின் விசேடத்தையும் எடுத்துக்கூறிப் பலருடைய பசித் துன்பங்களையும் போக்கும்படி செய்ததுமன்றி அவளுக்குத் தருமோபதேசஞ்செய்து வழிப்படுத்தியவரும் இவ் வறவணவடிகளே. இவர் 'நரைமுதிர் யாக்கை நடுங்கா நாவினுரை மூதாளன்' எனவும். 'நாத்தொலை வில்லா யாயினுந் தளர்ந்து மூத்தவிவ் யாக்கை வாழ்க பல்லாண்டு' எனவும் கூறப்பட்டிருத்த லர்ல், இவர் மிக்க மூப்புற்றும் சிறிதும் சொல்வன்மை குன்ருதிருந் தாரென்றும் அறியக்கிடக்கின்றது.

இனி, மணிமேகலை யென்பவள் தமிழ் நாட்டில் வாழ்ந்த சிறந்த பௌத்த பிக்ஷுணி என்பதில் ஐயமில்லை. மணிமேகலா தெய்வம் என்ற பெயருடன் இந்திரன் ஏவலாற் சில தீவுகளை ஒரு தெய்வம் பாதுகாத்து வந்ததென மணிமேகலை யெனும் காப்பியம் கூறு கின்றது. இத்தெய்வத்தைப்பற்றி ஜாதகக் கதைகளிலும் வரலாறு கள் காணப்படுகின்றன. லோகபாலரான தேவர்களால் மணிமேகலை என்பாள் சமுத்திர தேவதையாக நியமிக்கப்பட்டு, தருமசீலர்களுக் குச் சமுத்திரத்தில் ஏற்படும் இன்னல்களிலிருந்து காத்துதவும் கடப்பாடுடையள் என ஜாதகக் கதைகள் குறிப்பிடுகின்றன. அந்தணனுன சங்கன் என்பவனும், அரச குமாரனுன மஹாஜனகன் என்பவனும் கடலிடையே இன்னலுற்றபொழுது மணிமேகலா தெய்வம் பாதுகாப்பளித்தது என புத்த ஜாதகம் (சுங்க ஜாதகம், மஹாஜனக ஜாதகம்) விவரிக்கின்றன.

இனி, தானம் சீலம் முதலியவற்ருற் சிறந்த பௌத்தர்கள் பூவுல கில் இருப்பினும், அவர்களுக்குத் துன்பம் நேரிடினும் இந்திர னுடைய ஆசனமாகிய பாண்டுகம்பளம் கம்பிக்கும் என மணிமேகலை யிற் கூறப்பட்டுள்ளது.

"தனது பாண்டு கம்பளம்
தானடுக்குற்ற தன்மை நோக்கி
ஆதி முதல்வன் போதி மூலத்து
நாத னுவோ னளிநீர்ப் பரப்பில்
எவ்வமுற்ருன்றன தெவ்வந்தீரென"

—தவத்திறம் பூண்டு தருமங்கேட்ட காதை (21 25)

ஈண்டுநீர் ஞாலத்திவன் செயலிந்திரன்
பாண்டுகம்பளந் துளக்கியதாதலின்

—பாத்திர மரபு கூறிய காதை (28-29)

எனும் மணிமேகலை அடிகளான் இந்திரனுடைய பாண்டு கம்பளத் தின் வரலாறு நன்கறியப்படும். இது மஞ்சணிறமுடைய சிங்காதனம் என ஜாதகக் கதைகளில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஐம்பெருங் காப்பியங்களுள் நடுநாயகமாக விளங்குவதும், தமிழரசி தனது இடையில் அணிந்துகொண்ட சிறந்த ஆபரணமாக விளங்குவதுமாகிய மணிமேகலையினை இயற்றிய புலவர் சிகாமணியாகிய சீத்தலைச் சாத்தனரும் பௌத்தரே. இவருக்கு பௌத்த மதத்திலிருந்த அபிமானம் இந்நூலைப் படிப்பார்க்கு நன்கு புலப்படும். இந்நூல் அழிந்தொழிந்து படாவண்ணம் அச்சுவாகனமேற்றிய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களையும் யாம் மறந்துவிட முடியாது. இவருடைய உதவியின்றேல் சாத்தனருடைய புலமை எங்கட்குப் புலப்படாதுபோக வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடும். சீத்தலைச் சாத்தனர் தாம் இயற்றிய நூலிற் பல புத்த ஜாதகக் கதைகளை குறிப்பிட்டுள்ளார். புத்த ஜாதகக் கதைகளை இவர் பாளி மொழியிற் படித்தாரோ தமிழ் நூல்களிற் படித்தாரோ வென இப்பொழுது துணிந்து சொல்ல முடியாது. எனினும் புத்த ஜாதகக் கதைகளை இவர் நன்கறிந்திருந்தார் என்பது மட்டும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

கி. பி. நான்காம் நூற்றுண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் சங்கமித்திரரும் பௌத்தரே. இவர் சோழநாட்டைச் சேர்ந்தவர். இவருடைய வரலாற்றை மகாவம்சம் குறிப்பிடுகின்றது. குண்டலகேசி யெனும் காப்பிய நூலாசிரியரும் தமிழரே. சோழ நாட்டிற் பிறந்து தமது வாழ்விற் பெரும்பகுதியை இலங்கையில் அநுராதபுரத்திலிருந்த மகாவிரையில் பிறர்க்குப் பயன்படும் நற்காலமாகக் கழித்த **புத்ததத்த தேரர்** என்பவரும் தமிழரே. இனி, புத்த தேரர் எனும் சிறந்த பௌத்த புலவரும் தமிழ்நாட்டினரே. இவர் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படுகின்றார். இவர் புத்த வம்சாத்த காதை, அபிதம்மா வதாரம், வினய வினிச்சியம், உத்தர வினிச்சியம், ரூபாரூப விபாகம், ஜினலங்காரம் எனும் நூல்களையும் புத்த வம்சம் எனும் நூலுக்கு மதுராத்தவிலாசினி எனும் உரையையும் எழுதியுள்ளார். இவர் பாளி மொழியிற் செய்த உரைகளை மேனுட்டறிஞரும் பாராட்டியிருக்கின்றனர் என்றல், இவருடைய பாளி மொழிப் பாண்டித்தியம் எத்தன்மையது என யாம் எடுத்துக்கூற வேண்டியதில்லை. மேலும் போதி தருமர், தின்னுகர், தருமபால ஆசாரியர், ஆசாரிய தருமபாலர், புத்த நந்தி, சாரிபுத்தர், வச்சிரபோதி, புத்த மித்திரர், பெருந்தேவனர், தீபாங்கர தேரர், அநுருத்தர், மகாகாசபர், ஆனந்த தேரர், தம்மகீர்த்தி, கவிராசராசர், சாரிபுத்தர், புத்தாதித்தியர் ஆதியாம் தமிழ் நாட்டுப் பௌத்தப் பெரியார் பலர் காலத்துக்குக் காலம் தோன்றி பௌத்த மதத்துக்குப் பக்கபலமாக விளங்கினர். இத்தகைய புலவர்கள் தோன்றியதால் பௌத்த நூல்கள் தமிழிலும் தோன்றின. இவற்றை விரிப்பிற் பெருகுமாதலின் கூறுது விட்டாம். தமிழர்கள் பௌத்த மத வளர்ச்சிக்கு ஆற்றிய அருந்தொண்டுகளையெல்லாம் அரிதின் முயன்று சேகரித்து **"பௌத்தமும் தமிழும்"** எனும் **தலைசிறந்த ஆராய்ச்சி நூலை** என் அருமை நண்பர் **மயிலை சீனி வேங்கடசாமி** அவர்கள் எழுதியுள்ளார்கள். இப்பொருள்பற்றிய முழு விவரத்தையும் இந்நூலிற் கண்டின்புறுக. இங்ஙனம் தமிழ் நாட்டில் பௌத்தப் பெரியார் வாழ்ந்ததால் புத்தஜாதகக் கதைகள் தமிழ் நாட்டில் வழங்கப்படலாயின. எனினும் **'புத்த ஜாதகம்'** எனத் தனிப்பட்ட நூல் இதுவரை தமிழில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. எனவே முக்கியமான புத்த ஜாதகக் கதைகளைக் கூறல் தமிழ் நாட்டவருக்குப் பயன்படும் எனக் கருதுகின்றும். அடுத்த கட்டுரையில் அவற்றை ஆரம்பித்துத் தொடர்பாக எழுதுவாம்.

# புத்தாண்டு வாழ்த்து

" மஹாகவி "

குத்துவிளக் கேற்றுங்கள் ! குங்குமப்பொட்
டிடுங்களடி ! குமுத வாயைப்
பொத்துதிரும் முத்துகளைப் பொறுக்கியள்ளிப்
பூட்டஇதோ பொழுது ? போங்கள்,
புத்துடைகள் தோள்நழுவப் புதுவிருந்தை
வரவேற்க ஓடு வீர்கள் !
வைத்ததடி உள்ளேஅவ் வரும் ஆண்டு,
வளங்கோடி கொணரும் ஆண்டே !

சிற்றிடைகள் அசையட்டும் ! சிலம்பினங்கள்
அலம்பட்டும் சிறிய பாதத்(து) !
அற்புதங்கள், எக்காலும் அழியாத
தமிழ்ப்பாக்கள் அவைகேட் கட்டும்
கற்குழையும் படி !எமது கன்னியர்காள்,
இதோவாயிற் கதவைத் தட்டும்
நெற்குலையும், நறுநெய்யும், நெடுநிதியும்,
நிறைவாழ்வும் கொணரும் ஆண்டே !

கங்குலின்நீள் கருமையினைப் புறங்காட்டும்
இளங்காலை போல வந்த
தெங்களுக்கோர் புதுஆண்டே ! எவருளமும்
மலரட்டும் ! இன்றை நாளில்
சிங்களமும் தேன்தமிழும் சேர்ந்திலங்கை
சிறக்கவழி பிறக்க வென்று
பொங்கலிடும் அவதியிலே பொட்டழிய
வியர்க்கிறதா, பரவாய் இல்லை !

கார்முகிலை மலைஎழுந்து வழிமறிக்க
அதுகடலாய்ப் பரந்து பாய்ந்தே
ஏருழவர் நிலம்நனைக்கும் ! எட்டாத
திட்டுகளில் நின்றும் வீழ்ந்தே
ஓரிருசில் லுருட்ட இனி உயிர்ப்புண்டாம்,
ஒளியுண்டாம், உயர்வுண் டாகும் !
ஊர்களிப்புற் றுடல்சிலிர்க்க உதித்துள்ள
புத்தாண்டை வாழ்த்து வீர்கள் !

சுற்றிவந்து கைகொட்டிச் சுமைகழன்று
வீழ்ந்ததெனச் சொல்லிச் சொல்லி
நெற்றியில்மைக் குழலாட, நேரிழையீர்,
கும்மியடிப் பீர்கள் ! நேற்றோ
டற்றதுநம் துயர்முழுதும் ! ஆனந்தம்
ஆயிற்றென் றுடிப் பாடும் !
வெற்றிகளை விளைக்கவரும் எவிளம்பிக்
கெமதாழ்ந்த வாழ்த்தை தக் கூறும் !

# சதாவதானம் கதிரைவேற்பிள்ளை

**ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற்பிள்ளையவர்களுக்கு நிறுவப்பெற்ற ஞாபகச்சின்னம்**

திரு. வி. க. அவர்கள் திருத்தொண்டர் புராணத்துக்கு எழுதிய அரும்பதக் குறிப்புரையையும் வசனத்தையும் வெளியிட்டபோது, அந்நூற்பதிப்பினைத் தம் வித்தியாகுருவாகிய சென்னை இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்த ஜனசபைத் தாபகர் சதாவதானம் ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற்பிள்ளை யவர்களுக்கே உரிமையாக்கினர். அந்நூலிற் காணப்படும் உரிமையுரையும் உபோற்காதத்தில் பிள்ளையவர்களைப்பற்றி முதலியார் எழுதிய குறிப்பும் கீழே தரப்படுகின்றன. முதலாவது பதிப்பு 1910 ம் ஆண்டில் வெளிவந்தது.

கு.ச.

**உரிமையுரை**

பூவினிற் சிறந்த நாவினிற் பெரியார்
தொண்டையே நாடுந் தொண்டை மா நாடு
பாலி பாய்ந் தளி சீர் பாலிநன் னாடு
எண்ணிய வுதவும் புண்ணிய நாடு
அம்மை யறம்வளர் செம்மை சேர் நாடு
இத்திரு நாட்டிடைப் பத்திரு வனப்பார்
தோன்ற வருள்புரி யான்றபேரறங்கள்
குன்று தலில்லாக் குன்றையம் பதிவாழ்
பாக்கிழார் பெருமான் சேக்கிழார் அருளால்
விரித்த அடியவர் சரித்திர மணக்கும்
பெரிய புராணமே வரிய சொன் மூலம்
உகந்த கத்தியம் உயரரும் பதவுரை
சேர்ந்தொளி செய்யுஞ் சிவநூ லிதனை
முத்தமிழ் நாளுந் தத்தைக ளோம்பும்
அருட்பா திருப்புகழ்ப் பொருட்பா வோதையும்
நலமணி ஓதியின் மலரணி பிணியும்
மலர்முக மணியணி நில வெரி யுமிழ்வும்
நீங்கா தொளிரும் பாங்குறு நாடு
செந்தகி ழரிவைமா தந்தவ நாடு
காவலர் போற்றும் கூவலர் நாடு
அமிழ்தினு மினிய தமனிய நாடு
செய்தவ மொன்றுய்த் திரண்ட வுருவென
ஆன்றவர் குணமொடு தோன்றின னெவனே
நாவலர் மாணவ நாரலே படிந்தே
உகந்திரு மொழிநீர் முகந்துருள் புடவி
**அந்தமிழ்ப் பேரக ராதியுங் கூர்ம**
**புராண சிவநிசி புராண வுரையும்**
**சைவ பூடண சந்திரி கையும்**
**குக பராக் கிரமமு மிக நூலாக**
உதவிய மழையெனும் உத்தம னெவனே
செந்தமிழணங்கின் சிந்தையி லென்றுந்
தங்குந் தமிழொளித் துங்கவ னெவனே
சாலி வாணிமா சூலியைப் புரையுங்
கற்புயர் கல்வி பொற்பருண் ஞானங்
கொண்டு மெய்யன்பிற் கோமகள் பேயார்
எனவே வளர்ந்து வனவே டச்சிதே
அத்திலை என்றும் புத்தியிற் போற்றும்
வடிவாம்பிகை யெனும் வடிவினை மணந்தே
இல்லற மேற்ற நல்லவ னெவனே
தெய்வ **வைதிக சைவ சித்தாந்த**
**சண்டமா ருதப்போர்** கொண்டருஞ் **சோம**
**சுந்தர நாயன்** சுந்தர னுயபின்
அவன் போற் செழித்தவன் சிவநெறி யெவனே
நாஞ்சிவ மென்றே ஆஞ்சிடுங்கரிகள்
வீரிட வாட்டிப் பாரிடர் களைந்து
**மாயா வாத தும்சகோ ளரியெனுங்**
காந்தி சேர் பட்டம் ஏந்தின னெவனே
பின்னரு மப்பெயர் மன்னவ ருறுதி
செய்திடப் பெற்ற மெய்யவ னெவனே
மன்னவர் நீதி மன்றினி லேறிப்
பன்னிரு முறையே உன்னருட் பாவென்
ருணி பசுமரத் தறைந்தா லென்னக்
காட்டிச் சாத்திர நாட்டின னெவனே
சிற்றம் பலத்தினு மற்றத் தலத்தினும்
வளவ னடாத்திய வளமார் திருமுறை
விழாவை யிந்நாள் வழாம நிகழ்த்தி
உண்மை யருட்பா வண்மையை முன்போல்
எங்கணும் பரப்பிய கங்கண னெவனே
அருவி கண்களிற் பெருகிட அன்பே
உருவா யானந்தப் பெருவா ரிதியில்
திளைக்கவு நேயர்கள் வளைவிலாக் கல்விப்
பண்டித ரீண்டிக் கண்டிலம் யாண்டும்
இவனிற் புலவரை இவனது சொல்விசை
என்றிமை யோராய் நின்றிட ஒன்னுர்
அகத்திற் புகழ்ந்து முகத்தைச் சுளிப்பத்
தன்னை மறந்ததுந் தானறி யாமல்
பிரசங்க மாரி பெய்தவ னெவனே
தென்தமிழ் வளர்ந்த தொன்மது ராபுரிச்
சங்கப் புலவனுய்ச் சார்ந்தவ னெவனே
நல்லிசைப் புலவர்முன் சொல்விசைச் **சதாவ**
**தானஞ் செய்த வானவ னெவனே**
அடக்கம் பொறையை நடக்கையிற் காட்டி
இல்லா ருள்ளா ரொல்லா ரொல்லுநர்
ஒக்கவே நோக்கி மிக்கவ னெவனே
அக்க மணியரை யொக்க லெனக் கொண்
டுரியவ ரிகந்த பெரியவ னெவனே
நாடவர் பழித்துரை பூணது வாகத்
துலக்கிய வாசக இலக்கிய னெவனே
உலகை வென்ற உண்மையனெவனே
பற்றினர்க் கினிய பண்டித னெவனே
எம்மை விட் டகலாச் செம்மைய னெவனே
நஞ்சபை கண்ட நாயக னெவனே
**கதிரைவே லென்ருெரு** மதுரப் பெயருடைத்
தவன னெவனே அவனது ஞாபக
**சின்னமா தாகச் செய்தனம்**
உரிமை யுலகமும் உவந்திட இனிதே!

(27ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாண மாவட்ட மாதர் முன்னேற்றச் சங்கச் சம்மேளனம்

சென்ற 1957 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ந் திகதியில் யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மாதர் முன்னேற்றச் சங்கத்தால் ஓர் சம்மேளனமும், பொருட்காட்சியும் நடாத்தப்பெற்றன. இந்த வைபவத்தில் கிராம முன்னேற்றக் குடிசைக் கைத்தொழிற் பகுதி அதிபர் ஸ்ரீமான் ஜீ. வீ. பி. சமரசிங்கா அவர்கள் கலந்துகொண்டார்கள். அன்று காலை 9.30 மணியளவில் திரு. ஜீ. வீ. பி. சமரசிங்காஅவர்கள் பொருட்காட்சி விழாவைத் திறந்து வைத்தார்கள். 10.30 மணியளவில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு திருமதி எம். ஸ்ரீ காந்தா (தலைவி யாழ்ப்பாண மாதர் சங்க சேமாபிவிருத்திச் சங்கச் சபை) அவர்கள் தலைமை வகித்தார்கள். இக்கூட்டத்துக்கு ஏறக்குறைய 1,500 க்கு மேற்பட்ட பெண்மணிகள் சமுகம் அளித்திருந்தார்கள். தலைவி தமது தலைமை உரையில், "யாழ்ப்பாணச் சரித்திரத்திலே இப்படியான சம்மேளனம் நடந்தது இதுவே முதல் முறையாகும். மாதர்கள் அனைவரும் தங்கள் வீட்டுத் தொழிலில் மாத்திரம் கட்டுப்பட்டு இருக்காது பொதுச் சேவையிலும் ஈடுபட்டுப் பொது மக்களின் நலனுக்கும் நாட்டின் பொருளாதார விருத்திக்கும் சேவைபுரிதல் வேண்டும்" எனக் குறிப்பிட்டார். அடுத்தபடியாகத் திருமதி கே. மருதலிங்கம் (வலிமேற்கு மாதர் சங்கங்களின் மேற்பார்வையாளரும், நாவாலி மாதர் சங்கத்தின் தலைவியும்) பேசுகையில் வலிமேற்கு மாதர் சங்கங்களால் கடந்த ஆண்டில் செய்யப்பட்ட சேவைகளைப்பற்றி ஓரளவு எடுத்துக்கூறி இச்சங்கங்களுக்கு அத்தியாவசியமாக இன்ன, இன்ன உதவிகளை அரசாங்கத்திடமிருந்து பெற வேண்டியிருக்கின்றது என்பது பற்றியும் விளக்கமாகக் கூறினுர். அவர் தொடர்ந்து பேசுகையில் கிராம முன்னேற்றச் சங்கங்கள் மேற்கொள்ளும் குடிசைக் கைத்தொழிலில் உற்பத்தியாகும் பொருட்களை யாழ்ப்பாணத்திலே விற்பனவு செய்தற்கு ஓர் கலைக்கைப்பணி ஸ்தாபனம் இருக்கின்றது. என்றும் அதில் சங்கங்களால் செய்யப்பட்ட பொருட்களை வாங்கி விற்பனவு செய்வதற்கு 10,000 ரூபா முதலிட்டுத்தரும்படியும் கேட்டுக்கொண்டார். "இச்சங்கங்கள் நடாத்தும் நெசவு நிலையங்களில் சிலவற்றில் உற்பத்தி செய்யப்படும் புடைவைகள் கிராமமக்களின் போதிய ஆதரவு இன்மையினுல் விற்கப்படமுடியாதிருக்கின்றன. ஆதலினுல் தேசமக்கள் அந்நியநாட்டுத் துணியை அணிவதிலும் பார்க்க நம்நாட்டில் செய்யும் துணிகளை வாங்கி அணிந்தால் இச்சங்கங்களில் மேன்மேலும் கூடிய தொழிலாளருக்கு வேலை செய்ய இடங்கிடைக்கும். இதனுல் நாட்டுப் பொருளாதாரம் அபிவிருத்தியடையும். வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவுக்கு நீங்கும் என்று கூறினுர். திருமதி சத்தியதேவி துரைசிங்கம் (வலி கிழக்கு மாதர் சங்க மேற்பார்வையாளர்) அவர்கள் பேசுகையில் மேற்கூறிய ஸ்ரீமதி கே. மருதலிங்கம் அவர்கள் பேசியதை எடுத்து ஆமோதித்து முடிவுரை கூறினுர். திரு. ம. ஸ்ரீகாந்தா (அரசாங்க அதிபர்) பேசுகையில் இந்த மாதர் சம்மேளனத்துக்கு, இவ்வளவு திரளான பெண்மணிகள் எதிர்பாராத வண்ணம் சமூகம் தந்துள்ளார்கள் எனவும், அவர்கள் அன்று காட்டிய ஆர்வத்தையும், உற்சாகத்தையும் தான் மிகவும் மெச்சுவதாகவும் கூறினுர். கிராம முன்னேற்றக் கைத்தொழிற் பகுதி அதிபர் திரு. சமரசிங்க அவர்கள் பேசுகையில் தமக்கு அளித்த வரவேற்புக்கு தனது நன்றியைத் தெரிவித்தார். "இப்பகுதியில் உள்ள மாதர்கள் அடைந்த முன்னேற்றத்தையும், அவர்கள் செய்துவரும் பொதுச் சேவைகளையும், நான் இன்று பார்த்த அளவில், இப்பகுதி மாதர், பொதுச் சேவையில் மற்றும் பகுதியில் உள்ள மாதர்களிலும் பார்க்க ஓரளவு கூடிய சேவைகளைச் செய்துவருகின்ருர்கள் என்பது தெளிவாகிறது" எனக் கூறினுர். மேலும் இந்த மாதர் சங்கங்கள் செய்துவரும் சேவைகள் ஆடவர் சங்கம் செய்துவரும் சேவையிலும் பார்க்க பன்மடங்கு கூடியிருப்பதை இச்சம்மேளனம் திட்டவட்டமாக தனக்கு எடுத்துக்காட்டியுள்ளது என்றும் குறிபிட்ட அவர் மேலும் கூறியதாவது: "ஆண் அதிகாரிகளின் உதவி ஒருபுறமிருக்க கிராம அபிவிருத்தி இயக்கத்தில் ஆண்களைவிட பெண்கள் ஒருபடி கூடமுன்னேற முடியும் என்பதை யாழ்ப்பாண மங்கையர்கள் ஆண்களுக்குக் காட்டிவிட்டனர். நாடு முழுவதிலும் கிராம அபிவிருத்தியில் ஆண்களை விடப்பெண்கள் முன்னேற்றம் அடைந்துள்ளனர். குடிசைக் கைப்பணியைப் புனருத்தாரணம் செய்வதுமட்டும் கிராம அபிவிருத்தியல்ல கலாசார வளர்ச்சியும் கிராம அபிவிருத்திதான். குடும்பத்தை நடத்துவதிலும், அபிவிருத்தி செய்வதிலும் ஆணும், பெண்ணும் சமபங்கு உடையவர். எனினும் குடும்பத்தின் அபிவிருத்தியைப் பாதுகாப்பதற்கு ஆணைவிட பெண் தான் அதிக அக்கறை கொண்டிருக்கிருர்." இதற்கு முன் பேசிய திருமதி கே. மருதலிங்கம் அவர்கள் கேட்டுக்கொண்ட விஷயங்களில் தான் முக்கிய கவனம் செலுத்துவதாகவும் திரு. சமரசிங்க வாக்குறுதி கொடுத்தார். திருமதி எஸ். சரவணமுத்து அவர்கள் நடந்தவற்றிற்கு நன்றியுரை கூறினுர். பின்னர் சங்கப் பிரதிநிதிகளுக்கு மத்தியான போசனம் இராமனுதன் கல்லூரியில் வழங்கப்பட்டது. பிற்பகல் 2 மணி தொடக்கம் பொருட்கள் விற்பனவு செய்யப்பட்டன. திரு. ஸ்ரீகாந்தா அவர்கள் பொருட்காட்சியில் வைக்கப்பட்ட பொருட்களில் தெரிவுசெய்யப்பட்ட பொருட்களுக்கு 5.30 மணியளவில் பரிசு வழங்கினுர். 8.30 மணியளவில் கதம்பக்கச்சேரி நடைபெற்றது. இதில் பத்து காரிய அதிகாரிப் பிரிவுகளும் பங்குபற்றின.

---

## சதாவதானம்

(26 ம் பக்கத் தொடர்ச்சி)

### பெரிய புராணம் உபோற்காதம்

இத்துணைச் சிறப்பினையுடைய அருமருந்தன்ன இத்திருத்தொண்டர் புராண மூலத்தை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் பிரதிக்கிணங்கப் பரிசோதித்து, அஃதுடன் அடியேனியற்றிய அரும்பதக்குறிப்புரையையும் வசனத்தையும் சேர்த்து, 1871 ம் ஆண்டிலே அமிழ்தினுமினிய தமிழீழ நாட்டிலே அவதரித்து, அருட்பா என்பது ஆறிருமுறையே யென அரசமன்ற மேறிப் பசுமரத்தாணி போனுட்டி, முன்னர்த்தில்லையம் பதியில் நடைபெற்ற திருமுறை மகோற்சவத்தை இக்காலத்து மக்கள் கண்டு இன்புற்றுய்ய அத்தில்லையினும் பிற பகுதிகளினும் இனிமையாய் நடாத்திக் காட்டி, 1907 ம் வருஷத்திலே சிவனடி சேர்ந்த **சதாவதானம் ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற்பிள்ளை யவர்கள் ஞாபகசின்னத்திற்காக** வெளியிட்டு தங்கள் குருபத்தியை விளக்கினுர் எனது தமையனுர் திருவாரூர் வி. உலகநாதமுதலியாரும், எனது கெழுதகை நண்பரும் உழுவலன்பரும் ஆகிய அ. சிவசங்கர முதலியாரும்.

இங்ஙனம்,

திருவாரூர் வி. கலியாணசுந்தரன்,

# கடவுளும் நானும்

## (சந்தித்த படலம்)

(நவாலியூர் சோ. நடராஜன்)

கடவுள் நேற்று என்னைக்
டையின் தெருவிற் கண்டு
குடையு மில்லை ; காலில்
கொழுவச் செருப்பு மில்லை 1

நடையில் மெலிந்து போனுய்
நல்ல வெய்யி லல்லோ
உடையும் கிழிந்து விட்ட
துனக்குக் குறையென் னென்ருர் 2

சிறிய பண்ட மானுல்
பெரிய பண்ட மதனைக்
குறுக இழுக்கு மென்று
கூறு மேவிஞ் ஞானம். 3

கடவுள் முன்னே நான்போய்
கையைக் கட்டிக் கொண்டு
கடவுள் நீங்கள் தானே
கனநாள் காண விருந்தேன். 4

உங்கள் சுகமெப் படியோ
ஊரில் க்ஷேமந் தானே
இங்கே வந்த தேனே
எனக்குச் சொல்லு மென்றேன். 5

நான்தான் கடவு ளென்ருர்
நானுஞ் சரிதா னென்றேன்
என்தான் நீயென் முன்னே
யிப்படி நின்ரு யென்ருர். 6

கடவுள் செத்துப் போனுர்
கடவு ளில்லை யென்று
நெடுகப் பலருஞ் சொல்ல
நானுங் கேட்டு வந்தேன். 7

தொலைந்தது சனியன் கையிற்
தொழிலைப் பார்க்க லாமே
அலைந்திடு மனிதர்க் கினியே
ஆறுத லென்றிருந்தேன். 8

கடவுள் தலையில் எல்லாக்
கவலை களையும் போட்டு
மடமை அடிமை வறுமை
மயக்கில் மயங்கிக் கிடந்தோம். 9

வயிற்றில் வலியென் ருலும்
கடவுள் கடவு ளென்போம்
வயிற்றில் மந்த மானுல்
கடவு ளென்ன செய்வார். 10

தெள்ளுக் கொட்டி னுலும்
தெய்வத் தைக்கூப் பிடுவோம்
தெள்ளைப் பிடித்துக் கடவுள்
கிள்ளி விடுமோ தலையை. 11

கடவுள் நல்ல வர்தான்
மனிதர்க் கதனு லென்ன ?
கடவுள் கடவுள் தானே
மனிதர் மனிதர் தானே. 12

மனிதர் கடவு ளாவார்
கடவுள் மனித ராவார்
மனிதர் கடவு ளாகக்
கடவுள் மனித ராக. 13

செத்தார் கடவு ளென்று
சிந்தை மகிழ்ந்தி ருந்தேன்
மெத்தக் கண்முன் ஐயா
மெதுவாய் வந்து நின்றீர். 14

“ பக்தா பயப் படாதே
பயமொன் றில்லை உலகில்
செத்தா லழியு மென்று
சிட்சை செய்த தாரோ. 15

கீதை சொன்ன வாயால்
ஈதைச் சொல்லு வேனே
பாதை யிருக்க வீணுய்
உபாதைப் படுவ தேனே ” 16

“ கடவுள் ! உமக்குக் கண்கள்
காண விருக்கு மானுல்
நடவும் முன்னே யிந்த
நகர வியற்கை காட்ட ” 17

என்று சொன்னேன் நானும்
எனக்கும் கடவு ளுக்கும்
அன்று நடந்த வற்றை
அடுத்த இதழிற் சொல்வேன். 18



இலங்கைக்கும், இத்தாலிக்குமிடையே வியாபாரத் தொடர்பை விருத்திசெய்யும் நோக்குடன் ஓர் வியாபார ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. கைச்சாத்திட்ட பின் வர்த்தக அமைச்சர் திரு. ஆர். ஜி. சேனுநாயக்கா இத்தாலிய ஸ்தானீகருடன் கைகுலுக்குகிருர்.

# இலங்கை நுண்தொழிற் கல்லூரியிலுள்ள கல்வி வசதிகள்

பல்வேறு விதமான தொழிற் கல்வியைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் பல இலங்கையில் இருக்கின்றன. ஆனால் அத்தகைய கல்வியைப் பெற்றபின்பு உத்தியோகம் பெறுவதற்கான சந்தர்ப்பங்களும் நிறைய இருக்கின்றன என்பதும், அச்சந்தர்ப்பங்கள் யாவை என்பதும் போதிய அளவு பிரபல்யமடைந்திருப்பதாகக் காணப்படவில்லை. இதற்கு ஒரு முக்கிய காரணம் சர்வகலாசாலைப் பட்டமொன்றே நியாயமான சம்பளத்துடனும் முன்னேற்றத்துடனும் கூடிய ஒரு தொழிலுக்கு உத்தரவாதமளிக்குமென்ற தவறான அபிப்பிராயம் நிலவுவதேயாகும்.

இந்த அபிப்பிராயம் காரணமாக சர்வகலாசாலைப் படிப்பு போன்ற உயர்தர கல்வியைக் கற்பதற்குப் போதிய தகுதியற்றவர்கள் கூட, சர்வகலாசாலையில் சேர ஆவல்கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இத்தகைய மாணவர்கள் சர்வகலாசாலையில் சேர்வதற்குத் தம்மைத் தயார்செய்ய நீண்ட காலம் செலவிடுகிறார்கள். ஆனால் இதே மாணவர்கள் அதே காலத்துள் தம் இயல்புக்கேற்றனவும், அதிக பொறுப்பு வாய்ந்தனவும், கவர்ச்சிகரமான சம்பளங்கள், முன்னேற்ற மடைவதற்குரிய நியாயமான சந்தர்ப்பங்கள் என்பவற்றை அதிகம் கொண்டனவுமான பல உத்தியோகங்களுக்குத் தம்மைத் தயார்செய்து கொள்ள முடியும்.

நுண்தொழிற் கல்லூரியில் பொறியியல், விஞ்ஞானம், வர்த்தகம் ஆதிய துறைகளில் வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. இவ்வகுப்புக்களில் சில பகல் நேரம் முழுவதும் நடைபெறுகின்றன. மற்றைய பகுதி நேரங்களிலும், மாலை நேரத்திலும் புறம்பு புறம்பாக நடாத்தப்படுகின்றன. மாலை நேர வகுப்புக்கள் ஏற்கெனவே தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கென ஏற்படுத்தப்பட்டுள்ளனவாகும். இவர்கள் இவ்வகுப்புகளில் கல்வி பயில்வதன்மூலம் தம் தொழிலில் மேலும் திறமையான பயிற்சி பெறவோ, ஒரு குறிப்பிட்ட துறையில் முன்னேற்ற மடையவோ முடியும். பகுதி நேர வகுப்புகள் ஏற்கெனவே தொழிலில் இருப்பவர்களுக்கும், ஒரு உயர்ந்த உத்தியோகத்துக்கோ, இதர பரீட்சைகளுக்கோ தம்மைத் தயார்செய்துகொள்ள முதலாளிமார்களால் அனுமதியளிக்கப்படுபவர்களுக்கும் உரியதாகும்.

### பொறியியல் வகுப்புக்கள்

இக்கல்லூரியின் பொறியியல் பகுதியில் தற்போது உப-பரிசோதகர்கள், உதவிப் போர்மன், படம்வரைவோர்—என்பன போன்ற மத்திய தர உத்தியோகங்களுக்கான வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. இந்தத் தரங்களைச் சேர்ந்த மேல் உத்தியோகங்களுக்கு சாதனுமுறை அனுபவம் பெறுதலும் அவசியம்.

பொறியியற் பகுதியின் தொழிற் பிரிவில், நீர்க்குழாய் அமைப்பு, மின்சாரக் கம்பி இணைப்பு போன்ற தொழில்களில் ஒன்றை மேற்கொள்ள விரும்புபவர்களுக்கு அவ்வத்தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகின்றது.

இக்கல்லூரியிலுள்ள வர்த்தகக் கல்விப் பகுதி, சாதாரண தொழிலுக்கு வேண்டிய பயிற்சியை மாத்திரமன்றி பெரிய உத்தியோகங்களுக்கும், பட்டதாரிப் பரீட்சைகளுக்குமான பயிற்சியையுமளிக்கிறது.

சில உத்தியோகங்களில் சேர்தற்கு அரசாங்கத்தைச்சேர்ந்த அநேக நுண்தொழில் பகுதிகளும் தலத்தாபனங்களும் இந்தக் கல்லூரி வழங்கும் சாட்சிப்பத்திரங்களைக் கோருகின்றன. உதாரணமாக மின்சார வேலைப் பகுதி தற்பொழுது கனிஷ்ட நுண் தொழில் உத்தியோகத்தர் (மின்சார-இயந்திர) சாட்சிப் பத்திரமுள்ளவர்களை மாத்திரமே போர்மன் பயிற்சி வகுப்புகளுக்குச் சேர்க்கின்றது.

அரசாங்கப் பகுதிகளின் அபிவிருத்தித் திட்டத்துக்கு 100 கனிஷ்ட நுண்தொழில் உத்தியோகத்தர்களும், 60 படம்வரை தொழில் பயில்வோரும், 100 க்கு அதிகமான நில அளவையாளரும் தேவையென மதிப்பிடப்படுகிறது. எனவே இந்தத் தேவையைச் சமாளிக்குமுகமாக இவ்வருடம் வழக்கம்போலன்றி பெருந் தொகையானோர்க்குப் பயிற்சியளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மனதில் வைத்துக்கொள்ளவேண்டிய இன்னுஞ் சில விஷயங்கள் உள. பயிற்சிக் காலத்தில் கடுமையாக வேலை செய்வதனுல் ஏற்படும் கஷ்டங்களைச் சமாளிப்பதற்கு நல்ல தைரியமும், திடகாத்திரமும் அவசியமாதலால் இம்மாதிரியான வேலைகளை எல்லோரும் செய்துகொள்ள முடியாதென்பதை தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். இந்தப் பகுதியில் நடாத்தப்படும் எல்லா வகுப்புகளிலும் பங்குபற்றுவதற்கு தேகாரோக்கியமும், நல்ல கண்பார்வையும் மிக மிக அவசியம்.

பொறியியல் (எஞ்சினியரிங்) பயில்வோருக்கு மிகச் சிறந்த பண்புகளும், சராசரியிலும் மேலான பொது விவேகமும் முக்கியமான தராதரங்களாகும். இக்கல்வி கற்பவர் கேத்திர கணித அறிவுடன், விரிவாக ஆராயுந் தன்மையுடையோராய் இருத்தல் வேண்டும். இந்தத் தராதரம், படம் வரைவோராகப் பயிற்சி பெறுவோருக்கு மிக மிக முக்கியமானதாகும். மேலே கூறிய பண்புகளுடன் கல்வியைக் கிரகிக்கும் தன்மையும் இத்துறை மாணவர்களிடம் அமைதல் வேண்டும். நில அளவைப் பயிற்சி, படம் வரைதல் ஆகிய கல்விகளைக் கற்க விரும்புவோர் சின்னஞ் சிறு விஷயங்களையும் நுணுக்கமாகக் கவனிக்கும் திறமையுடையோராயிருத்தல் வேண்டும். இவற்றில் படம் வரைதற் கல்வி பெண்களுக்கு மிகவும் ஏற்றது. இங்கிலாந்து போன்ற முன்னேறிய நாடுகளில் ஏராளமான பெண்கள் இப்படிப்பட்ட வேலைகளைச் செய்கின்றனர்.

கைத்தொழிற் பிரிவில் வேலைசெய்ய விரும்புவோர் சராசரியான புத்தி சாலித்தனம் கொண்டவராயிருந்தால் போதுமானது. ஆனால் யந்திரங்களில் வேலைசெய்யும் ஆசையும், கைகளைச் சுறுசுறுப்பாக உபயோகிக்கும் திறமையும் பெற்றிருத்தல் வேண்டும். தேகாரோக்கியமும், தீட்சண்யமான கண்பார்வையும் இவர்களுக்கு அவசியம்.

### வர்த்தகப் படிப்பு

வர்த்தகப் பிரிவில் தரப்படும் கல்வி, வாலிபர்களையும் யுவதிகளையும் பல்வேறு விதமான வர்த்தகப் பயிற்சிகளைப் பெற்று வர்த்தக ஸ்தாபனங்களில் வேலைசெய்வதற்கு ஏற்றவர்களாக ஆக்கும். உயர்தரக் கல்வி பெற்று வர்த்தகத் துறையில் கனிஷ்ட நிர்வாக பதவிகளைப் பெற விரும்புவோர்களுக்கு வர்த்தகத் தராதர வகுப்பொன்று நடாத்தப்படும். இவ்வகுப்புப் பகல் வேளைகளில் நான்காண்டு தொடர்ந்து நடாத்தப்படும். இவ்வகுப்பில் படிப்பிக்கப்படும் பாடங்கள் லண்டன் சர்வகலாசாலையின் பொருளாதார பீ. எஸ். ஸீ. பட்டப் பரீட்சைக்கு சர்வகலாசாலைக்கு வெளியேயிருந்து தோற்றுதற்கு ஏற்ற பாடங்கள்

(30 ம் பக்கம் பார்க்க)

நூல்நலனுய்வு

# விபுலானந்த அமுதம்

தொகுப்பாசிரியர் : அருள் செல்வநாயகம்
பதிப்பாளர் : கலாநிலையம், 175, செட்டியார் தெரு, கொழும்பு
விலை : ரூபா 1.50 பக்கம் :148
கிடைக்குமிடம் : சரஸ்வதி புக் டிபோ, கொழும்பு.

முத்தமிழ் வித்தகரென முழுத்தமிழுலகமும் புகழ்போய தமிழ்ப் பேராசிரியர் விபுலானந்த அடிகளின் கட்டுரைகள் பல "விபுலானந்த அமுத" மாக மலர்ந்திருக்கின்றது. மலர்வித்தவர் ஈழத்தின் சிறந்த தமிழ் எழுத்தாளரில் ஒருவரெனப் பெயர் பெற்றிலங்கும் திரு. அருள் செல்வநாயகம்.

"விபுலானந்த அமுதம்" தேவாமிர்தம் போல் கற்றோர்க்கு இன்பம் பயக்கும் தன்மைத்தாய் அமைந்திருக்கிறது. இந்நூலில் நாம் காணும் விபுலானந்தர் ஒரு புதிய விபுலானந்தர். அவரிடத்தில் நாம் பாரதியின் ஆவேசத்தைக்கூட ஆங்காங்கு காண்கிறோம். தெளிவு, ஓட்டம், துணிவு என்னும் பண்புகளோடு, மென்மையான இதயத்தை ஊடுருவி எழும்பும் கவிதை உணர்வும் இந்நூலிலே மண்டிக்கிடக்கிறது. இனிய எளிய சாதாரண வார்த்தைகள்; சின்னஞ் சிறு வசனங்கள். ஆனல் உயிர்த்துடிப்புக் கொண்டு உள்ளத்தின் உண்மை அனுபவத்தில் கருக்கொண்டெழுந்த கருத்துக்கள்.—இவைதாம் விபுலானந்த அமுதம். தமிழ்ப் பேராசிரியர் ஒரு ஜீவ நடையை (style) சிருஷ்டிக்கும் முயற்சியை இந்நூலில் மேற்கொள்ளுகிறர். வெற்றியும் பெறுகின்றர். ஆனல் இந்நூலை வாசிக்கும்போது பெரியதோர் துன்பமும் விமர்சகன் மனதில் தோன்றமலில்லை. அடிகள் இதே ஜீவநடையில் இன்னும் பல நூல்களை எழுதித் தமிழன்னையைச் சிறப்பிக்க அன்னவருக்கு இன்னும் நீண்ட ஆயுள் கிட்டவில்லையே என்ற கவலையே அது.

அடிகள் ஆராய்ச்சிப் பெருந்தகை. அத்துறையில் அத்துறைக்கேற்ற கம்பீர நடையைக் கையாண்டு ஏற்றவாறு இலக்கியம் அமைத்த பெருமை அவருக்குரியது. ஆனல் ஆராய்ச்சி நுண்மாநுழைபுலம் சொட்டும் அந்நடைக்கும் இந்நூலில் காணும் நடைக்கும் சிறிதளவு வேற்றுமை உண்டு. அங்கு அறிவு பேசுகிறது. ஆனல் மலரினும் மெல்லிய இதயத்தின் அசைவையும், ஆற்றலையும் இந்நூலில் காண்கிறோம். இங்கு பேசுவது இதயம். அறிவின் பேச்சு அறிவை ஊட்டும். இதயத்தின் பேச்சு இதயத்தை கவ்வும். இரண்டும் சிறப்புடைத்தாயினும் இதயத்தின் பேச்சின் இன்பத்தை எவர்தான் மறுக்கமுடியும், எவர்தான் அசட்டை செய்யமுடியும்? ஒரு உதாரணம் பாருங்கள் :—

"என்ன அருமையான உலகம்! ஆண்டவனுடைய கல்யாண குணங்களை நினைக்க நினைக்க இன்பம் பெருகிறதே! அவன் நம்மோடேயிருக்கும் போது தேடுகிற கவலைகூட இல்லையே! ஆ! என்ன அருமையான உலகம்! நல்லவர்கள் எப்போதும் நம் உறவை ஏற்றுக் கொள்வார்கள். மேலான அறிவும், நல்லொழுக்கமும், கடவுட் பக்தியுமுடைய ஒருவனை அன்பினுல் உரிமையாக்கிக் கொள்வோம். இப்போது நம்மை மதியாதவர்களான அந்தக் கோடீசுவரனும் சக்ராதிபதியும் நம் காலில் தூசு!"

துறவு, முதிர்ந்த அனுபவ அறிவு, இரக்கம், மற்றோர் பிரச்சினைகளை நன்கு புரிந்து கொள்ளும் சீரிய மனேபாவம், அசையாத கடவுள் பக்தி, முதலிய பண்புகள் பலவற்றை விபுலானந்த அமுதத்தில் காண்கிறோம். விபுலானந்த அமுதம் உண்மையில் விபுலானந்த இதயம். அது பரப்பிலும் பண்பிலும் சிறந்தும் பரந்தும் இருப்பதை நாம் இதை வாசிக்கும்போது உணர்கிறோம்.

இந்நூலை இவ்வளவு அழகாகத் தொகுத்து, அச்சுவாகனம் ஏருத அடிகளார் கட்டுரைகளை அச்சு வாகனமேற்றி அதன் மூலம் அவற்றைத் தமிழன்னைக்குப் பாதுகாத்துக் கொடுத்த பெருமை தொகுப்பாசிரியருக்குரியது. தொகுப்பாசிரியர் தமிழுக்கும் விபுலானந்தத்திற்கும் அதன்மூலம் பெரும் சேவை செய்திருக்கிறர். அவர் சேவையை நாம் பாராட்டுகிறோம்.

(அ. ந. க.)

---

### இலங்கை நுண்தொழிற் கல்லூரியிலுள்ள கல்வி வசதிகள்

(29 ம் பக்கத் தொடர்ச்சி)

என்பதும் இங்கு குறிப்பிடப்படுதல் வேண்டும். இதனுல் இவ் வகுப்பில் சேர்ந்து பயிலும் மாணவர்கள் லண்டன் சர்வகலா சாலைப் பட்டப் பரீட்சைக்கும் அதே நேரத்தில் தோற்றக் கூடியதாயிருக்கிறது.

சுருக்கெழுத்தாளர், கணக்குப் பதிவாளராக விரும்புவோருக்கும் இக்கல்லூரியில் தகுந்த வகுப்புகள் உண்டு. கணக்குப் படிப்பு, வங்கிப் படிப்பு, வர்த்தகக் காரியதரிசிப் படிப்பு, ஆதியவற்றைப் பெறவிரும்புவோருக்கு மாலை நேர வகுப்புகள் நடத்தப்படும். இப்படிப்புகளின் பின்னர் கல்லூரி டிப்ளோமாப் பத்திரப் பரீட்சைக்கேனும் சம்பந்தப்பட்ட தொழில் சம்பந்தமான இதர பரீட்சைகளுக்கேனும் ஆஜராகலாம். இவ்வகுப்புகளில் கல்வி கற்பிப்போர் தத்தம் துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களாவர். வர்த்தகப் பிரிவில் உள்ள இவ்வகுப்புகள் தற்பொழுது சுருக்கெழுத்தாளராகவும் அந்தரங்கக் காரியதரிசிகளாகவும் வேலைசெய்ய முன்வந்துகொண்டிருக்கும் பெண் மணிகளுக்கு மிகவும் ஏற்புடையனவாகும்.

---

### கேள்விச்செவி

(17 ம் பக்கத் தொடர்ச்சி)

பொய்யது பொய்யது பொய்யே!"
எலிகள் இயம்பின "ஞாலம்—ஆடி
இன்றே யழிந்திடு" மென்றே
"என்ன வெடுத்துரை யீரோ—கூடும்
எலிகள் எழுந்திடு வீரே"
கன்னிப் பசுதந்த காளை—பாய்ந்து
கதறி யுரைத்த தெமக்கே"
"காளையீ தென்ன கழறுய்"—"கரிய
கரடி யெனக்கிது சொல்ல
மூளை கலங்கியே யோடிக்—கொம்பு
முட்டினேன் பாறையி" லென்னக்
"கரடியே யிங்குநீ வாராய்—இப்போ
கடிதிதற் குத்தரங் கூறுய்"
"திருட வரும்நரி சொல்லக்—கீழே
திணறி விழுந்தனன் யானே"
"புத்தி மிகுந்த நரியே—நீயும்
புகல்வ திதற்கெது வாமோ?"
"கொத்தித் திரிகின்ற கோழி—வாயாற்
கொக்கரித் திட்டது மன்னு"
"கோழிநீ கூவிய துண்டோ?—அதனைக்
கூறிடுவாய்" என்றுறுக்க

(37ம் பக்கம் பார்க்க)

# பெண்களும் விசாகமும்

ச. நித்தியகல்யாணி எழுதியது

(வானொலியில் 14.5.57 ல் ஒலிபரப்பப்பெற்ற இசைச் சித்திரம்,)

பாட்டு :
போற்றி போற்றியோ ராயிரம் போற்றி! நின்
பொன்னடிக்குப் பல்லாயிரம் போற்றி காண்!
சேற்றிலே புதிதாக முளைத்ததோர்
செய்ய தாமரைத் தேமலர் போலொளி
தோற்றி நின்றனை பாரத நாட்டிலே
துன்ப நீக்குஞ் சுதந்தர பேரிகை.

என்று பாரதியார் புகன்றபடி பாரதத் தாயின் அருந் தவப் புதல்வர்களுள் ஒருவரான புத்தர் பெருமான் பெண்களைப் பற்றிக் கொண்டிருந்த கருத்தையும், பௌத்த தருமத்தில் அவர்களுக்கு உரிய நிலையையும் இங்கு ஆராய்வாம். பெண்களைப் பாவிகள் என்றோ மாயப் பிசாசுகள் என்றோ புத்தர் கருதவில்லை. ஆடவர்களே உயர்ந்தவர்கள், முக்திக்கு உயர்ந்தவர்கள் என்றும் அவர் கருதவில்லை. நரகத்திற்குச் செல்லும் பாதையில் வழி காட்டி நிற்கும் ஒளிவிளக்குகள் பெண்கள் என்பது அவர் கொள்கையன்று. அவருடைய உபதேசங்களை ஆடவரும், பெண்டிரும் ஒரே கூட்டமாக இருந்தே கேட்டு வந்தனர். ஆயினும் பெண்களைச் சங்கத்தில் சேர்ப்பது பற்றி அவர் தயக்கமடைந்ததன் காரணங்கள் பொதுவான மனித இயல்பைப் பற்றி அவர் தெள்ளத் தெளிவாக அறிந்திருந்தமையும், அக்காலத்திலே புறச் சமயவாதிகள் வீண் பழி சுமத்த முன் வரக் கூடும் என்பதுமேயாம். ஆணாயினும், பெண்ணாயினும், அப்பழுக்கில்லாமல் மாசு மறுவில்லாமல் மிகத் தூய்மையுடன் வாழ வேண்டும் என்பதும் அத்தகைய வாழ்க்கைக்கு இடைவிடாத பயிற்சி அவசியம் என்பதும் அவர் கொள்கை.

சங்கத்தில் துறவிகளாகச் சேர்ந்த ஆடவர்களுக்கு மனவிகாரம் ஏற்படக்கூடிய காரணங்களில் முதன்மையாகக் குறிப்பிடத் தக்கது பெண் உருவம். மற்றைப் பொருள்கள் சம்பந்தமாகப் புலன்களை அடக்கியும் விருப்பு வெறுப்புகளைக் களைந்தும் பயிற்சி பெறலாம் எனினும் பெண்ணைச் சந்தித்து அதனால் ஏற்படும் உணர்ச்சியை வெல்வதைப் பார்க்கிலும், அவளைச் சந்திக்காமலே ஒதுங்கிச் சென்று விடுதல் மேலென்று புத்தர் கருதினார். பெண்களுடன் வீண் பேச்சுப் பேசுதலை அவர் தடை செய்தார். கூடியவரை பெண்களைப் பாராமலே ஒதுங்கியிருக்க வேண்டும் என்று அவர் கூறினார். அவர்களிடம் சமயம், ஒழுக்கம், முதலிய விஷயங்களைப் பற்றிப் பேச நேர்ந்தாலும், பிக்குகள் தூர விலகியிருந்தே பேசவேண்டும் என்றும் அவர் விதிகள் செய்தார். இவைகள் எல்லாம் பெண்கள் தாழ்ந்தவர், தீயோர் என்ற கருத்தால் ஏற்பட்டவை அல்ல.

பண்படாத மானிட உள்ளத்தில் பலவீனங்களை அறிந்து உணர்ச்சி வெள்ளத்தைத் தடை செய்வதற்காகப் போடப்பெற்ற அணைகளே இவை.

(ஆ) பௌத்த தருமத்தில் பெண்களுக்கு உயர்ந்த நிலையே அமைந்திருக்கிறது. பிக்குகளிற் பலர் சிறந்து விளங்கியது போலவே பிக்குணிகளிலும் பலர் புகழ் பெற்று விளங்கி வந்தனர். புத்தரால், புகழப் பெறும் பாக்கியம் பெற்ற பெண்களுள் முதன்மை பெறுபவள் சுஜாதை. சுஜாதை சேனாதி கிராமத்துத் தலைவனுடைய மனைவி. செல்வமும் சிறப்பும் பெற்று அவ்விருவரும் இல்வாழ்க்கை நடத்தி வருகையில் எளிமையும் பொறுமையும் இரக்கமுமுடைய அம்மாதரசி தனக்குக் குழந்தை இல்லையே என்று கவலை அடைந்து பல தெய்வங்களுக்கும் நேர்ந்து கொண்டாள். ஆண் குழந்தை பிறந்தால் :

(பாட்டு)
" உம்பரும் விரும்பி உண்பதற்குரிய
பண்டம் பலவும் பக்குவம் செய்து
பொற்றாலங்கள் பொலிவுற எடுத்து
வனத்தின் தெய்வம் வாழ் மரத்தடியில்
வைத்து நின்று வணங்குவேன் "

என்று வேண்டிக் கொண்டாள். அவள் நினைத்தபடியே பொற்சிலையை ஒப்பான் போன்று ஓர் புத்திரன் பிறந்தான். உடனே முன் நேர்ந்தபடியே அவள் இனிய அமுது தயாரித்துக் கொண்டு காட்டுத் தெய்வத்திற்கு அதைப் படைப்பதற்காகக் குழந்தையுடன் புறப்பட்டு வந்தாள்.

(அ) புத்த ஞானத்தை நாடி இல்லறத்தை விட்டுத் துறவறம் பூண்டு காடுகளையும், நாடுகளையும், சுற்றித் திரிந்த சித்தார்த்தர் சேனாதி கிராமத்தை அடுத்த நாட்டிலே ஆற்றுக்கு அருகிலே தங்கியிருந்தார். அங்கு அவர் சில காலம் வரையில் அப் பிராணத் தியானம் என்னும் மூச்சை நிறுத்தும் யோகத்தைச் செய்து கொண்டிருந்தார். உணவு கொள்ளாமலே அப்பிராணத் தியானம் செய்து கொண்டிருந்தமையினால் சித்தார்த்தரின் உடம்பு சுருங்கி வற்றிப்போயிற்று. அதனால் அவர் பெரிதும் துன்பப்பட்டு அந்த யோகத்தை நிறுத்திவிட்டார். அன்று வைகாசித்திங்கள் பூர்ணிமை தினம். தாம் புத்த ஒளியை அடைந்து ஞானத்தைப் பெறப் போவதை அவர் அறிந்திருந்தார். பூர்ணிமையான அன்று ஞானம் பெற்றுப் புத்தராகப் போகும் சித்தார்த்தர் தமது காலைக் கடனை முடித்துக்கொண்டு அங்கிருந்த ஆலமரத்தின் அடியில் அமர்ந்து தியானத்தில் இருந்தார்.

(ஆ) சுஜாதையினுடைய பணிப் பெண் சுஜாதைக்கு முன்னாலேயே வந்து இடத்தைச் சுத்தம் செய்கையில் மரத்தினடியில் மெய்மறந்து அமர்ந்திருந்த மாதவரைக் கண்டு, அவர் முகத்தில் தோன்றிய சோதியில் மயங்கி, அங்கிருந்து ஓடிச் சென்று சுஜாதையை எதிர் கொண்டழைத்து "வனத்தில் வாழும் தெய்வமே அருள் வடிவாக மரத்தடியில் அமர்ந்திருக்கிறது என்று அதிசயத்தோடு கூறினாள்.

(பாட்டு)
" அதிசயம், அதிசயம் அம்மா அதிசயம்!
மலர்கள் மலர்ந்து மழை யெனப் பொழியும்
மரத்தினடியில் மௌனமெய்தி
சோதி மண்டலம் சூழ்ந்து பொதிய
முழங்கை மடக்கி முட்டிலமர்த்தி
வனத்தில் வாழும் மா பெருந் தெய்வம்
அருள் வடிவாகி அமர்வது பாராய்!
சாந்தம் உருவாய்த் தழைப்பது காணாய்!
விரி தாமரையை வென்ற விழிகளில்
தெய்வத் தன்மை திகழ்வது நோக்காய்?
பாக்கியம்! பாக்கியம்! பாக்கியம் அம்மா!
கண்ணிற் காணாக் கடவுளை இந்த
மண்ணிற் கண்டு வணங்கப் பெறுதலே!

அதைக் கேட்டு சுஜாதை தன் ஆண் மகவுடனும் விரைந்து வந்தாள். வந்தவள் வள்ளலைக் கண்டாள். அவர் முகத்தில் ஒருவித தெய்வீக ஒளி தோன்றிற்று. அமைதியுள்ள சாந்த மூர்த்தியாகக் காணப்பட்டார். மனித இயல்பைக் கடந்த தெய்வீக புருஷனுகப் புத்தர் தோன்றினுர். இவரைக் கண்ட சுஜாதையும் உண்மையில் இவர் ஆலமரத்தில் குடியிருக்கும் தெய்வம் என்றும் தனது பாலமுதை ஏற்பதற்கே பிரசன்ன மாய் இருக்கிறுர் என்றும் நினைந்து கண்கள் குளிர்ந்து உள்ளமும் குளிர்ந்தாள். "பகவ ! இந்த இன்னமுதைஅருந்தி அருள் செய்ய வேண்டும்" என்று கூறிப் பொற்கிண்ணத்தை அவர் அடியில் வைத்து உள்ளம் குழைந்து வணங்கி நின்ருள்.

அன்பும் அறிவும் நிறைந்த அந்த அழகுச் செல்வி அருகே யிருந்து பார்த்து அகம் மகிழும் வண்ணம் அகளங்க மூர்த்தி யும் அவள் படைத்த அமுதை அருந்தி இன்புற்ருர். வாடி இளைத்து, அவர் வருந்திய களைப்பெல்லாம் மாறிவிட்டது. ஊக்க மும் ஒளியும் தோன்றின. அழகு பொலியும் திருவதனத் தோடு அவர் சுஜாதையை வாழ்த்தியருளினர். அவள், மார் போடு அணைத்திருந்த மதலையின் உச்சியில் கை வைத்து "செல்வ நீ நெடுநாள் இன்புற்று வாழ்வாயாக" என்று ஆசி கூறினுர்.

பாட்டு : "காணற் கரிய கடவுள் நீ தானே ?
படைத்த உணவைப் பருகினை
நீயும் இன்புற்றனையோ ?
காணற் கரிய கடவுள் நீ தானே ?"

என்று வினுவிய சுஜாதையைப் பார்த்துப் புத்தர் பிரான்.

பாட்டு : "காணுதற் கரிய கடவுள் யானலன் ;
மண்ணிற் பிறந்த ஓர் மனிதனேஅம்மா !
ஆதியில் உலகாள் அரசிளங் குமரன் ;
இந்நாள்
வையக மாந்தர் மன இருள் போக்கும்
உண்மை ஞான ஒளியினைத் தேடி
ஆருண்டாக அல்லும் பகலும்
அலைந்து திரியும் ஆண்டியும் ஆவேன் !
ஒப்பிலாச் சுத்த உணவாம் இதனை
உண்டு தெளிந்த உடலைக் கண்ட பின்
உண்மையை அறிவதும் உறுதியாம் எனச்
சிந்தையில் நன்கு தெரிந்து கொண்டனன் ;

என்று சுஜாதைக்குத் தான் ஓர் தெய்வமல்ல ! மனிதனே ! என்பதைப் புத்தர் விளக்கினர். பிறகு அவர் அம் மங்கை யின் வாழ்க்கை வரலாற்றைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். அவளது வாழ்க்கையைக் கேட்ட கௌதமர்,

அறிவிற் பெரிய ஆசிரியர்க்கும்
அறிவு புகட்டும் நல் அறிவுடையவள் நீ"

என்று பாராட்டிப் புகழ்ந்தார். "உன் எண்ணம் நிறை வேறியது போலவே விரைவிலே நானும் என் சித்தி அடை வேன் என்ற நம்பிக்கை எனக்குப் பிறந்து விட்டது. என் கருத்து நிறைவேற வேண்டுமென்று நீயும் என்னை வாழ்த்திச் செல்வாயாக ! என்று சுஜாதையை அவர் கேட்டுக் கொண்டார். அவளும் அவர் சிந்தையின் எண்ணம் சித்தியடையும்படி வாழ்த்தி விட்டு, அவரிடம் விடை பெற்றுக்கொண்டு சென்ருள். கௌதமருடைய வாழ்க்கையில் அவர் எண்பது ஆண்டுகள் உண்ட உணவுகளிலே இரண்டு உணவுகளையே அவர் மிகவும் பாராட்டிப் போற்றியிருக்கிறுர், அவ்விரண்டில் ஒன்று சுஜாதை அளித்த அமுதமாகும்.

(இ) அவள் அளித்த அமுதத்தை உண்டபின் கௌதமர், தெளிந்த அறிவும் திடமான மனமும் பெற்று ஆற்ருேரத்தில் அடர்ந்து வளர்ந்திருந்த மற்ருெரு அரச மரத்தின் அடியை அடைந்தார்.

அரச மரத்தின் அடியில் அமரும் போதே "எனது இலட்சியம் கைகூடும் வரை நான் பூமியில் இந்த இடத்தை விட்டு எழப் போவதில்லை" என்று உறுதிபூண்டு கொண்டு தியானத்தில் அமர்ந்தார். அன்று பூர்ணிமை. புன்னகையுடன் விளங்கும் பூவையைப் போன்று, சந்திரன் வானத்திலிருந்து தண்ணொளி பரப்பிக் கொண்டிருந்தான். அகிலமெங்கும் அமைதி பரவி யிருந்தது. கௌதமர் ஆசைகளையும், பாசங்களையும், அறவே களைந்துவிட்டு ஆழ்ந்த சிந்தனையும் ஆராய்ச்சியும் கூடிய மனத் துடன் தியானத்தில் அமர்ந்திருந்தார். அப்போது ஏற்பட்ட ஆனந்த உணர்ச்சியால் அவர் மனநிலை மாறவில்லை. அந் நிலையில் அஞ்ஞானம் தொலைந்து அறிவு துலங்கிற்று. இருள் மறைந்து ஒளி விளங்கலாயிற்று. அவித்தையின் தோடுஉடைந்து சிதறி கோடிக் கணக்கான கிரணங்களுடன் பொன் மயமான மெய்யறிவாம் சூரியன் அவர் அகத்தில் உதயமாகிவிட்டான் ! இனி அவர் அறிய வேண்டியது எதுவுமில்லை. அன்றிரவு பொழுது விடியமுன்பே கௌதமபிக்கு போதியை அடைந்து புத்தராகி விட்டார். அவர் திருமுகத்தில் பூரண ஞானம் பொலிந்து விளங்கிற்று. அவர் பவம் ஒழிந்த பகவராகி விட்டார்.

(சங்கினதும் கோயில் மணிகளினதும் ஒலி)

பாட்டு : "போதி மேவினை ! புன்மை அகற்றினை
சோதி வானவர் தொழ எழுந் தருளினை
ஆதி நாத ! நின் அடியிணை பரவுதும் !

ஆதியங் கடவுளை ! அருமறை அருகனை !
போதியங் கிழவனை ! பூமிசை ஒதுங்கினை ?
போதியங் கிழவனை ! பூமிசை ஒதுங்கிய
சே தியஞ் செல்வ ! நின் திருவடி தொழு தனம்!

புத்தபிரான் ஞானம் பெறுவதற்கு முன் உண்ட உணவு சுஜாதையின் பாலன்னமாகும். அக்கற்பரசியின் பாலமுதம் கௌதமர் குலையா மன உறுதியும் ஞான ஒளியும் பெறுவதற்கு உதவின. ஓர் பெண் உலக ஞானிகளுள் ஒருவர் ஞானமடைவதற்கு உடந்தையாயிருந்தது நம் பெண் வர்க்கத் திற்கே ஒரு பெரும் வெற்றியல்லவா ? இதை,

பாட்டு : "பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா
பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா
தண்மை இன்ப நற் புண்ணியஞ் சேர்ந்தன
தாயின் பேரும் ஸதி யென்ற நாமமும்.
அன்ன மூட்டிய தெய்வ மணிக் கையின்
ஆணை காட்டில் அனலை விழுங்குவோம்
கன்னத்தே முத்தங் கொண்டு களிப்பினும்
கையைத் தள்ளும் பொற் கைகளைப்பாடுவோம்"

என்று பெண்மையின் உயர்வைப் பாராட்டுகிருர் பாரதியார்.

(வீணையின் நாதம்)

(அ) இப்படி ஒருவர் இருவர் அல்ல. பல பெண்கள் புத்த பிரானின் வாழ்வில் குறுக்கிட்டு இருக்கின்றனர். பலர் பிக்குணி களாகி இருக்கின்றனர். கௌதமர் முதலில் பெண்களைத் தன் பௌத்த சங்கத்தில் சேர்க்க மறுத்துவிட்டார். ஆனுல் அவரது சித்தியாகிய கௌதமி அவருடைய மனதை மாற்றி

விட்டாள். புத்தர் பெண்களுக்குத் தருமத்தைப் பற்றி விளக்கிக் கூறினர். ஆயினும் பெண்கள் பிக்குணிகளாவதை அவர் அனுமதிக்க இசையவில்லை. அவருடைய சிற்றன்னை கௌதமியோ சிறிதும் மனம் கலங்காது எப்படியும் துறவு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்று உறுதி பூண்டு காலம் கருதிக் காத்திருந்தாள். பெருமான் நியக்குரோத வனத்திலே சில நாட்கள் இருந்துவிட்டு மீண்டும் வைசாலியை நோக்கிப் புறப்பட்டார். வழியிலே பல இடங்களிலே தங்கித் தரும உபதேசம் செய்து விட்டுக் கடைசியில் மகாவனத்தை அடைந்தார். அன்னை கௌதமி, புத்தர் வைசாலியிலிருப்பதை அறிந்து தானும் அங்கே புறப்பட்டாள். அவள் தன் தலையைச் சிரைத்துவிட்டுக் காவியுடை அணிந்து கொண்டு தன்னைப் போலவே துறவுக்கோலம் பூண்ட வேறு பல சாக்கியப் பெண்களுடன் வழி நடை கொண்டாள். கோலிய மன்னரின் கோமளக் குமாரி மாநிலம் போற்றும் சுத்தோதன மன்னரின் மகாராணி, கல்லும், மண்ணும் நிறைந்த சாலை வழியாக நடந்தே செல்ல வேண்டும் என்று நினைத்தாள்.

(இ) புத்தரைப் போற்றி வளர்த்த உத்தமி காட்டு வழிகளிலும், கிராமப் புறங்களிலும் நடந்தே சென்றாள். சந்தனக் குழம்பு பூசிய அவளது பட்டுப் போன்ற பாதங்கள் வாடி, வதங்கி, அப் பாதங்களிலிருந்து ஏற்பட்ட வெடிப்புகளிலிருந்து உதிரம் கசிந்து கொண்டிருந்தது. கௌதமியும், அவளுடன் கூடிச் சென்ற பெண்களும் எல்லையற்ற இடர்களை அனுபவித்துக் கொண்டிருந்தும் உறுதி குலையாமல் சென்று கொண்டிருந்தார்கள். ஒரு வழியாக அவர்கள் வைசாலி மகாவனத்தை அடைந்தார்கள். அம்மகாவனத்தின் புனிதத் தன்மையைக் கண்டு அங்கிருந்த விகாரைக்குள் செல்ல மனம் ஒப்பாது வெளியே முன்வாயிலில் அமர்ந்து கொண்டு காத்திருந்தனர். பலநேரம் அவர்கள் அங்கிருந்தும் அங்கு வந்த பிக்குகள் அவர்கள் பெண்கள் என்ற காரணத்தால் அவர்களை ஏறெடுத்தும் பாராமல் விகாரைக்குள் சென்றார்கள்.

அப்படி இருந்தும் கௌதமி மனம் தளரவிடாமல்,

> " புத்தம் சரணம் கச்சாமி
> தம்மம் சரணம் கச்சாமி
> சங்கம் சரணம் கச்சாமி "

என்று யாவருடனும் சேர்ந்து உச்சரித்துக் கொண்டிருந்தாள். அப்போது அங்கு வந்த ஆனந்தர், நெடுவழி நடந்த களைப்பால் சோர்ந்தும் கால்கள் வீங்கியும், சாலைகளின் புழுதி படிந்த ஆடைகளுடனும் மாசற்ற மணிகளைப்போல் விளங்கிய அந்த ஸ்திரீகளைக் கண்டதும் திடுக்கிட்டுக் கௌதமியை நோக்கி, " நீங்கள் ஏன் இப்படி அலங்கோலமாக இருக்கிறீர்கள் " என்று வினவினர். கௌதமி தாங்கள் வந்த காரியத்தைத் தெரிவித்தாள். அவளுடைய நீர் நிறைந்த கண்களையும், அழுகுரலையும், துயரத்தையும் கண்டு ஆனந்தர் ஐயனை நாடி விகாரையுள் சென்றார்.

உள்ளே சென்றவர் பகவரை வணங்கினர்.

பாட்டு :
> " திசைமுகன் மருவிய கமலநல் நிறமென
> வசை அறு முனிவொடு மலியும் நின்அடி !
> உயர்வுறு பெருமையொடயரறு மயர் வொடு
> புரை அறு நலனெடு பொலியும் நின் புகழ் !

என்று பாடித் துதித்து விட்டு அன்னை கௌதமி முன் வாயிலில் வந்து காத்திருப்பதை அறிவித்துப் " பெரும ! ஸ்திரீகளும் தரும ஒழுக்கத்தை மேற் கொண்டு சங்கத்திலே சேர அனுமதித்தல் நலம் " என்று கூறினர். ஆனல் பெருமான் பெண்கள் சங்கத்தில் சேருவதை சிறிதும் விரும்பவில்லை. ஆயினும் ஆனந்தர் விடுவதாயில்லை.

பெண்கள் துறவு பூண முடியுமா ? முடியாதா ? என்பதைப் புத்தபிரானுடன் விவாதித்து, அன்னை கௌதமியின் ஏற்றத்தையும் அவள் பெருமானைப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்து வந்த பெருமையையும் எடுத்துக் கூறி, அவளைப் பெருமானின் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளல் நலம் என்று மீண்டும் வேண்டினர்.

கடைசியில் பகவரும் உளமிரங்கிப் பிக்குணிகளுக்கு உரிய எட்டு முக்கியமான விதிகளைக் கௌதமி ஏற்று நடக்க இசைந்தால் அவளைச் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளலாம் என்று அனுமதித்தார். ஆனந்தர் அவ்வெட்டு விதிகளையும் கௌதமியிடம் தெரிவிக்க, அவள் தன் ஆயுள் உள்ள வரையும் அவைகளைக் கடைப் பிடித்து வருவதாக உறுதி பகர்ந்தாள். அன்னை கௌதமி சங்கத்தில் சேர்ந்த சமயத்திலேயே தேவி யசோதரையும் பிக்குணியானள். அவர்களுடன் மகாவனத்திற்குச் சென்றிருந்த மற்ற ஸ்திரீகளும் துறவறத்தை மேற் கொண்டனர். இப்படி ஒருவர் பின் ஒருவராகப் பெண்கள் சங்கத்திலே சேர சங்கம் வளரலாயிற்று.

பகவரது உபதேச மொழிகளும் தரும சிந்தையும் உலகெங்கணும் பரவத் தொடங்கியது. அவருடைய பரிநிருவாணத்தின் பின் அவர் ஆரம்பித்து வைத்த புதிய பௌத்த தர்மத்தைப் பல நாட்டு மக்கள் கடைப்பிடிக்கத் தொடங்கினர். வாழ்க பகவர் பெருமான் ! வளருக பௌத்த தருமம்.

(யாவரும் சேர்ந்து பாடுதல்)

" புதுயுகம் ஒன்றின் உதயமிது ; —புத்த—
புனிதன் பிறந்தகதையுமிது
புதுயுகம் ஒன்றின் உதயமிது !

சதுர்யுகம் காண்கிலாச் சத்திய உலகமாய்ச்
சமரசக் குமரியின் அமர செந் திலகமாய்ப்
புதுயுகம் ஒன்றின் உதயமிது !

மோனக் கருக் கலில் மீனெளி பூத்தது
மோகன நெருக்கலில் விவேகம் ஈர்த்தது
ஞானத் தழல் தனில் ஈனம் வெடித்தது
ஞாயிறும் கோல்களும் பாயிரம் படித்தது !
புதுயுகம் ஒன்றின் உதயமிது !

போதித் தருவிலோர் நிவேதனம் பிறந்தது,
பொறிகளைந்துமோர் நெறிதான் கரந்தது.
சோதித் தனிஞானம் சுடர் வெள்ளம் ஆயிற்று
சோபைச் சிரிப்பில் பாபமும் கருகிற்று,
புதுயுகம் ஒன்றின் உயதமிது.

அறநிலை பேசிட ஒருவன் வந்தனன்
அதர்மப் பகை தம்ம பதத்தினன் வந்தனன் !
புறநிலைக் கேபஞ்ச சீலங்கள் தந்தனன்
புத்தனே, எனக்கை குவித்திட நிவந்தனன் !
புதுயுகம் ஒன்றின் உதயமிது !

# புலோலி தந்த புலவரேறு

ஆ. தேவராசா

புலவர்களுக்குப் பெயர்போன இடம் புலோலி. புலமை+ஒலி= புலோலி எனக் காலப் போக்கில் திரிந்தது என்று அறிஞர்கள் கூறுவர். இந்த உண்மையைப் புலோலியில் மலிந்து காணப் பட்ட புலமை உறுத்துகின்றது.

நா. கதிரைவேற்பிள்ளை மேலைப் புலோலியில் தோன்றிய ஒரு சிறந்த தமிழ் அறிஞர்; புலமையில் எவருக்கும் இளைக்கா தவர். மேலைப்புலோலி சைவ வித்தியாசாலையில் இளமையில் கல்வி பயின்ற இவர் நல்லைநகர் ஆறுமுகநாவலரின் சீடரான வித்துவ சிரோமணி திரு. தியாகராசப்பிள்ளையிடம் தமிழ் நூல் கள் பலவற்றைப் பயின்றார். நொத்தாரிசு சிதம்பரப்பிள்ளையின் இலிதராகச் சிலகாலம் வேலை பார்த்தார். தமிழ்மீது தீராத காதலும், சைவ வளர்ச்சியில் சலியாத ஊக்கமும் கொண் டிருந்த இவர் தமது 22 வது வயசில் இலங்கையை விட்டு இந்தியா சென்றார். அங்கு கலைவாணி இவரை மலர்தூவி வரவேற்றாள்.

சென்னையில் உயர்பதவியில் அமர்ந்திருந்த திருகோணமலை யைச் சேர்ந்த திரு. த. கனகசுந்தரம்பிள்ளை என்பவரிடம் தொல்காப்பியம், திருக்குறள் முதலாம் நூல்களை கசடறக் கற்றறிந்தார். சங்க இலக்கியங்கள், பிற்கால இலக்கியங்கள் சைவசமயப் பாடல்கள், சங்கத இலக்கியங்கள் எல்லாவற்றையும் நன்றாகக் கற்றார். சுருங்கச் சொன்னால் இவர் இலக்கியப் பொழிலில் நீச்சலடிக்கத் தொடங்கினார்.

சென்னை வெஸ்லிக் கல்லூரியில் ஆசிரியராக இருந்தபொழுது திரு. வி. க. வைத் தன் மாணவனாகக் கண்டார். திரு. வி. க. வின் சிறப்பியல்புகள் இவரைக் கவர்ந்தன. அதேபோல திரு. நா. க. வின் சிறப்பியல்புகளும் திரு. வி. க. வைப் பெரிதும் கவந்தன. வளர்ந்ததும் திரு. வி. க. திரு. நா.க. வின் தொண்டுகளில் கூடி உழைக்கத் தொடங்கினார்.

திரு. நா.க. வின் பேச்சு வன்மையும், அதோடு சேர்ந்த அருமையான குரலும் அவரைப் போல மேடைகளில் ஏறச் செய்தன. திரு. நா. க. வைப்பற்றி அறியாத தமிழன்பர்கள் இருந்ததில்லை. ஒருநாள் இவர் சிந்தாதிரிப் பேட்டையில் ஒரு கூட்டத்தில் அருமையான ஒரு சமயப் பேச்சுப் பேசிக்கொண்டு இருந்தார். அங்கு பல மாயாவாதிகளும் குழுமி இருந்தனர். திரு. நா. க. பேசும்போது இடைமறித்துப் பல கேள்விகளைக் கேட்டனர். இவற்றிற் கெல்லாம் ஆப்பறைந்தாற்போல ஆணித் தரமாகப் பதிலிறுத்தார். திணறடிக்கும் குறுக்குக்கேள்விகளைக் கேட்டு திகைத்தோடும்படி செய்தார். இந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய செந்திநாத சுவாமிகள் இவருக்கு "மாயா வாத தும்சகோளரி" என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். இந்தக் கீர்த்தியை அறிந்த ஆரணி அரசர் இவரை அழைத்துத் தமது சமஸ்தான வித்துவானாக அமர்த்தி "அத்துவித சித்தாந்த மகோத்தாரணர்" என்ற பட்டத்தையும் வழங்கினார். இதைத் தொடர்ந்து மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் இவரை அழைத்து பி. ஏ., எம். ஏ. பட்டதாரி வகுப்புப் பரீட்சைகளின் பரிசோதகராக நியமித்தனர்.

அவர் வேறும் ஒரு துறையில் ஒப்பற்று விளங்கினார். அட்டாவ தானம் செய்யும் ஆற்றலை எளிதாகப் பெற்றிருந்தார். தொடர் ந்து தசாவதானமும் எளிதில் செய்தார். இந்த நிலையில் சதாவதானம் செய்ய முயற்சி செய்தார். அன்று சென்னை இலக்குமி விலாச மண்டபத்தில் ஞானனந்த சுவாமிகள் தலை மையில் இந்த வைபவம் தொடங்கியது. அப்பொழுது அங்கு பற்பல கலைகளின் விற்பன்னர்களும் பரந்து திரண்டு இருந்தார் கள். "வேலும் மயிலும் துணை" என்று சொல்லித் தொடங்கி விரைவில் இலகுவாகச் சதாவதானம் செய்து முடித்தார். மகிழ்ச்சி ததும்ப ஞானனந்த சுவாமிகள் இவருக்கு சதாவ தானி என்ற பட்டத்தைச் சூட்டினார்.

இவ்வளவு கீர்த்தியுடன் விளங்கிய இவரை ஈழத்துத் தமி ழன்பர்களும் அழைத்து விழாக் கொண்டாடி "சைவசித்தாந்த மகா சரபம்" என்ற பட்டத்தையும் வழங்கினார்கள்.

இவருடைய ஆற்றல்களுள் சுருங்கிய காலத்தில் நூல்களை எழுதி வெளியிடும் தன்மை. சில நூல்களை குறிப்பிட்ட சில நாட்களிலும், பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை சில மணி நேரத் திலும் எழுதியிருக்கின்றார். பிழையென்று கண்டதைத் தீவிர மாக எதிர்த்தார்; கண்டித்தார். ஒரு சிறந்த தர்க்கவாதி யாகத் திகழ்ந்தார்.

திரு. நா. க. வின் பரந்த இலக்கிய ஈடுபாட்டை யாரும் இலகுவில் மறந்துவிட முடியாது, நைடத உரையில் மிகுதியான இலக்கிய ஈடுபாட்டைக் காணலாம். சுப்பிரமணிய பராக்கிரமம், கதிர்காமக் கலம்பகம், சைவபூஷண சந்திரிகை, சிவக்ஷேத்தி ராலய உண்மை விளக்கம் முதலிய நூல்களை இலக்கிய உலகம் இழக்க முடியாது. இவர் ஒரு அகராதித்துறை வல்லுனராகவும் மிளிர்ந்தார். இவருடைய தமிழ்ப் பேரகராதி, தமிழ் அகராதித் துறையில் ஒரு புதிய திருப்பத்தை உண்டுபண்ணி, தமிழ் அகராதித்துறை வளர்ச்சியைச் சரியான பாதையில் செலுத்தி யது. அறிஞர் தனிநாயக அடிகள் "நா. கதிரைவேற்பிள்ளை அகராதித்துறையில் சிறந்து விளங்கினர்" என்று பாராட்டு கின்றார். சென்னைத் தமிழ் லெக்சிக்கன் பதிப்பாசிரியர் பேரா சிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் நா. க. வின் அகராதி முற்கால அகராதிகளுக்கெல்லாம் ஒரு விலக்காக விளங்கியது என்று வெகுவாகப் பாராட்டுகின்றார்.

இவருடைய பக்திச் சுவை நிரம்பிய பாடலுக்கு சுப்பிரமணிய பராக்கிரமத்தில் இருந்து ஒரு பாட்டைப் பார்க்கலாம்.

"இடந்தானு முன்றானை யின்முருகை யெல்லாங்
கடந்தானை யருளாந் தண்கடலானை வேல்கைக்
கிடந்தானை யெப்பொருளுங் கிடப்பானைச் சூர்க்கா
நடந்தானை யேத்தாத நாளென்ன நாளே
நம்பரனை யேத்தாத நாளென்ன நாளே !"

1860 ல் மேலைப்புலோலியில் பிறந்த இந்தப் பெரியார் 1907 ல் நீலகிரியில் மறைந்தார். இதனால் தமிழகம் ஆற்றொணாத் துயருழந்தது. திரு. வி. க. மிகவும் கலங்கினார்.

நூல் நலனாய்வு

# நம்பியகவல்

செ. வேலாயுதபிள்ளை B. A (Hons.)

நம்பியகவல் என்பது வடமொழிப் பகவற்கீதையின் செந்தமிழ் மொழிபெயர்ப்பாகும். இதனைச் செய்தார் புலத்துறை முற்றிய நலத்தினரான புலவர் பாண்டியனார் ஆவர். அவர் செந்தமிழ்ப் பாண்டி நாட்டினின்றும் போந்து இதுகாலைக் கொழும்பிலே வதிந்து தமிழ் வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். நம்பியகவல் என்னுஞ் சொற்றொடர் நம்பியின் கூற்றாகிய பாடல் எனப் பொருள்படும். நம்பி என்பது ஆடவருட் சிறந்தானைக் குறிக்கு மொரு சொல். அஃது இங்கே திருமாலின் பிறப்பாகிய கண்ணனைக் கருதுகின்றது. கண்ணனுக்கு வடமொழியிற் புருடோத்தமன் எனப் பெயரிருப்பதுங் கருதத்தக்கது. அகவல் என்பது பாடல் என்னும் பொருளிற் கீதை என்னும் வட சொற்குரிய தமிழ்ச் சொல்லாகும். அஃதே இரட்டுறமொழிதலான் ஆசிரியப்பா என்னும் பொருளையுந் தந்துநிற்கின்றது. நம்பியின் கூற்றுக்கள் சிறந்தனவும் பெரும்பாலனவுமாய்த் தொக்க இந்நூல் ஆசிரியப்பா நடையில் அமைந்துள்ளது ஈண்டு நோக்கத்தக்கது. இது தொல்காப்பியர் கூறிய நூல்வகையுள் "மொழிபெயர்த்து அதர்ப்படயாத்தல்" என்னும் வகையைச் சேர்ந்தது. நூலாசிரியரே தம் செய்யுள்கட்குச் செவ்விய உரைக்குறிப்பும் எழுதியுள்ளார்.

நம் செந்தமிழ் மொழியில் திருக்குறள் எவ்வாறு ஈடுமெடுப்புமில்லாப் பீடுறு நூலாய்ப் பிறங்குகின்றதோ, அவ்வாறே வடமொழியிற் பகவற்கீதையும் அமைந்துள்ளது. கீதை பாடிய கண்ணன் வடமதுரைக்கு அச்சென்றும் அவ்வாறே குறள்பாடிய வள்ளுவன் தென்மதுரைக்கு அச்சென்றும் நல்கூர் வேள்வியார் பாடிய திருவள்ளுவமாலைச் செய்யுளிலிருந்து, பகவற்கீதையையும் திருக்குறளையும் ஒப்பிடும் வழக்கம் பண்டு தொட்டே இருந்துவருகின்றமை பெறப்படும். குறள் போன்றே கீதையும் முக்காலத்துக்கும் பொதுவான விழுமியவொரு நூல். எனினும், திருக்குறள் பெரும்பாலும் உலகியல் விளக்கங் கூறுவதாயுள்ளது; மற்றும் பகவற்கீதையோ முழுதும் வீட்டியல் விளக்குவதாயுள்ளது. இதுவே இவற்றுக்குள்ள வேறுபாடாகும். இனி, பகவற் கீதையானது தானொரு தனிநூலன்றாய் வடமொழி மாபாரதத்தின் ஒருறுப்பாயுள்ளதே யெனினும், அஃதொரு தனிமுழு நூலாந் தகைமையுங் கொண்டது. போர்க்களத்து அயர்வெய்தி நின்ற வில்லிக்கு வினை செய்ய வேண்டுங் கட்டாயத்தை விளக்குமுகமாக அவற்கு வலவனாகவந்த நம்பி, அக்காலத்து ஒன்றோடொன்று முரணிநின்ற பல்வகைமதக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அவை தம்முள் முரண்படாவாறு ஒற்றுமைப்படுத்தி, எல்லார்க்கும் எக்காலத்தும் ஒத்து நிலை பெறுஞ் சிறப்பினதான மெய்ப் பொருள் விளக்கங் கூறுவதாக அமைந்துள்ளது இந்நூல். அறிவுவழி (ஞானமார்க்கம்), வினைவழி (கர்மமார்க்கம்), அன்புவழி (பத்திமார்க்கம்) என வீடுபேற்றுக்கு நூலோர் கூறிய மூவகை வழிகளையும் முரண்படாவகையில் ஒன்றுபடுத்தி அவற்றை யெல்லாம் உயர்ந்த யோகமாகக் காட்டுகின்றது இது. இதனால் இது பிரமவித்தை எனவும், யோக சாத்திரம் எனவும், உபநிடதமெனவும் பலவாறு பெயர் பெறும்.

கீதையிற் கூறப்படுவது போன்ற மெய்ப் பொருளுணர்வைப் பண்டைக்காலந்தொட்டே தமிழர் பெற்றிருந்தனர் என்பதும், ஆனிரை மேய்ப்போராய் வந்த வேதகால ஆரியர் அவ்வறிவினைப் பெற்றிலர் என்பதும், அவர் தமிழரோ டோடத் தொடங்கிய பிற்றை ஞான்றே அவர் பால் அதனைப் பெற்றனர் என்பதும், வேதத்தின் பிற் கூறாகிய உபநிடதங்கள் தமிழினச் சான்றோராலும் அவர் வழிநின்ற ஆரியராலும் எழுதப்பட்டன என்பதும் மறைமலையடிகளார் போன்றோர் இற்றை நாளிற் செய்த ஆராய்ச்சியாற் பெறப்படும் உண்மைகளாம். இவ்வாராய்ச்சி முடிபுகளை நடுநிலை பிறழாது நின்று ஆராய்ந்த வடநாட்டாசிரியர் சிலரும் மேனாட்டாசிரியர் சிலரும் வலியுறுத்திப் போந்தனர். உண்மை இவ்வாறிருப்பவும், தமிழர் ஆரியரிடமிருந்தே மெய்பொருளுணர்வைப் பெற்றனர் என்னுங் கொள்கையைப் பார்ப்பனர் பலரும் அவர் வழிப்பட்டார் சிலரும் பரப்பி வருவாராயினர். இதற்குச் சான்றாகப் பழமைவாய்ந்த மெய்ப்பொருணூல்கள் தமிழில் இல்லாமையையும் வட மொழியில் உள்ளமையையுங் காட்டுவர். தொல்காப்பியனில்* வரும் சிற்சில நூற்பாக்களும் திருக்குறளில் வரும் துறவறவியற் பாட்டுக்களும், புற நானூறு போன்ற சங்க நூல்களில் வரும் சில செய்யுள்களுமே பண்டைத் தமிழரின் மெய்ப் பொருளுணர்வுக்குச் சான்றாக இப்பொழுதுள்ளன. இவை யொழிந்த முழு நூல்கள் இறந்துபட்டன போலும். பிற்றை நாளிற் றோன்றிய நூல்கள் அயற் சொல் இடையிட்ட மொழிபெயர்ப்பு நூல்களாகவும் அவற்றின்பாற்பட்ட சார்பு நூல்களாகவுமேயுள்ளன. தொல்காப்பியன் திருக்குறள் போன்றவற்றில் வட சொற்கள் சில விரவியுள்ளனவே யெனினும் அவை பெரும்பாலும் செந்தமிழ்ச் சொற்களானே அமைந்தவை. இதனால் இம் முழுமுதற்றமிழ் நூல்களும் ஆரிய நூல்களின் வழிவந்தவையெனக் கூறுவாருமுளர்! ஆயின், சிவஞானபோதம் போன்ற பிற்பட்ட நூல்கள் பெரும்பாலும் வடசொற்கள் தொடர்கள் என்பவற்றைத் துணைக் கொண்டே மெய்ப்பொருள் தெளிப்பனவாயுள்ளன. இதனால் வடமொழித் துணையின்றிச் செந்தமிழில் மெய்ப்பொருள் தெளித்தல் இயலாது என்னுங் கருத்தும் வேரூன்றிவிட்டது. இலக்கணக் கொத்தின் ஆசிரியர்,

> "அன்றியுந் தமிழ்நூற் களவிலை யவற்றுள்
> ஒன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ"

என்று தமிழுக்கு இழிவுகற்பித்தும் கூறிவிட்டார். ஐந்தெழுத்தாலொரு பாடையென் றறையவே நாணுவர் அறிவுடையோரே" என வாய்கூசாது தமிழன்னையைப் பழித்த இலக்கணக் கொத்தாசிரியர் வேறு யாதுதான் கூறார்? எனினும் தூய தனித்தமிழில் மெய்ப்பொருளுணர்த்து நூல்களில்லாமை ஒரு குறையே. இக் குறையை நிறைவு செய்தற்கும், அயன் மொழிகலவாத் தனித்தமிழில் அரும் பெருங்கருத்துக்களை யெல்லாம் விளக்கலாம் எனும் உண்மையை நாட்டுதற்கும் நம் பாண்டியனார் அவர்கள் வடமொழிப் பகவற்கீதையைத் தூய செந்தமிழில் மொழிபெயர்த்து நம்பியகவல் என்னும் நற்பனுவலாகத் தந்துள்ளார்.

மேலும் புலவர் பாண்டியனார், இம் மெய்ப் பொரு நூலுக்கு முதல்வனாகிய நம்பி தமிழ்மரபில் வந்தவனெனவும், அவன் கூறும் மெய்ப்பொருள் பண்டைத் தமிழர் கண்ட செம்பொருளே யெனவுந் துணிந்தே இத்தலைசிறந்த நூலைத் தண்டமிழிற் றந்தார். ஆசிரியரின் இக் கொள்கைக்கு நூலின் முகவுரையிலும் நூற்கண் ஆங்காங்கு வரும் குறிப்புரையிலும் சான்றுகள் உள்ளன. பகவற்கீதையிற் பார்ப்பனரையும் அவர்தம் வேதத்தையும் வேதவழக்கையும் பழித்துரைக்கும் பகுதிகள் வருகின்றன. இவற்றைக் கொண்டு இந்நூல் செய்தான் வேதவழக்கைப் போற்றும் பார்ப்பனரின் பாற்படாதான் ஒருவன் எனக் கருத இடமுண்டு. மொழி பெயர்ப்பாசிரி

யர் இப்பகுதிக்கு எழுதிய உரைக்குறிப்பில் அவன் செந்தமிழ் மரபின்வந்தவனே யெனச் சான்று காட்டி நிறுவ முயலுகின்றனர். (நம்பியகவல், பால் 2, செய்யுள் 42-46). இதனை ஆராய்ந்து முடிபு காண்பது அறிஞர் கடன்.

இத்தகைய விழுமியவொரு நூலுக்குப் பண்டைக்காலத்தே செவ்விய தமிழ் மொழிபெயர்ப்புக்கள் இருந்திருக்கக்கூடுமெனினும் அவை இன்று கிடைக்குமாறில்லை. சங்க காலத்திலே பெருந்தேவனார் என்னும் புலவர் ஒருவர் பாரதம் பாடினார் என அறிகின்றோம். எனவே பாரத மொழிபெயர்ப்பிற் பகவற்கீதையும் இடம் பெற்றிருத்தல் வேண்டும். எனினும் அம்மொழிபெயர்ப்பு எமக்குக் கிடைத்திலது. இக்காலத்துப் பாரதவெண்பாவென அச்சேறி வந்துலவும் நூலைப் பாடியவர் சங்ககாலப் பெருந்தேவனாரின் வேறாவர். அவர் கி. பி. எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராவர். கி. பி. பத்தாம் நூற்றாண்டுக்குரிய சின்னமனூர்ச் சாசனத்தில் வரும் "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்னும் தொடர் குறிக்கும் பாரத மொழிபெயர்ப்பு இவற்றின் வேறானதோ தெரிந்திலது. பிற்காலத்து வில்லிபுத்தூரார், நல்லாப்பிள்ளை ஆகியோர் தம் பாரத மொழிபெயர்ப்பிற் பகவற்கீதையும் இடம் பெற்றுள்ளது. இவற்றைவிடக் கீதையைத் தனியாக மொழிபெயர்த்தவர்களும் பலருளர். பதின்மூன்றாம் நூற்றாண்டினரான சீபட்டர் என்பார் விருத்தப்பாவினும், இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வாழ்ந்தவரான முத்து ஐயர் என்பார் வெண்பாவினும் கீதையை மொழிபெயர்த்துள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டினரான நாகநாத பண்டிதரும் கீதையை மொழிபெயர்த்துள்ளாரென அறிகிறோம். மேலும் இக்காலத்தில் உரைநடையிற் பல மொழிபெயர்ப்புக்கள் வெளிவந்துள்ளன. எனினும் இவையெல்லாம்,

'மரபு நிலை திரிதல் செய்யுட்கில்லை' (மரபியல் 91)
'மரபு நிலை திரியிற் பிறிது பிறிதாகும்' (மரபியல் 92)
'மரபு நிலை திரியா மாட்சிய வாகி
உரைபடு நூல் தாம் இருவகையியல .." (மரபியல் 94)

என வரம்பு செய்த தொல்காப்பியர் ஆணையை மீறி அயற் சொல்லும் அயன்மரபும் இடைவிரவச் செய்யப்பட்ட நூல்களாகும். இத்தகைய மொழிபெயர்ப்புக்களை நூலெனச் சான்றோர் கொள்ளாராகலின் மரபுநிலை திரியா மாட்சியினியன்ற மொழிபெயர்ப்பொன்று வேறு வேண்டப்பட்டது. இதனாற்றான் புலவர் பாண்டியனார் பகவற் கீதைக்குப் பிற மொழிபெயர்ப்புப் பலவிருப்பவும் தாம் புதிதாகவொன்றைச் செய்தார். ஏனைய மொழிபெயர்ப்பெல்லாம் இதன்முன் ஒளியிழந்துவிடுமென்பதை இவற்றையெல்லாம் புடைபடவைத்து ஒப்பு நோக்கிக் கற்பார் அறிவர்.

இனி, இந்து சமயக் கோட்பாடுகள் பலவற்றுக்கும் பொதுவாயுள்ள இப்பகவற் கீதைக்கு உரைகண்ட ஆசிரியர்கள் தத்தம் கொள்கைகளுக் கமையவே இதற்கு விளக்கங் கூறியுள்ளனர். இவர்களுட் சங்கரர் அத்துவைதக் கொள்கையையும், இராமானுசர் விசிட்டாத்துவைதக் கொள்கையையும், மத்துவர் துவைதக் கொள்கையையும், நிம்பார்க்கர் துவைதாத்துவைதக் கொள்கையையும், வல்லபர் சுத்தாத்துவைதக் கொள்கையையும் கீதையிற் காட்ட முயன்றுள்ளனர். இவ்வுரையாசிரியர்களைவிடப் பிற்காலத்தில் திலகரும் அரவிந்தரும் காந்தியடிகளும் தத்தம் அறிவுக்குப் பட்டவாறு கீதைக்கு விளக்கங் கூறியுள்ளனர். நம்பியகவல் ஆசிரியரோ இவ்வுரையாசிரியன்மார் வழிச் செல்லாது நூலாசிரியன் வழிநின்றே மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். உலகத்து மக்கண் மாட்டுக் கொண்ட பேரன்பினாற் கீதையாசிரியன் பல்வகைப்பட்ட நிலையிலுள்ளாரும் உய்திபெறுதற்குளவாய வழிகளையெல்லாம் தொகுத்து ஓரியைபுபட ஓதியுள்ள பெற்றியை நம்பியகவலாசிரியர் நயம்பட விளக்கிக் காட்டுகின்றனர். இஃது அவர் தம் நூற்குத் தனிச் சிறப்பை நல்குவதாயுள்ளது.

நம்பியகவல் ஒரு மொழிபெயர்ப்பு நூலேயாயினும், ஆசிரியர் அதனை ஆக்கியிருக்குந் திறனால் அஃதோர் முதனூல்போன்றே விளங்குகின்றது. முதனூற் பாடல்களைச் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்காது, பாடல்களின் பொருளை உளத்தில் வாங்கிப் புலத்திற் கருக்கொண்டு செந்தமிழ்ச் செய்யுளாகப் புலவர் பாடியுள்ளார். முதனூலில் எழுநூற்றொரு பாடல்கள் உள ; ஆண்டு ஒரு பொருள் நுதலிய இரண்டுமுதலிய பாடல்கள் உளவாதலான் அவற்றை ஓரோவொரு பாட்டான் மொழிபெயர்த்து அறுநூற்று நான்கு அகவல்களில் ஆசிரியர் இந்நூலை யாத்துள்ளனர். இந்நூற் பாடல் களை முதனூற் பாடல்களோடு ஒப்புநோக்க விழைவார்க்கு வாய்ப்பாக அகவலின் இறுதி தோறும் முதனூற் பாட்டெண் கொடுக்கப்பட்டுள. முதனூலின் பதினெண் பிரிவுகளையும் பதினெண் பாலாகக்கொண்டு புலவர் பாண்டியனார் அவையிற்றின் பெயரையெல்லாம் அருமையுற மொழிபெயர்த்துள்ளார்.

இனி, இந் நம்பியகவற் செய்யுள்களெல்லாம் சங்கச் சான்றோர் செய்யுளைப் போன்றே திட்பமும் நுட்பமும் ஒட்பமும் பெற்று மிளிர்கின்றன. அவற்றின் சொல்லாட்சியும் இலக்கணமுடிபுமெல்லாம் சங்கச் செய்யுளையே நினைவூட்டுகின்றன. அறியார் அவற்றைச் சங்கச் செய்யுளென்றே மயங்கினும் மயங்குவர். எடுத்துக் காட்டாக நம்பியகவற் செய்யுளொன்றையும் புற நானூற்றுச் செய்யுளொன்றையுங் கீழே காட்டுதும்.

"தெண்கடல் வளாகந் தெவ்வ ரின்றி
வண்பெருஞ் செல்வ மல்லன் மல்கிய
கொற்றக் குடைவேந் துற்றக் கடைத்தும்
வானக முழுதுந் தானொரு மன்னென
மேனிலை யாட்சி மேவியக் கடைத்து
நெஞ்சக முளப்பட வைம்பொறி வாட்டு
மஞ்சுதக் குறுமிவ் வலக்க
ணெஞ்சுதல் கூடுமென் றெண்ணலோ விலனே".

(நம்பியகவல். 2. 8)

"தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே".

(புற நானூறு 189)

இவ்விரு செய்யுளையு மொப்பு நோக்குவர்க்கு யாம் மேலே கூறியதனுண்மை புலனாகும். இனி, இந்நூலாசிரியரின் உரை நடையும் இவ்வாறே இளம்பூரணர், பரிமேலழகர், பேராசிரியர், சேனாவரையர் முதலிய பண்டை யுரையாசிரியரின் தண்டமிழ் நடைபோன்றே செறிவும் திண்மையும் வீறுங் கொண்டு விளங்குகின்றது. நம்பியகவலின் செய்யுளும் உரைக்குறிப்பும் எடுத்துக்கொண்ட பொருளுக் கேற்ப விழுமிய நடையினமைந்தது சாலவும் பொருந்துவதே. எனின், இற்றை ஞான்றை எந்திர நாகரிகத்தின் பாற்பட்டுக் கறங்குபோற் சுழலும் ஆடவரும் அரிவையரும் பரப்பமைந்து கற்றற்குரிய விழுப் பொருட் பனுவல்களைக் கற்றுத் தெளிதற்குரிய மனவமைதியிலராய் நுனிப்புன் மேய்தலையே விரும்பி நிற்பர். இத்தகையார் இந்நூலின் நடை கடிதென விதனைக் கடிதலுஞ்

செய்வர். அவர் தமக்கு விடையாக ஆசிரியர் நூன் முகவுரையிற் கூறிய ஒரு பகுதியினையே ஆசிரியரின் உரைநடைக்கும் எடுத்துக் காட்டாய் ஈண்டுத் தருதும்.

"எத்துணைக் காலமாயினு மெவ்விடமாயினும் பிறவுயிர்கள் கொண்டுண்ணினு முண்ணுதொழியினு மாமரம் மாம்பழ மல்லது பழா. பலா மரம் பலாப்பழ மல்லது பழா. பழா தொழியினு மொழியா. அங்ஙன மாதல் ஊழினுகும் பொருட்பெற்றி. அதனைக் குறை கூறுவார் மருளராவர். அதுபோலவே எத்துணைக்காலமாயினு மெவ்விடமாயினும் பிறர் கற்பினுங் கல்லா தொழியினும் புலவர் பலருந் தத்தமக்கியன்ற அறிவாற்றல்கட் கியந்த பலவாற்று னூல் செய்தலன்றிப் பிறர் வேண்டுமாற்று னூல் செய்யு மரபிலராவர். தத்தமக்கியன்ற நூலுரை செய்யா தொழிதலுமிலர். பிறர் புலவர்வழிச் செல்க வென்னுது புலவர் பிறர்வழிச் செல்க வென்றல் அறம் வழீஇப் பொருளின் பங்களின் வழியே சென்று அமைதியிழந்து புலம் பலுறு நாட்டுக்கே கடவதாகும்." (முகவுரை பா. 13, 14).

விழுமிய தமிழ்ப் பழ நூல்களிற் பயின்ற பயிற்சியினலே செய்யுளும் உரையும் தனிச் செந்தமிழ் நடையில் எழுதும் திறம் இவ்வாசிரியர்க்கு எளிதில் வாய்ப்பதாயிற்று. ஆசிரியர்க்குப் பழந் தமிழ்ப் பனுவல்களிலுண்டான பயிற்சியினால் அவர் பெற்ற சொற் பொருணலங்கள் யாவும் இந் நம்பியகவலின்கண் விளங்கக் கிடைத்தல் காணலாம். தொல்காப்பியத்தும் சங்க நூல்களிலும் பயின்று வரும் அரியதூய செந்தமிழ்ச் சொற்களை அவற்றின் பொருள்வளம் அறிந்து போற்றிய புலவர் பாண்டியனர் ஈண்டு வேண்டிய வேண்டிய நுண் கருத்துக்களையெல்லாம் விளக்க அவற்றை ஆண்டுள்ளார். மெய்யறிவு நூலிற் பயிலும் வட சொற்களுக்கெல்லாம் ஏற்ற தமிழ்ச்சொல் தரும் ஆசிரியரின் திறமைக்கு ஈண்டுச் சில எடுத்துக்காட்டுத் தருவாம்.

> புணர்ப்பு (யோகம்), நொசிப்பு (சமாதி), அணித்தாவு (உபநிடதம்), பெரும்பற்றப்புலமை (பிரம வித்தை), தூமருள் (சுத்தமாயை), புன்மருள் (அசுத்த மாயை). தொகையுணர்வு (சாங்கியம்), கடவுட் காதல் (பத்தி), ஞாலப் பேர்யாக்கை (விசுவரூபம்), வினைவயிற் புணர்ப்பு (கர்ம யோகம்), புலவயிற் புணர்ப்பு (ஞான யோகம்).

பிரம—சத்திரிய—வைசிய—சூத்திரர் என்னும் நாற்பாற் பிரிவினரை இந்நூலாசிரியர் புலவர், தலைவர், விலைஞர், வினைஞர் என மொழி பெயர்த்துள்ளார். இன்னும் இவைபோல்வன பல. அவை தம்மை நூலிற் காண்க.

ஆசிரியர் மரபு நிலை திரியாது மொழிபெயர்க்கும் பெற்றியை விளக்குதற்கும் சில எடுத்துக்காட்டுத் தருவாம். கீதையின் இரண்டாம் அத்தியாயத்தின் இரண்டாம் பாட்டில் "ஆரியருக்கு அடுக்காது" என்னும் பொருடரும் "அநார்ய யுஷ்டம்" என்னுந் தொடரைப் புலவர் பாண்டியனர் பின்வருமாறு மொழிபெயர்த்துள்ளனர்.

"என்றுந் தமிழர்க் கியைவ தன்றிது" (பால் 2. செய், 2.) வட மொழியில் வரும் 'ஆரியர்' என்னும் சொல்லைத் 'தமிழர்' என மொழி பெயர்த்தது பலர்க்கும் வியப்பாகத் தோன்றலாம். ஆரியர் என்னும் சொற்குப் பொருள் 'உயர்ந்தோர்' என்பதே. 'தமிழர்' என்னும் சொற்கும் இப் பொருளுண்மையை ஆசிரியர் குறிப்புரையிற் காட்டியுள்ளனர். "தமிழர்—இனியர்; ஆவார்: மக்களுளுயர்ந்தாரென்றவாறும்".

கீதை, அத்தியாயம் 4 பாட்டு 1 பின்வருமாறுள்ளது:

> 'யான் இந்த அழிவில்லாத யோகத்தை விவஸ்வானுக்கு உரைத்தேன்; விவஸ்வான் மனுவுக்கு உரைத்தான்; மனு இக்ஷுவாகுவுக்கு உரைத்தான்'.

இங்கே விவஸ்வான் என்பது சூரியனைக் குறிக்கிறது. மனு, விவஸ்வானின் மகன்; இக்ஷுவாகு மனுவின் மகன். நம்பியகவல் மொழி பெயர்ப்பில் இவ்வாரிய அரசர் பெயருக்குப் பதில் தமிழரசர் பெயர் வரக் காண்கின்றோம். அங்கே செங்கதிர்ச் செல்வனும், சோழனும் அவன் மகன் கிள்ளியும் பேசப் படுகின்றனர். சோழர் கதிரோன் மரபினர் என்பதும், சோழர் குல முதல்வன் மனு (மனுநீதிகண்ட சோழன்) என்பதும் அறிந்தால் ஆசிரியரின் மொழிபெயர்ப்பின் செம்மை விளங்கும். இவ்வாறே நூன் முழுதும் ஆசிரியரின் புலமையொளி சுடர்விடக் காணலாம்.

புலமை முற்றுரும் புலமை யற்றுரும் தமிழ் மரபை அழித்தும் இலக்கணத்தைச் சிதைத்தும் தம் மனம் போனவாறு போலிப் புன்னூல்களை எழுதிப்பரப்புவதே இக்காலத்திற் பெருவழக்காயிருக்கின்றது. இத்தகைய புல்லறிவாளர்க்குப் பொன்னுடை போர்க்கவும் புகழ்மாலை சாத்தவும் சங்கங்கள்பல மாரிக்காலத்துக் காளான் போலத் தோன்றுகின்றன. இக்கால வியல்பிதுவாகலின் புலவர் பாண்டியனர் போன்ற செம்புலச் செல்வர் குடத்துள் விளக்குப் போன்றே வாழ்தல் வேண்டும். அற்றை நாட் கூடலி லிருந்து தமிழாராய்ந்த புலவர் குழாம் போன்ற இற்றை நாளிலுமொன்றிருப்பின் புலவர் பாண்டியனர்க்கு அங்கே முதலிடங் கிடைத்திருக்கும். வள்ளுவர் குறளைக் கொண்டாடியது போன்றே ஏனைய புலவரெல்லாம் நம்பியகவலைக் கொண்டாடியிருப்பர். எனினும் தமிழ் மரபறிந்து போற்றும் புலவரும் தமிழார்வலரும் இக்காலத்தும் ஒரு சிலர் உண்மையால் அவரெல்லாம் இந்நூலை உச்சிமேற் கொண்டு போற்றுவர் என்பதுறுதி. இது புலவர்க்குப் புத்தமிழ்தம்; தமிழன்பர்க்கு நல்விருந்து; மொழிபெயர்ப்பாளர்க்கும் வழிகாட்டி; வீட்டியலறிவு விழைவார்க்கு விழுத்துணை. இஞ்ஞான்றைத் தமிழ் மாணுக்கரும் பிறரும் திருக்குறளையும் பரிமேலழகர் உரையையும் கற்பதுபோன்றே நம்பியகவலையும் அதன் உரையையுங் கருத்தூன்றிக் கற்பாராயின், அவர் பழந்தமிழ்நூற் சொற்பொருணயங்களை யறிந்தின்புறுவதோடு, தமிழின் அளப்பரும் ஆற்றலையும் அறிந்திறுமாப்பர்.

---

### கேள்விச்செவி

(30 ம் பக்கத் தொடர்ச்சி)

"நாழிகை யாறென்னும் முன்னே—மேனி
நடுங்கிய மான்கன்று வந்தே
குழறி யுரைத்தது மன்ன—இந்தப்
குவலயம் அழியுதே யென்று
கழறிய வார்த்தைகள் கேட்டே—எங்கள்
காடு நடுங்கிடுங் காணுய்"
மானினைக் கேட்கவே மன்னன்—நின்ற
மாமரப் பொந்தினுள் வாழும்
கானல் முயலினைக் காட்டச்—சிந்துங்
கண்ணைத் துடைத்திது சொல்லும்
"ஏழை முயலினுக் கபயம்—சிங்க
ஏறுநீ செய்திடும் உபயம்
கோழையென் றென்னை யிகழேல்—இந்தக்
குவலயம் குலுங்க நடுங்கி
மாவின் அடியில் நொறுங்கி—அந்தோ
மடமட வென்றது கேட்டேன்
ஓவென்றெல் லோரையுங் கூவி—நானும்
ஓடினேன் ஓடினேன் ஐயா
"அச்சந் தவிர்த்தியென் முதுகில்—ஏறி
அமர்ந்திடு வாயங்கு செல்வோம்
இச்சகம் அழிவதற் கான—பொல்லா
இன்னலை ஏதென வுணர்வோம்

(45 ம் பக்கம் பார்க்க)

# ஆனந்தம்

விநோபா பாவே

**மதுக்கரையில் விநோபாஜி அவர்கள் செய்த பிரசங்கத்தின் சுருக்கம்.**

ஆண்டவன் கோடி கோடி இன்பங்களைப் படைத்திருப்பதைக் கூறி அதற்காகப் பாரதியார் நன்றி கூறுகிறார். மனிதனுக்காக மட்டுமல்ல, உலகிலுள்ள ஒவ்வொரு ஜீவராசிக்குங்கூட ஆண்டவன் இன்பத்தைப் படைத்திருக்கிறார் என்பதே பக்தி நிலை கூறும் உண்மை.

உண்மையில் ஆனந்தம் என்பது நம் உருவந்தான். ஆத்மாவின் சொரூபமே ஆனந்தம். ஆனந்தம் இல்லாமல் ஒரு கணங்கூட உயிரோடிருக்கும் பிராணி உலகில் இல்லை. ஒவ்வொரு கணமும் நாம் ஆனந்தத்தை அநுபவித்தாலும், அப்படி ஆனந்தத்தை அநுபவிக்கிறோம் என்ற உணர்வு எப்போதும் இருப்பதில்லை. நல்ல காற்று நிரந்தரமாக நமக்குக் கிடைத்துக் கொண்டிருப்பதே ஒரு பெரிய ஆனந்தமாகும். ஆனால் இதை நாம் உணர்வதில்லை; சுவாசிப்பதற்குக் காற்றுக் கிடைப்பது பெரிய ஆனந்தம் என்பதை நாம் உணர்வதில்லை. காற்று இல்லாத அறையில் சிறிது நேரம் பூட்டி வைத்தால், அப்பொழுதுதான் வெளியில் எவ்வளவு சுகமான காற்றுக் கிடைத்தது என்று உணர்வோம். ஈரல் கெட்டு, க்ஷயம் பீடித்து, மூச்சுத் திணறும்போது தான், முன்பு எவ்வளவு நல்ல முறையில் சுவாசித்தோம் என்ற ஆனந்த உணர்வு ஏற்படுகிறது. இரவில் நன்றாகத் தூங்கிய நோயாளி, காலையில் ஆனந்தத்தை உணர்கிறான். ஆனால் நோயற்ற பிறருக்குத் தூக்கத்தில் ஆனந்த உணர்வு ஏற்படுவதில்லை. ஏனென்றால், அவர்கள் தினந்தோறும் நல்ல தூக்கம் கொள்கிறார்கள். நம்மை முற்றும் ஆனந்தம் சூழ்ந்திருக்கிறது. மேலும் கீழும் எல்லாப் பக்கமும் எங்கு நோக்கினும் ஒரே ஆனந்தமே.

நீர் குடிப்பது, பால் குடிப்பது, பழம் சாப்பிடுவது, பட்டினியாக வந்தவனுக்குச் சோறு போடுவது, ஏகாதசியன்று உபவாசம் கிடப்பது இந்த அனைத்திலும் ஆனந்தம் அடைகிறோம். பீடி குடிப்பதில் ஆரம்பித்து ஏகாதசி உபவாசம் வரையில் எல்லாம் ஆனந்தத்தின் பல முறைகளே. ஆனந்தத்தின் ரூபம் ஒன்றுதான். அதில் ஒன்றிவிடுகிறோம். பீடி குடிப்பவர்கள் அதிலுள்ள இன்பத்தில் ஏகாக்கிரமாகி விடுகிறார்கள். பீடியிலிருந்து சுருள் சுருளாகப் புகை மேலே கிளம்பக் கிளம்ப அதன் பின்னாலேயே குடிப்பவர்களும் மேலே போவதைப் போல உணர்ச்சி கொள்கிறார்கள்; அதாவது புகை விடுவதிலுள்ள ஆனந்தத்தில் அவர்கள் இரண்டறக் கலந்து விடுகிறார்கள். என்னை வரவேற்கும்போது கூடச் சிலர் புகை பிடிப்பதைப் பார்க்கிறேன். அதைப் பார்த்து எனக்கு மிகவும் சந்தோஷம். பீடி குடிப்பதில் பொதுவாக ஜனங்கள் வெட்கப்படுவார்கள். அந்த வெட்கத்தைக்கூட மறந்துவிட்டுப் புகை விடும் ஆனந்தத்தில் லயித்து விடுகிறார்களல்லவா? அதைப் பார்த்து எனக்குச் சந்தோஷமே.

ஆனந்த சுத்தியே மனிதனுடைய லட்சியம். ஆனந்த சித்தி மனித லட்சியமல்ல. பெரிய வேதாந்திகள் கூட அனைவருக்கும் ஆனந்தம் கிடைப்பதற்கான முயற்சி வேண்டும் என்று கூறுகிறார்கள். விஷயம் புரியாமல்தான் அப்படிக் கூறுகிறார்கள். ஆனந்தத்தை அடைய, எவ்விதக் கஷ்டமும் யாரும் பட வேண்டியதில்லை. ஆனந்தம் அடைய முயன்றால் துன்பந்தான் விளையும். "தூங்குவதற்கு எவ்வளவோ முயற்சி செய்தும் தூக்கம் வரவில்லையே" என்று ஒரு சகோதரர் என்னிடம் குறைப்பட்டார். அவர் தூக்கத்துக்கு முயற்சி செய்வதால் தான் தூங்க முடியவில்லை. முயற்சி என்பது தூக்கத்துக்கு எதிரி. "தூக்கம் இல்லையே என்ற கவலையை விடுங்கள். உடனே தூக்கம் வரும்" என்று அவருக்குப் பதில் கூறினேன். அதே போல, அறிவு வேண்டும் என்று முயலும் போதும் துன்பமே விளைகிறது. மனிதர்கள் ஆனந்தம் அடையவேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக அனைவரும் அழுகிறார்கள். "என் வாழ்விலே பரிசுத்தமான ஆனந்தம் அடைகிறேன்" என்று சொல்பவரை இந்த உலகில் பார்ப்பதே துர்லபமாகிவிட்டது. இன்பத்தை அடையமுயன்று துன்பமே அடைகிறார்கள்.

மக்களுக்கு ஆனந்தம் சுத்தமான முறையில் கிடைக்க வேண்டும். தன்னைத்தானே வெட்டிக்கொள்ளாத ஆனந்தமே சுத்தமானது. பீடி குடிப்பதில் அதிக ஆனந்தம் இருக்கிறது. ஆனால் நாளடைவில் பீடி குடிப்பதால் ஈரல் கெடுகிறது. "கான்சர்" (புற்று நோய்) வந்துவிட்டதே என்று வைத்தியர் கூறுகிறார். கான்சர் வருகிறதோ இல்லையோ ஈரல் கெடுவது நிச்சயம். பீடி குடிப்பதிலுள்ள ஆனந்தம் ஆனந்தத்தையே அழித்துவிடுகிறது.

தற்கொலை செய்துகொள்ளாத ஆனந்தமே சுத்தமான ஆனந்தம். இந்தக் காலத்தில் நமக்குக் கிடைக்கும் அற்ப இன்பம் ஆனந்தத்தையே அழிப்பதாக இருக்கிறது. இரவில் கண்விழித்துச் சினிமாபார்க்கிறோம்; நாவல் படிக்கிறோம். அதனால் கண் கெடுகிறது. கண்ணுக்கு உண்டான பார்வை ஆனந்தம் அழிகிறது. கள் குடிப்பதால், மூளை கெடுகிறது. காசு செலவழிகிறது. அண்டை அயலாருடன் சண்டை, மனைவியுடன் குஸ்தி, வீட்டில் தகராறு, குழந்தைகளின்மீது வெறுப்பு இவையே அதனால் ஏற்படும் பலன்கள். குடிப்பதிலுள்ள ஆனந்தம் மூல ஆனந்தத்தையே ஒழித்துவிடுகிறது. ஆகவே, எந்த ஆனந்தம் ஆனந்தத்தையே அழிக்காதோ, அதுதான் சுத்தமானது. இதற்கு அடக்கம் தேவை.

காய்கறியில் உப்புச் சேர்த்தால் ருசியாக இருக்கிறது. ஆனால் "எவ்வளவு அதிகம் உப்புக் கூடுகிறதோ அவ்வளவு ருசியும் அதிகமாகிறது" என்று சொல்ல முடியாது. ஆகவே, அதற்கு ஓர் எல்லை இருக்கிறது. அந்த எல்லைக்குள் உப்புச் சேர்ப்பதை மட்டுப்படுத்தினால்தான், காய் கறி நன்றாக இருக்கிறது இனிப்புச் சாப்பிடுவதில் மிகவும் பிரியமுள்ள ஒரு சகோதரர் தம் மனைவியிடம் நிலக்கடலை லட்டு பண்ணச் சொன்னார். நன்றாகவே லட்டு செய்து மனைவி கொடுத்தாள். "வெல்லம் குறைவாக இருக்கிறது; அதனால் லட்டு அவ்வளவு சரியாக இல்லை" என்று அந்தச் சகோதரர் குறை கூறினார். மறு நாள் வெல்லத்தை அதிகமாகச் சேர்த்து லட்டு செய்து மனைவி கொடுக்கவே, சாப்பிட்டுப்பார்த்து, "கொஞ்சம் தேவலை" என்றாராம் அவர். அதைக் கேட்ட மனைவி, "கொஞ்சந்தானா தேவலை? இன்று நிலக்கடலையே சேர்க்காமல் வெறும் வெல்லத்தைத்தானே லட்டு பண்ணிக் கொடுத்தேன்!" என்றாளாம் அவள். இனிப்பையே

அதிகமாகச் சாப்பிட்டுச் சாப்பிட்டு ருசி கெட்டுப்போய், கடைசியில் இனிப்பையே இனிப்பு அழித்துவிட்டது. ஒரு ரூபாய் லாட்டரியில் போட்டுப் பத்தாயிரம் ரூபாய் இனும் கிடைத்தால், கிடைத்த அதிர்ச்சியிலே இருதயம் நின்று போகிறது. இதில் உண்டான ஆனந்தம் ஆதார ஆனந்தத்தையே அழிக்கிறது. ஆகவே, ஆனந்தத்தை ஓர் எல்லைக்குள் கட்டுப்படுத்த வேண்டும். ஆனந்தம் சுத்தமாக வேண்டுமானால், அதற்கு ஓர் எல்லைவேண்டும்.

அதிகமாக உற்பத்தியைப் பெருக்கினால் ஆனந்தம் அடையலாம் என்றும் இந்தக் காலத்தில் கூறுகிறார்கள். அமெரிக்காவில் உற்பத்தி அபரிமிதமாகப் பெருகியிருக்கிறது. இருந்தாலும் அங்கே ஆனந்தம் பெருகவில்லை. தற்கொலைகள் அங்கேதான் அதிகம். மற்ற நாடுகளைக் கண்டு பயந்து எப்போதும் யுத்த முஸ்தீப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளை அமெரிக்கர் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, வளர்த்துக்கொண்டே போனால் ஆனந்தம் கிடைக்காது. ஆனந்தத்துக்கு ஓர் எல்லை தேவைப்படுகிறது. அந்த எல்லையை மீறினால் ஆனந்தம் தன்னையே அழித்துக் கொண்டு விடும்.

ஆனந்த சுகத்திற்கு அடக்கம் வேண்டும். அப்போதுதான் ஆனந்தம் நிலைக்கும். அடக்கம் என்பது ஆனந்தத்தின் பிராணன் அடக்கம் என்றால் துன்பப்படுவது என்றும், ஆனந்தத்தைத் தடைப்படுத்துவது என்றும் கூறுவது அறிவீனம். ஆனந்தத்துக்கு எல்லை கட்டி, அடக்கத்தின் தந்திரத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். இதுவே சமூகத்தில் கடைப்பிடிக்க வேண்டிய யுக்தியாகும். எந்தச் சமூகத்தில் அடக்கத்தைப்பற்றிய படிப்பினை இருக்கிறதோ அங்கே ஆனந்தம் நிலையாகும்.

ஆனந்த சுத்திக்கு இன்னொரு காரியமும் இருக்கிறது. ஆனந்தத்தில் எல்லாரும் பங்கு கொள்ளும்படி செய்ய வேண்டும். உங்களுக்குக் காற்றுக் கிடைக்காமல் நீங்கள் துன்பப்படும்போது, எனக்கு மட்டும் நல்ல காற்றுத் தடையில்லாமல் கிடைக்குமானால் எனக்கு ஆனந்தம் ஏற்படாது. எனக்கு முன்னால் ஒருவன் பட்டினியால் துடிக்க, எனக்கு மட்டும் நல்ல ஆகாரம் கிடைக்குமானால் எனக்கு ஆனந்தம் இல்லை. சுத்தமான ஆனந்தம் கிடைக்க, ஆனந்தத்தில் மற்றவர்களையும் பங்காளிகளாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

எந்த ஆனந்தத்தில் மற்றவர்களுக்குப் பங்கு இல்லையோ அந்த ஆனந்தம், ஆனந்தத்தையே அழித்துவிடும். பின்பு துன்பந்தான் விளையும். "எத்தனை கோடி இன்பம் வைத்தாய், இறைவா" என்று பாரதியார் பாடுகிறார். ஆனால், கடவுள் துன்பத்தைத்தான் படைத்திருக்கிறார் என்ற அனுபவமே மக்களுக்கு ஏற்படுகிறது. எது உண்மை என்று பார்க்க வேண்டும். அழகான மாம்பழத்தை ஆண்டவன் சிருஷ்டித்திருக்கிறான். அதை அதிகமாகச் சாப்பிட்டு நோய்வாய்ப்படுகிறோம். இது கடவுளின் குற்றமா? ஆனந்தத்தைச் சிருஷ்டித்திருப்பது ஆண்டவனுடைய பெருமை; அதைத் துன்பமயமாக்கியதுதான் நமது பெருமை! அவர் அமிர்தமாகப் படைத்ததை, நமது திறமையால் விஷம் ஆக்கிக் கொண்டோம். மாம்பழத்தால் நோய் ஏற்படச் செய்யும் காரியம் மனிதனால் தானே முடியும்? அழகான மாம்பழத்தை ஆண்டவன் படைத்திருக்கிறான்; அதைக் கொஞ்சம் அடக்கத்தோடு சாப்பிட்டிருந்தால் திருப்தி ஏற்பட்டிருக்குமே? நாவடக்கம் இல்லாததால் நோய் ஏற்படுகிறது.

பக்கத்திலுள்ளவர்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கும்போது, நாம் மட்டும் இன்பம் அநுபவித்தால் அது அதிக நாள் நிலைக்காது. நாம் வெட்கம் இல்லாமல் இருக்கும் வரைக்கும் இன்பமாய் இருக்கலாம். ஆனாலும் பக்கத்திலுள்ள துன்பம் நம்மிடமும் பிரதிபலிக்கத்தான் பிரதிபலிக்கும். கிடைத்த மாம்பழத்தை நம் குழந்தைகளுக்குக் கொடுத்துச் சாப்பிட்டால், அதிக ஆனந்தம் ஏற்படுகிறது; மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்போது வளர்கிறது. அப்போதுதான் இன்பம் நிலைக்கும். மற்றவர்களோடு மோதிக்கொண்டே இருக்கும்போது ஆனந்தம் நிலைக்காது. சமூகத்தில் மோதலும் சண்டையும் பெருகும்போது ஆனந்தத்தை இழப்போம். ஆனந்தத்தைச் சுத்தப்படுத்த அடக்கமும், பகிர்ந்துகொண்டு வாழும் தன்மையும் வேண்டும். குழந்தைகளுக்கு முதலில் கொடுத்துவிட்டு எஞ்சியதைச் சாப்பிடுவதில்தான் தாய்க்கு ஆனந்தம். குழந்தைகளைக் கவனிக்க வேண்டிய பொறுப்புத் தாயிடம் இருக்கிறது. முதலில் தாய் சாப்பிட்டுவிட்டுப் பின்புதான் குழந்தையைப் பற்றிக் கவனிக்க வேண்டும் என்று எந்தத் தாயாவது சொல்கிறாளா? ஆனால், இன்றைய தேச சேவகர்கள் இந்த முறையைத்தான் கையாளுகிறார்கள். தேசத்துக்கு ஊழியம் செய்வதால் முதலில் தமக்கு நல்ல உணவு கிடைக்க வேண்டும் என்கிறார்கள். இப்படி ஒரு தாய் கூறினால், அந்தத் தாயைப்பற்றி எந்தக் கவிஞன் பாடுவான்? தாயின் பெருமை முதலில் குழந்தைக்குத் தருவதில் தான் இருக்கிறது. அதில்தான் அவள் ஆனந்தம் அடைகிறாள். ஆகவே, இன்பத்தை எவரும் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டும். அப்படிப் பகிர்ந்து கொண்ட பின்னும் மீதியை அடக்கம் இல்லாது அநுபவித்தாலும் துன்பமே விளையும். அடக்கம் அவசியம். இந்த இரண்டு விஷயங்களையும் கவனித்துப் பாதுகாத்தால், ஆனந்தம் சுத்தியாகும்.

---

## கடல்

(10 ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு நல்ல பாட்டிற்கும் ஒரு கூடாத பாட்டிற்குமிடையே உள்ள பேதத்தைக் கண்டுகொள்வது இலேசன்று. பாட்டிற்கு உயிராக உள்ள உணர்ச்சியனுபவம் அமையவேண்டிய வகையில் ஒரு பாட்டில் அமைந்திராவிடின் அதை ஒரு நல்ல பாட்டு என்று கூறுமுடியாது. இக்காலத்துப் புலவர்கள் பாடும் பாட்டுகளுட் பல நாம் இப்பொழுது ஆராய்ந்த பாட்டைப் போன்றவை. சுப்பிரமணிய பாரதியார் கையாண்ட யாப்பு வகைகள் கடினமானவையல்ல. அவற்றுள் ஒன்றைக் கையாண்டு யாதேனும் ஒரு விஷயத்தைப்பற்றிச் சில செய்யுட்களை இயற்றிவிடின் கவிதை புனைந்ததாகும் எனச் சிலர் கருதிக்கொள்ளுகின்றனர். காடு, மலை, ஆறு முதலியனவற்றைப் பொருளாகக் கொண்ட பாட்டுக்கள் பல ஆங்கிலத்தில் உள. அவற்றை இலேசான செய்யுள் நடையில் மொழிபெயர்த்துவிட்டால் பாட்டாகிவிடும் என்று சிலர் எண்ணுகின்றனர். ஆங்கிலப் பாட்டுக்களுக்கு உயிராக உள்ள உணர்ச்சியனுபவம் எத்தகையன என்பதைக் கண்டு அவற்றையும் வெளிப்படுத்தத் தெரியாத காரணத்தினாலேதான் நாம் மேலே காட்டிய பாட்டுக்கள் போன்றவை வெற்றுடம்புகளாகக் கிடக்கின்றன.



யப்பானியப் பிரதமர் கிஷி அவர்களை இலங்கைப் பிரதமர் விமான நிலையத்தில் வரவேற்றார்

# யப்பானியப் பிரதமரின் இலங்கை விஜயம்

யப்பானியப் பிரதமர் திரு. என். கிஷி அவர்கள் மே மாதம் 28 ந்திகதி செவ்வாய்க்கிழமையன்று ஒரு நல்லெண்ணத் தூதராக விமான மூலம் இலங்கை வந்து சேர்ந்தார். பிரதமருடன் 18 பேரைக் கொண்ட கோஷ்டி ஒன்றும் வந்தது. அதில், யப்பானிய பாராளுமன்றத்தின் இரு சபைகளையுஞ் சேர்ந்த அநேக அங்கத்தவர்களும் இருந்தனர்.

உள்நாட்டலுவல் அமைச்சரும் போக்குவரத்து பொதுவேலை அமைச்சரும், பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சரின் நிரந்தரக் காரியதரிசியும் விமானத்தில் ஏறி பிரதமரையும் இதர பிரமுகர்களையும் அழைத்துக் கொண்டிறங்கினர். கீழே இறங்கி வந்ததும், பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் யப்பானியப் பிரதமரைக் கைகுலுக்கி வரவேற்றபின் தனது மனைவியையும் மகனையும் அவருக்கு அறிமுகஞ் செய்து வைத்தார்.

பின்னர், பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சரின் நிரந்தரக் காரியதரிசி, அங்கு குழுமியிருந்த உயர்தர அரசாங்க அதிகாரிகளையும், இலங்கையிலுள்ள யப்பானிய ஸ்தானீகர் திரு. எஸ். யூகி, யப்பானில் இலங்கை ஸ்தானீகராகக் கடமையாற்றும் சேர். சுசந்தா டீ பொன்சேகா ஆகியோரையும் யப்பானியப் பிரதமருக்கு அறிமுகஞ் செய்து வைத்தார்.

அதையடுத்து, இலங்கையின் முப்படைகளதும் கட்டளைத்தலைவர்கள், அங்கு அமைக்கப்பட்டிருந்த மேடைக்கு யப்பானியப் பிரதமரை அழைத்துச் சென்றனர். அம்மேடை மீது நின்று போர் வீரரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றபின், பிரதமர் கீழிறங்கி அணிவகுப்பைப் பார்வையிட்டு மீண்டும் மேடைக்கு வந்து இரண்டாம் முறையாக மரியாதையை ஏற்றார்.

பிரதமர், இவ்வைபவம் முடிவடைந்ததும், பிரதான நீதிபதி, செனற் சபைத் தலைவர், மந்திரிகள், அவர்களது மனைவியர்கள் முதலானோருக்கு முறையே அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டார். இலங்கையிலுள்ள பிறநாட்டு ராஜியத் தூதவராலயங்களின் தலைவர்கள், அரச ஆசார வரவேற்பாளரால் (புரொட்டக்கோல்), பிரதமருக்கு அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டனர்.

### விமான நிலையத்தில் சொற்பொழிவு

பிரமுகர்கள் இங்கு வரும்போது கையொப்பமிடுதற்காக, விமான நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள புத்தகத்தில் பிரதமர் கையொப்பமிட்டபின் அங்கு பேசுகையில் கூறியதாவது :—

"இந்த மனமார்ந்த வரவேற்புக்கு நான் உங்களுக்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன். இயற்கைவனப்புக்கும், பண்டைய கலாச்சாரச் செல்வங்களுக்கும் பேர்போன இத்தீவுக்கு விஜயஞ் செய்ய வேண்டுமென்ற எனது நெடுநாள் ஆசை இன்று

பூர்த்தியாகியிருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. மேன்மைதங்கிய மிக்காசா இளவரசரும் இளவரசியும் கடந்த வருடம் இங்கு விஜயஞ் செய்த் காலை நீங்கள் அளித்த அமோக வரவேற்பையும், தாராள உபசாரங்களையும் எனது மக்கள் நன்றியறிதலுடன் நினைவுகூருகிறார்கள். அவர்களது விஜயம் எங்கள் இரு நாடுகளுக்கிடையிலும் பாரம்பரிய நட்புரிமையை மேலும் பலப்படுத்தப் பெரிதும் உதவியுள்ளது. யப்பானுடன் இவ்வளவு நட்புப் பாராட்டும் உங்கள் நாட்டுக்கு வரும் முதலாவது யப்பானியப் பிரதம மந்திரி என்ற பெருமை எனக்கே கிடைத்துள்ளது. இந்த விஜயம் இவ்விரு நாடுகளையும் பிணைக்கும் நட்புக் கயிறாக இருக்குமானால், அது எனக்கு ஆழ்ந்த மகிழ்ச்சியையளிக்கும்''.

பின்னர் திரு. கிஷி அவர்களும் அவரது கோஷ்டியும் இராணி மாளிகைக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். தெருவெல்லாம் குழுமியிருந்த மக்கள் பிரதமரையும் கோஷ்டியையும் பார்த்துக் கரகோஷஞ் செய்து தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். இராணி மாளிகையில் பிரதமரையும் கோஷ்டியையும் மகா தேசாதிபதி வரவேற்றார்.

### கொழும்பு மாநகர சபையளித்த வரவேற்பு

மேயர் திரு. வி. ஏ. சுகததாசா அவர்கள் யப்பானியப் பிரதமருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கையில் கூறியதாவது :—

"யப்பானிய இராச குடும்பத்தைச் சேர்ந்த மேன்மைதங்கிய மிக்காசா இளவரசரையும், இளவரசியையும் வரவேற்கும் பாக்கியம் கடந்த வருடம் எமக்குக் கிடைத்தது. நீங்கள் தென் கிழக்காசிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்யும் உங்கள் திட்டத்தில் இலங்கையையும் சேர்த்துக் கொண்டதும் இன்று எங்கள் மத்தியில் வந்திருப்பதும் எமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. இந்த இரு நாடுகளுக்குமிடையில் நிலவும் நட்பு, நல்லெண்ணத் தளைகளைப் பலப் படுத்தத் தங்கள் விஜயம் எமக்கு உதவும்.

கடந்தயுத்தத்துக்குப் பிந்திய வருடங்களில் உங்கள் நாட்டுடன் நட்புக் கொண்டு ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தில் யப்பான் அனுமதிக்கப்படுவதை ஆதரித்த தேசங்களுக்குத் தங்கள் சொந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் நல்லெண்ணத் தூதாக உங்கள் சுற்றுப் பிரயாணம் அமைந்துளது.

அணுக்குண்டு ஆயுதங்களைத் தடை செய்து அவற்றின் உபயோகத்தை முற்றாக ஒழித்துக் கட்டிவிட வேண்டுமென்பது தங்கள் கருத்தை மிகவும் கவர்ந்துள்ள ஓர் முக்கிய விஷயமாகும். உலக சமாதானம் மானிட வர்க்கத்தின் சுபீட்சவாழ்வு என்பவற்றை முன்னிட்டு இந்த முயற்சியில் உங்களுக்குச் சகல வெற்றிகளும் கிடைக்க வேண்டுமென விழைகிறோம்."

### யப்பானியப் பிரதமரின் பதில்

வரவேற்புரைக்குப் பதிலளித்துப் பேசுகையில் யப்பானியப் பிரதமர் கூறியதாவது :—

"இலங்கையும் யப்பானும் ஆசிய நாடுகள் என்ற வகையில், பௌத்த தர்மம், பௌத்த பாரம்பரியங்கள் என்பவற்றின் அடிப்படையில் வளர்ந்து வந்துள்ளன. அத்துடன் அவை மனிதரின் பொது உணர்ச்சிக்குக் கட்டுப்பட்டவையாகும். கடந்த வருடம், புத்த ஜயந்தி விழாக்களின் போது, மாட்சிமை தங்கிய மிக்காசா இளவரசரும், இளவரசியும் இந்நாட்டுக்கு விஜயஞ் செய்த காலை உங்கள் அரசாங்கமும், மக்களும் அவர்களை உற்சாகமாக வரவேற்றனர்.

இப்பொழுது இந்த உபசார வைபவத்தில் நீங்கள் யாவரும் காட்டும் நல்லெண்ணம் என்னை மிகவும் கவர்ந்துவிட்டது. இதை நீங்கள் எனக்கு மாத்திரம் காட்டும் ஓர் நல்லெண்ண உணர்ச்சியாகவன்றி, நான் இன்று பிரதிநிதித்துவம் வகிக்கும் புதிய யப்பான் தேசத்துக்கு நீங்கள் காட்டும் அன்புணர்ச்சியாகவே கருதுகிறேன்.

இந்த நகரமே, பிரசித்திபெற்ற கொழும்புத் திட்டத்தின் பிறப்பிடமாகும். யப்பான் மூன்று வருடங்களுக்கு முன் இத் திட்டத்தில் சேர்ந்தது. அந்தக் காலந் தொட்டு, கொழும்புத் திட்ட மூலமாகவோ, இதர வழிகளிலோ யப்பான் இலங்கையுடனும் மற்ற அயல் நாடுகளுடனும் அவற்றின் பொருளாதார அபிவிருத்திக்காக ஒத்துழைத்துள்ளது. எதிர்காலத்திலும் இவ்வித ஒத்துழைப்பைத் தொடர்ந்து அளிக்க நாம் கருதியுள்ளோம்.

இலங்கை அதிக காலமாக ஆவலுடன் எதிர்பார்த்த சுதந்திரத்தைப் பெற்ற காலந் தொட்டு அந்நாட்டு மக்களின் சளையா முயற்சியால் அரசியல், பொருளாதார, கலாச்சாரத் துறைகளில் இத்தகைய அபூர்வ சாதனைகளை நிலை நாட்டியுள்ளமை யப்பானிய மக்களின் உள்ளத்தை உண்மையிலேயே கவரும் ஓர் அம்சமாகும்."

இவ்வைபவம் முடிந்தபின் அன்றிரவு யப்பானியப் பிரதமருக்கு இராணி மாளிகையில் மகாதேசாதிபதியால் ஓர் இராஜாங்க விருந்தளிக்கப்பட்டது.

அடுத்த நாள் புதன்கிழமை யப்பானியப் பிரதமர், இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவை அவரது காரியாலயத்தில் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

அன்று பிற்பகல் பிரதமர் கிஷி அவர்கள் கண்டிக்கு விஜயம் செய்தார். அவர் அங்கு சென்றதும், கண்டி மேயர் திரு. ஈ. எல் சேனநாயக்கா, கண்டிப் பிரதிநிதி திரு. பி. தென்னகோன், கண்டி மாகாண அதிபர் திரு. டி. ஜி. எல். மிஸ்ஸோ ஆகியோர் வரவேற்றனர்.

அங்கு புனித தந்தம் வைக்கப்பட்டுள்ள தலதா மாளிகைக்கு திரு. கிஷி அவர்கள் சென்றபோது தியவதன நிலமை ஸி. பி. நுகவெல திசாவை அவர்களால் வரவேற்கப்பட்டார். புனித தந்தம் வைக்கப்பட்டுள்ள பூசை அறைக்கு யப்பானியப் பிரதமரும் உடன்வந்த கோஷ்டியினரும் அழைத்துச் செல்லப்பட்டனர். திரு. கிஷி, தலதா மாளிகைக்கு 1000 ரூபா நன்கொடையளித்தார்.

### கண்டியில் வரவேற்பு

கண்டி மேயரும் மாநகரசபை அங்கத்தவர்களும் யப்பானியப் பிரதமருக்கு ஓர் விருந்துபசாரமளித்தனர். மேயர் திரு. ஈ. எல் சேனநாயக்கா அவர்கள் பேசுகையில், மிக்காசா இளவரசரின் விஜயமும் பிரதமர் கிஷி அவர்களின் விஜயமும் இலங்கைக்கும் யப்பானுக்குமிடையில் நூற்றாண்டுக் கணக்கில் நிலவிய நற்றொடர்புகளைப் பலப்படுத்திவிட்டன என்று கூறியதுடன், உலக சமாதானத்துக்கும், இதர நாடுகளுடன் சமாதானமாக உடனிருந்து வாழும் கொள்கைக்கும் கிஷி அவர்கள் அளிக்கும் முக்கியத்துவத்தையும் வியந்தார்.

திரு. கிஷி அவர்கள் பதிலளிக்கையில், தான் இலங்கைக்கு விஜயஞ் செய்யத் தீர்மானித்த அதே நேரத்தில், கண்டிக்குச் செல்ல வேண்டுமென்றும் முடிவுகட்டியதாகக் கூறினார். கண்டி, சரித்திரப் பிரசித்தி வாய்ந்த பட்டின மென்றும், பௌத்த உலகத்தின் முக்கிய பட்டினங்களுள் அதுவும் ஒன்றாகுமென்றும் அந்நகரின் இயற்கை வனப்பு தன்னை மிகவும் கவர்ந்து விட்டதாகவும் பிரதமர் கிஷி மேலும் சொன்னார்.

வியாழக்கிழமை காலை திரு. கிஷி சொற்ப நேரம் குழிப்பந்தாட்டத்திலும் (கோல்வ்) குதிரைச் சவாரியிலும் ஈடுபட்டார். சற்று நேரத்தின் பின்பு, உணவு, விவசாய அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன; கைத்தொழில், கடற்றொழில் மந்திரி திரு. பி. எச். டபிள்யு. டி சில்வா; வர்த்தக மந்திரி, திரு. ஆர். ஜீ. சேனநாயக்கா; யப்பானிலுள்ள இலங்கை ஸ்தானீகர் சேர். சுசந்தா டி பொன்சேகா ஆகியோரை கண்டி இராச மாளிகையில் ஓர் மகாநாட்டில் பிரதமர் கிஷி சந்தித்தார். அங்கு நடைபெற்ற பேச்சுவார்த்தைகள், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக யப்பான் அளிக்கக் கூடிய உதவிபற்றியனவாகவே யிருந்தன.

## பிரதமர் கொழும்பு திரும்புதல்

அன்றையதினம் பிற்பகல் திரு. கிஷி அவர்களும் உடன் சென்றவர்களும் கண்டியை விட்டுக் கொழும்புக்குப் புறப்பட்டனர். வழியில், பேராதனையிலுள்ள பல்லினத்தாவரத் தோட்டத்துக்கு அவர்கள் விஜயஞ் செய்தபோது, பிரதமர் கிஷி அங்கு ஒரு மரக்கன்றை நட்டார். பேராதனையிலுள்ள சர்வகலாசாலைக்கும் அவர்கள் சென்றனர்.


கொழும்பு வந்து சேர்ந்ததும், இலங்கைப் பிரதமர் பண்டாரநாயக்கா, திரு. கிஸி அவர்களைக் கௌரவிக்கு முகமாக 'ரெம்பிள் ட்றீஸ்' எனப்படும் தனது உத்தியோக பூர்வமான வாசஸ்தலத்தில் அளித்த விருந்தில் பிரதமர் கிஷி கலந்து கொண்டார். அன்றிரவு இலங்கையிலுள்ள யப்பானிய ஸ்தானிகர் திரு. எஸ். யூகியும் அவருக்கு ஓர் விருந்தளித்தார்.

## கூட்டறிக்கை

அடுத்தநாள் வெள்ளிக்கிழமை இரு நாட்டுப் பிரதமர்களும் ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டனர். அவ்வறிக்கை வருமாறு:—

யப்பானியப் பிரதம மந்திரி திரு. நொபுசுகி கிஷி அவர்கள் மே மாதம் 28 ந் திகதி இலங்கைக்கு விஜயஞ்செய்து மே மாதம் 31 ந் திகதிவரை இலங்கை அரசாங்கத்தின் விருந்தினராகத் தங்கி யிருந்தார். இவர் தாம் இலங்கையில் தங்கியிருந்த காலத்தை, இலங்கைப் பிரதம மந்திரியுடன் கூடி இரு நாடுகளுக்கும் பொதுவான பல விஷயங்கள் பற்றிப் பேச்சு வார்த்தைகளை நடாத்தப் பயன்படுத்திக்கொண்டார். இப்பேச்சுவார்த்தைகள் மிகுந்த சினேக பான்மையுடன் நடைபெற்றன. இலங்கைக்கும் யப்பானுக்குமிடையில் ஏற்கெனவே நிலவிவரும் அந்நியோன்னிய உறவுகளைத் தங்களின் பேச்சு வார்த்தைகள் மேலும் பலப்படுத்துமென இரு பிரதமர்களும் உறுதியாக நம்புகிறார்கள்.

உலக சமாதத்தின் பொருட்டு ஒன்றுகூடி செயலாற்ற இரு நாடுகளுக்குமுள்ள ஆவலைப் பிரதமர்கள் மீண்டும் உறுதிப்படுத்தினார்கள். அந்நியோன்னிய நல்லெண்ணத்தின் அடிப்படையில் நடைபெறும் பேச்சு வார்த்தைகளைக் கொண்டு மட்டுமே தேசங்களுக்கிடையே ஏற்படும் தகாறுகளைத் தீர்த்துவைக்க முடியுமென்ற தங்களின் நம்பிக்கையையும் அவர்கள் அழுத்தம் திருத்தமாகக் கூறினார்கள். ஐக்கிய நாடுகள் சாசனத்தின் நோக்கங்களிலும், கொள்கைகளிலும் தங்களுக்குள்ள நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டதோடு உலக சமாதானத்தை நிலைநாட்டக்கூடிய ஒரே கருவியென்ற முறையில் ஐ. நா. ஸ்தாபனத்தின் முக்கியத்துவத்தையும் அவர்கள் அங்கீகரித்தார்கள். இந்த நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்ளும் போது பாண்டுங் மகா நாட்டின் தீர்மானத்தில் காணப்படும் கொள்கைகளை இரு நாடுகளும் மதித்து நடப்பதையும் இருவரும் ஞாபகப்படுத்திக் கொள்கிறார்கள்.



யப்பானியப் பிரதமரும் இலங்கைப் பிரதமரும் கூட்டறிக்கையில் கைச்சாத்திடுகின்றனர்.

தங்கள் இரு நாடுகளுக்கு மிடையில் பொருளாதாரக் கூட்டுறவை மேன்மேலும் வளர்ப்பதற்கான வழி வகைகளைப்பற்றியும் இரு பிரதமர்களும் விவாதித்தனர். இவ்விஷயத்துக்கு இவர்கள் அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார்கள். பொருளாதார அபிவிருத்தி, வர்த்தகம் ஆகிய துறைகளில் தற்போதுள்ள தொடர்புகளை விட இன்னும் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதன் பயனை இரு நாடுகளும் நன்மையடையலா மெனவும் அவர்கள் நம்புகிறார்கள்.

உலக சமாதானத்துக்குத் திட்டவட்டமான ஆயுதப் பரிகாரணம் இன்றியமையாத தென்பதை இரு பிரதமர்களும் ஏற்றுக் கொள்கிறார்கள். சில நாடுகளால் மேற்கொள்ளப் பட்டிருக்கும் அணு, ஜலஜ குண்டுப் பரீட்சைகள் மனித சமுதாயத்தின் எதிர்கால சுபீட்ச வாழ்வை முன்னிட்டு எந்த விதமான காலதாமதமுமின்றி கைவிடப்பட வேண்டுமெனவும் அவர்கள் கருதுகிறார்கள்.

பௌத்த மதம் யப்பானுக்கும் இலங்கைக்கும் பொதுவான மதமாக இருப்பதோடு இவ்விரு நாட்டு மக்களும் ஒரு பொதுவான பௌத்த கலாசாரப் பாரம்பரியங்களாலும் பிணைக்கப் பட்டிருக்கிறார்கள். எனவே புத்த தர்ம மனப்பான்மையுடன் மனிதவர்க்கத்தின் சமாதானத்துக்கும் க்ஷேமாபிவிருத்திக்கும் விசேஷ சேவை செய்ய இப்பிணைப்புகள் இவ்விரு நாடுகளுக்கும் வசதியளிக்கின்றன. பொது நன்மைக்காக இம்மனப் பான்மையுடன் ஒன்று கூடி செயலாற்ற இரு நாடுகளும் கொண்டுள்ள திடசங்கற்பத்தை இரு பிரதமர்களும் உறுதிப்படுத்தினர்கள்.

### இலங்கையை விட்டுப்புறப்படுதல்

இத்தீவில் மூன்று நாள் தங்கியிருந்த யப்பானியப் பிரதமர் வெள்ளிக்கிழமை நண்பகலில் இத்தீவை விட்டுப் புறப்பட்டார்.

விமான நிலையத்தில் பிரதமர் பண்டாரநாயக்காவும், இதர அமைச்சர்களும், பாராளுமன்றப் பிரதிநிதிகளும், இராஜீயத் தூதுவர்கள் பலரும் பிரசன்னமாயிருந்து யப்பானியப் பிரதமரை வழியனுப்பி வைத்தனர்.

பிரதமர் கிஷி விமான நிலையத்தில் தனது இறுதிச் சொற்பொழிவின் போது கூறியதாவது :—


"நான் இங்கு தங்கியிருந்த போது எனக்கு அளிக்கப்பட்ட அமோக வரவேற்புகளுக்காக இலங்கை அரசாங்கத்துக்கும், மக்களுக்கும் என் மனப்பூர்வமான நன்றியை, நான் புறப்படு முன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உங்கள் மகா தேசாதிபதி சேர். ஒலிவர் குணத்திலக்கா அவர்களுடனும், உங்கள் பிரதம மந்திரி திரு. பண்டாரநாயக்கா அவர்களுடனும் நான் நடத்திய பேச்சு வார்த்தைகள், எம் இரு நாடுகளுக்கிடையிலும் சிநேகபான்மையான தொடர்புகளை அதிகரிக்க உதவுவதோடு மாத்திரம் நின்றுவிடாது, அநேக சர்வதேசப் பிரச்னைகளை அணுகுவதிலும் நமக்கு உதவியளிக்கும் என நான் நிச்சயமாக நம்புகிறேன். உங்கள் தேசிய சுபீட்சத்துக்கு, உங்கள் மக்கள் உற்சாகத்துடன் ஆற்றும் பணிகள் எனக்குச் சில அனுபவங்களைத் தந்துள்ளன.

யப்பானிய அரசாங்கமும், மக்களும் உங்கள் நட்பையும், நல்லெண்ணத்தையும் பரிமாறிக்கொள்ள என்றும் தயாராயிருப்பதுடன், உங்கள் தீவிர முயற்சிகளில் மனப்பூர்வமாக ஒத்துழைக்கவும் ஆயத்தமாயிருக்கின்றனர் என்பதை உங்களுக்கு உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன்.

கலாச்சாரம், இயற்கை எழில் எனுமிரண்டிலும் இலங்கைக்குள்ள பெருமதிப்பும், உங்கள் மக்களின் விருந்தோம்பல் உணர்ச்சியும் என்றென்றும் என் ஞாபகத்திலிருக்கும்.

உங்கள் நாட்டின் சுபீட்சத்துக்கும், உங்கள் மக்களின் மகிழ்ச்சிக்குமாக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்."



பௌத்தரான யப்பானியப் பிரதமர் தலதாமாளிகைக்குச் சென்று புத்தரை வழிபட்டார்

## பாரதப் பிரதமரின் இலங்கை விஜயம்

(6 ம் பக்கத் தொடர்ச்சி)

ஆற்றலுணர்ச்சியை இழந்துவிடுவோம். நம்பிக்கையிருந்தால் (தலை நிமிர்ந்து) வானத்தைப் பார்த்துக் கொண்டு நடக்க முடியும். மனந்தளர்ச்சியடைந்தால் எமாற்றம் தலைதூக்கும். நாம் எங்கு செல்கிறோமென்ற சந்தேகம் தோன்ற முடியும். உண்மையில் மனித சமுதாயத்தின் துன்ப வாழ்க்கை அப்பொழுதுதான் தோன்றும். அப்பொழுது மனிதன் வாழ்வாங்கு வாழும் உணர்ச்சியை இழக்கிறான். அதன் பிறகு அவன் வாழ்வதால் யாது பிரயோசனம்? அரசியல் வாதி என்ற முறையில் என்றால் தொழிலாற்ற முடியும். ஆனால் அரசாங்க பீடத்தில் வீற்றிருக்க வேண்டுமென்பதற்காகவோ, அரசாங்க சாசனங்களில் கைச்சாத்திடுவதற்காகவோ, அரசியல் வாதி செய்யும் சாதாரண தொழிலைச் செய்யவோ நான் பிரதம மந்திரியாகவில்லை. விளங்காத ஒரு முக்கிய விஷயம் என்னை இங்கு கொண்டுவந்தது. ஒரு முக்கிய காரணம் என்னை இங்கு பலவந்தமாகப் பிடித்திழுத்து வந்தது. வாழ்க்கையில் பெரிய அல்லது சிறிய தொழிலைச் செய்வதற்காகவல்ல.

நம்மிடத்தில் நம்பிக்கையிருப்பதால், நம் மக்களிடத்து நம்பிக்கையிருப்பதால், நம் நாட்டின் மீது நம்பிக்கையிருப்பதால், மனித சமுதாயத்தின் பெரும் பான்மையான இலட்சியங்களில் நம்பிக்கையிருப்பதால், இப்பிரச்சினைகள் வரும் பொழுது அப்பிரச்சினை தேசியப்பிரச்சினையாயிருந்தாலும் சரி, சர்வ தேசீயப் பிரச்சினையாயிருந்தாலும் சரி நாம் அவைகளை எதிர்த்துப்போராடுகிறோம்.

நான் முக்கியமாக இந்திய, இலங்கைத் தொடர்பைப்பற்றிச் சில வார்த்தைகள் பேசவிரும்புகின்றேன். இந்தியாவும், இலங்கையும் பூமிசாத்திர அமைப்பினாலும், கலாசாரம், பரம்பரை, புத்தரின் பொன்னான உபதேசம், சமயம் போன்ற எண்ணற்ற அம்சங்களினாலும் பிணைக்கப்பட்டிருக்கின்றன. இவை இவ்விரு நாடுகளும் இணைபிரியாதிருக்கவும், ஒத்துழைக்கவும் வழி செய்கின்றன. வேறெவ்விதமாக நடந்தாலும் இரு நாடுகளும் பாதிக்கப்படும். இந்த நிலை மற்ற நாடுகளுக்குமுண்டு. ஆனால் இந்தியாவும், இலங்கையும் மிகவும் முக்கியமாக இச்சூழ்நிலையில் வாழ வேண்டும். நம்மிடையே மிகவும் சிக்கலான பிரச்சினைகளுண்டு. அவை நம்மிரு நாடுகளின் சூழ்நிலையைப் பாதிக்கின்றன. நாம் எவ்வளவுதான் முயன்றாலும் பிரச்சினைகளைத் தீர்ப்பது அவ்வளவு இலகுவாகத் தெரிவதில்லை. அப்படியானால் அவைகளை நாம் எவ்விதம் தீர்க்கலாம்? முதலில் நாம் நினைவிலிருத்திக் கொள்ள வேண்டிய ஒரு விஷயமுண்டு. அதாவது ஒரு பிரச்சினையைத் தீர்க்க நாம் பிரச்சினையை சரியான வழியில் நாட வேண்டும். சிநேகமனப்பான்மையுடன், ஒத்துழைப்பு நோக்குடன் எதிர்க்கட்சியின் நோக்கங்களையும் விளங்கிக் கொண்டு பிரச்சினையைத் தீர்க்க முயல வேண்டும். இந்நிலையில் பிரச்சினையை நாடினால் பிரச்சினையின் சில சிக்கல்களாவது தீர்க்கப்படும்.

### மனிதாபிமானத்தின் அவசியம்

இரண்டாவதாக நாம் கவனத்துக் கெடுத்துக் கொள்ள வேண்டியது யாதெனில் எல்லாப் பிரச்சினைகளையும் பல கோணங்களிலிருந்தும் நோக்குவதே. முக்கியமாக மனிதாபிமானத்துடன் பிரச்சினையை நோக்க வேண்டுமென நான் கருதுகிறேன். மனிதர்களைப் புள்ளி விபரங்களைக் கொண்டு கணக்கிடக் கூடாது. இங்கிலாந்தில் ஒருவர் "இந்தியாவில் எத்தனை பிரச்சினைகளிருக்கின்றன" என்று என்னைக் கேட்டார். நான் "36 கோடிப் பிரச்சினைகளிருக்கின்றன" வென்று பதில் கூறினேன். ஏனெனில் ஒவ்வொரு தனி நபரும் ஒரு பிரச்சினையாகும். நான் மனிதனை மனிதனாகவே மதிக்கிறேன். வெறும் புள்ளிவிபரமாக மதிக்கவில்லை. ஒவ்வொரு பிரச்சினைக்குப் பின்னாலும் மனிதர்களிருப்பதை நினைவிலிறுத்தி, பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன் நோக்க வேண்டும்.

நான் தற்பொழுது ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். அவ்விஷயம் உங்களில் பலருக்கு அற்பமானதாகத் தோன்றலாம். நான் உங்களோடு ஒளிவு மறைவின்றிப் பேச விரும்புகின்றேன். அதேபோன்று நீங்களும் என்னுடன் பேச வேண்டும். அறிவுள்ள சிலர் சில சந்தர்ப்பங்களில் "இந்தியா பெரிய நாடாகையால் இங்கையைப் பயமுறுத்தும்; இலங்கை மீது படையெடுக்கும்; இலங்கையை கபளீகரம் செய்து விடும்; இணைத்துக் கொள்ளும்" என்று பலவிதமான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். இது சுத்த அபத்தமான கருத்தாகும். இக்கருத்துள்ள எல்லோரையும் நான் கேட்டுக்கொள்வதென்ன வென்றால் எனது வார்த்தையை நீங்கள் ஏற்றுக் கொள்ளாது சிந்திக்க வேண்டுமென்பதே. இலங்கையை இந்தியா தாக்குவது நடக்க முடியாத காரியம். இந்தியாவிலுள்ள மக்கள் கெட்ட நோக்கத்துடனிருந்தாலும் இது நடக்க முடியாதது.

### இந்தியா மனநோய் ஆஸ்பத்திரியல்ல.

இந்தியா ஒரு மனநோய் ஆஸ்பத்திரியென்று நான் நினைக்கவில்லை. இந்திய மக்கள் விவேக முள்ளவர்கள் என்றே நான் கருதுகிறேன். இதனால் இந்தியா அடையும் இலாபமென்ன? இந்தியா முட்டாள்தனமாக நடப்பதால் அடையக்கூடிய நன்மையென்ன?

இப்பொழுது உலகம் மாறியிருக்கிறது. ஒரு சக்கரவர்த்தி அல்லது மகா மன்னன் தேசங்களை வெற்றி கொண்டு தனது ஆதிக்கப் பிரதேசத்தை விஸ்தரிக்க விரும்பும் பழைய கருத்துக்கள் இக்காலத்துக்குப் பொருந்தாது. அந்தக் கருத்து ஒரு நாட்டிலுள்ள காணிச் சொந்தக்காரனின் கருத்தைப் போன்றது என்று சொல்லலாம். காணிச் சொந்தக்காரன் ஒருவன் தனது சொத்தைப் பெருக்கி ஒரு பெரிய பணக்காரனாவதற்கு எவ்வாறு விரும்புகிறானோ அவ்வாறே ஒரு மன்னனும் தனது தேசத்தை விஸ்திரித்து ஒரு பெரிய செல்வந்தனாகி அதிகமதிகமான மக்கள் தன்னை மகா இராசாவே என்று அழைக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறான். இந்தக் கருத்துக்கு இன்று இடமேயில்லை. சமுதாய இலட்சியங்களை நோக்கி முன்னேறும் எந்த நாட்டுக்கும், தேசத்தின் அளவு பெருகுதல் ஒரு பெரிய தலையிடி மாத்திரமன்றி ஒரு பெரும் உபத்திரவமுமாகும். ஒரு நாடு இன்று எதிர்பார்ப்பது நெருங்கிய தொடர்பேயாகும். இது பலத்தையளிக்கிறது. நெருங்கிய தொடர்பு, சேர்க்கை என்பன என்னென்ன மாறுபாடுகளுடைத்தாயிருப்பினும், அந்த மாறுபாடுகளின் மத்தியிலும், நெருங்கிய தொடர்புள்ள நாடென்ற வகையில் மக்கள் ஒருவருக்கொருவர் நெருங்கிய பற்றுள்ளவர்களென உணர்தல் வேண்டும். அந்த உணர்ச்சி இல்லா எந்தத் தேசத்தையும் சேர்த்தல் அந்த நாட்டையே பலவீனப்படுத்துமேயொழிய அதைப் பலப்படுத்தாது. அது உடனடியாக ஒரு அம்சத்தை அதாவது பலவீனப்படுத்தும் ஒரு அம்சத்தைக் கொணரும். அங்ஙனம் சேர்த்தல், வெகு சீக்கிரத்தில் அத்தேசத்தைச் சகல வெறுப்புக்கும், கசப்புக்கும் ஆளாக்கும். அத்துடன் அது இன்றைய பெரிய பிரச்சினைகளுக்கெல்லாம் காரணமுமாகும். எந்த நாடும் தனித்தியங்க முடியாதாதலால் அது உலகப் பிரச்னைகளையும் எழுப்பிவிடும்.

இந்தியாவிலுள்ள நாங்கள் மிக மிகப் பாரதூரமான பிரச்னைகளையெல்லாம் எதிர்த்துக்கொண்டிருக்கிறோம். பத்திரிகை மகாநாட்டில் யாரோ ஒருவர் எனது ஐந்து வருடத்திட்டம் சம்பந்தமாக நாங்கள் பெரிய கஷ்டங்களை அனுபவிக்கிறோமென ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் கூறப்பட்டிருப்பதாக என்னைக் கேட்டார். அந்தக் கேள்விக்கு எனது மறுமொழிகள் அநேகம் எனினும், அந்த விஷயத்தை அவர் மிகவும் அழுத்தமாகக் கேட்கவில்லையென்று நான் அவரிடம் கூறினேன். நாங்கள் இருந்த மாதிரியே தொடர்ந்தும் இருக்கக் கருதவில்லையாதலால், நாம் பெரிய கஷ்டங்களை தீர்க்காலோசனையுடனேயே வலிந்து இழுத்தோம். வறுமை யுணர்ச்சி

யுடனும், கோடிக்கணக்கான மக்களின் அவஸ்தையைக் கண்ணுற்றுக் கொண்டும் நாம் வாழாவிருக்கமாட்டோம். நாம் வறுமையை விரட்டப் போகிறோம். எங்கள் முழுப் பலத்தையும் கொண்டு நாம் அதை விரட்டுவோம். இவற்றையெல்லாம் நாம் மந்திரத்தால் சாதிக்க முயலவில்லை. நாம் இதற்கு வெகு கடுமையாக உழைக்க வேண்டும். நாம் எதிர் நோக்க வேண்டிய அநேக கஷ்டங்கள் உள. இவை இன்றோ நாளையோ ஏற்படும் கஷ்டங்களல்ல. பரம்பரை பரம்பரையாக ஏற்பட இருப்பவற்றைத்தான் குறிப்பிடுகிறேன். ஆனால் இந்திய மக்கள் படிப்படியாக முன்னேறிக் கொண்டு போகிறார்கள் என்பதை நான் இங்கு கூறுகிறேன். அவர்கள் வறுமையிலிருந்து படிப்படியாகத் தப்பிக்கொள்வதுடன், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி சீரும் சிறப்புமுள்ள பயனுள்ள வாழ்க்கையை நடாத்திக்கொண்டு போகிறார்கள்.

நம் முன் இப் பாரிய பிரச்னைகளெல்லாம் இருக்கின்றன. இந்த நிலைமையில், வெளிநாடுகளில், வீரதீரச் செயல்களில் இறங்க முயற்சிப்பதன் மூலம் தலையிடியை மேலும் கூட்டிக்கொள்ள யாருக்காவது பைத்தியம் பிடித்திருக்கிறதென நீங்கள் கருதுகிறீர்களா? இவ்வித அபிப்பிராயம் சுத்த மடைத்தனமானதென்பதை நீங்கள் அறிவீர்கள். இலங்கை மக்கள் சிலரின் மனதில் இவ்வித பயமிருப்பதைக் காட்டவே நான் இங்ஙனம் கூறுகிறேன். இது எவ்வளவு மடைத்தனமானது! இது மனதால் நினைக்க முடியாத காரியமல்லவா? எந்தப் பகுத்தறிவுள்ள இந்தியனும் எவ்வளவுதான் குறுகிய திருஷ்டியுடன் இப் பிரச்னையை நோக்கினாலும் இது முடியாத காரியமொன்றல்லவா? இந்தப் பயத்தை உங்கள் மூளையிலும் நெஞ்சிலுமிருந்து நீக்கி விடுங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இலங்கையை இந்தியா பிடிக்கப்போகிறதென்று சிலர் சொல்வதை நான் கேள்விப்பட்டதே இதற்குக் காரணமாகும். அப்படியானால், இத்தகைய விஷயங்களைச் சொல்பவர்கள் இக்கால உலகம் என்ன என்பதை உணருவதில்லை என்றே நான் சொல்லவேண்டும். அவர்கள் இந்தியா எப்படிப்பட்டதென்பதை உணர்வதில்லை. இலங்கை எப்படிப்பட்டதென்பதையும் அவர்கள் நினைக்க முயற்சிப்பதில்லை என்றே நான் கருதுகிறேன். அவர்கள் எந்த விதமான நூற்றூண்டில் வசிக்கிறார்களென்று எனக்கே தெரியவில்லை. நாம் ஒரு புரட்சி யுகத்தில் வசிக்கிறோமாதலால், உங்களை எதிர்நோக்கும் அபாயம் இந்தியாவல்ல, இந்தியா எதிர்நோக்க வேண்டிய அபாயம் வேறெந்த நாடுமல்ல. ஒரு நாடு எதிர்த்துச் சமாளிக்க வேண்டிய பிரச்சினைகளே அந்நாட்டின் அபாயங்களாகும். அவற்றை நீங்கள் தீர்க்காவிட்டால், அவை உங்களை மிஞ்சிவிடும்.

### பயம் கூடாது

எந்த நாடாவது ஹைட்ரஜன் குண்டுகளையோ, வேறு ஏதாவது குண்டுகளையோ வைத்திருப்பினும், நான் அதற்குப் பயப்படவில்லை. எங்கள் தலைவர் காந்திஜீ அவர்களிடமிருந்து நான் கற்ற பாடங்கள் அநேகம்; பயப்படக்கூடாது என்பதும் அவற்றில் ஒன்று. அந்தப் பாடத்தை நான் ஞாபகத்தில் வைத்து அதற்கு இணங்க நடப்பேனென நம்புகிறேன். நாம் பலனற்ற, பாதுகாப்பற்ற, ஆயுதமற்ற, படையற்ற நாடாக இருந்த போதும் கர்வம் மிக்க மன்னர்களின் சக்தியை நாம் எதிர்த்தது ஞாபகமிருக்கிறது. எதனால்? எதைக் கொண்டு? எங்கள் ஆத்ம பலத்தால்; எங்கள் உரங்கொண்ட நெஞ்சால்; எங்கள் தளராத, வளையாத உள்ளங்களால். அத்துடன், அதே நேரத்தில், எம்மை எதிர்த்து, அடக்கி, துன்பப்படுத்தியவர்களிடம் சற்று நல்லெண்ணம் காட்டும்படி கூறிய எங்கள் குருவின் விருப்பத்துக்கு இணங்கி நடக்கவும் நாம் முயற்சித்தோம். நாம் இதில் கூடிய வெற்றியையோ குறைந்த வெற்றியையோ ஈட்டினோம். இறுதியில் நாம் கௌரவமான வகையில் வென்றோம், வெற்றி கண்டோம்.

எனவே நீங்கள் எதிர்நோக்கிச் சமாளிக்க வேண்டிய பிரச்னைகள் வேறெந்த நாட்டிலுமிருந்து வந்து உங்கள் மீது வாரிக் கொட்டுப்படவில்லை.

எந்த நாடும் இந்தியாவைத் தாக்கப்போவதில்லை. இது எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால் அது நிகழ்ந்தால் நாம் அதை எதிர்ப்போம். நாம் எங்களைப் பாதுகாத்துக் கொள்வோம். ஆனால், மக்களின் தரத்தை உயர்த்துவதும், நாட்டில் நெருங்கிய தொடர்புகளை நிலவச் செய்வதும், ஒன்றுபட்ட, இதர நாடுகளுடன் நட்புக் கொண்ட மக்களை வைத்திருப்பதுமே முக்கிய விஷயமாகும். சிறந்த பாதுகாப்பு, நட்பிலும் கூட்டுறவிலும் தான் தங்கியுள்ளது. கெடுபிடி யுத்தத்தில் அல்ல. கெடுபிடி யுத்தம் எவ்வெப்போது தன் தீக்கரத்தால் தொடுகிறதோ அவ்வப்போது அது பகைவர்களையும் தோற்றுவிக்கிறது.

உங்கள் நட்புக்கும் அன்புக்கும் நான் மீண்டும் மனப்பூர்வமாக நன்றி செலுத்திக் கொள்கிறேன்.

**கேள்விச் செவி** (37 ம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணைத் திறந்திடந் தன்னை—மெல்லக்
காட்டுவை யென்றுகர்ச் சிக்கத்
தண்ணிழல் தந்திடும் மாவின்—பாதத்
தானத்தை யேமுயல் சுட்டிக்
காட்டிடக் கானக ராஜன்—சுழலும்
கண்ணிணை கூர்ந்திட நோக்கும்
வேட்டது வோவென் றுசாவும்—அணுவை
வெட்டுங்குண் டோவென வினவும்
வானவர் தொட்டிடும் அம்போ?—வேக
வாயுவின் அஸ்திர வம்போ?
கானவர் விட்டிடுங் கணையோ?—நஞ்சு
கக்கிடும் வேலினுக் கிணையோ?
அங்குல மங்குல மாயே—பூமி
ஆய்ந்திடும் போதறு சுவைகள்
பொங்கிடும் மாங்கனி யொன்று—பொன்னைப்
பூசியே தோன்றிடக் கண்டு
கொல்லென் றொலித்திடும் நாதம்—எங்கும்
கோட்டக் குலுங்கிச் சிரித்தே
புல்லிப் பயந்திடும் முயலைக்—கையில்
பொத்திப் பிடித்துப் புகலும்
"துரும்பினைத் தூணுக்கி வீணே—கொடிய
துயரத்தை விளைவித்த தோழா
விரும்பிடும் மாங்கனி யல்லோ—தலையில்
வீழ்ந்தது வீழ்ந்தது பாராய்
கிண்ணத்துத் தேநீரில் நின்றே—புயலைக்
கிளப்பிடுங் கேட்டினைப் போலே
வண்ணத்து மாங்கனி கண்டே—நெஞ்சு
வாடிநீ ஓடுதல் வடிவோ?
மக்களே மாக்களே யிந்த—நெடிய
மாநிலந் தன்னிலோர் கோழை
மிக்க நடுங்கியே விண்ட—பொய்யின்
விடுகதை மேதினி உண்டே
பீதியை எங்கும் விதைத்தே—கதைகள்
பின்னியே காதிற் பிணித்தே
நீதி யொழுங்கை முறித்தே—ஊரில்
நிம்மதிதன்னையரித்தே
கேள்விச் செவிக்குண வாக்கி—மிக்க
கேடு விளைவித்த கதையை
நீளுஞ் செவிமுயல் தன்னால்—இந்த
நீணில மறியுதே காணீர்!

# சங்கிலி

(ஓர் சரித்திர நாடகம்)

எழுதியவர் : இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை.

பக்கம் : 94.

கிடைக்குமிடம் : பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை,

இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை.

---

கவிதையும் நாடகமும் ஆராய்ச்சிக் கட்டுரை பலவும் அவ்வப்போது எழுதித் தமிழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் பேறு ஈழத்தமிழ் மக்களுக்கு அளிக்கும் வரலாற்று நாடகம் "சங்கிலி".

இந்நாடகம் யாழ்ப்பாணத்தை அரசாண்ட இரு சங்கிலிகளும் முதற் சங்கிலியின் வாழ்க்கை விருத்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டது. 1519ம் ஆண்டு முதல் 1561ம் ஆண்டுவரை யாழ்ப்பாணத்தன்னரசை அரசாண்ட இவன் செகராச சேகரன் என்னும் சிங்கர்சனப் பெயர் கொண்டு விளங்கியவன். இவன் காலத்தில் போர்த்துக்கேயரின் செல்வாக்கு நாட்டில் படிப்படியே ஏற்படலாயிற்று. மன்னாரில் பலரை அவர்கள் தமது மதமாகிய கத்தோலிக்க மதத்தில் சேர்த்துக் கொண்டனர். இது சங்கிலி அரசனின் கோபத்தை ஊட்டியது; மதம் மாறியவர்கள் போர்த்துக்கேயருக்குடந்தையான ராசத்துரோகிகள் என்று சங்கிலி அரசன் நம்பினான். எனவே அவர்களை அவன் கடுமையாகத் தண்டித்தான். இவ்வாறு செகராசசேகரன் போர்த்துக்கேயரை எதிர்த்துச் செயலாற்றுங் காலத்தில் தென்னிலங்கையிலிருந்து சிங்கள அரசகுமாரனை மாயதுனையும் போர்த்துக்கேயரை எதிர்த்துப் போரிட்டான். போர்த்துக்கேய அன்னிய ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதில் இவ்விரு வீரர்களும் ஒத்துழைத்தமை நமது நாட்டில் அக்காலத்தில் சிங்கள தமிழ் மக்களிடையே நிலவிய நல்லெண்ணத்தையும் நட்பையும் நமக்குக் காட்டுகிறது. செகராசசேகரனின் வீரம் நாம் வியக்கத் தக்க ஒன்றாகும். போர்த்துக்கேயர் நல்லூரைக் கைப்பற்றிவிட அவன் வன்னிக்கு ஓடும்படி நேரிட்டதாயினும், பின்னால் திரும்பவும் போர்த்துக்கேயருக் கெதிராகப் போர் தொடுத்து வெற்றிவாகை சூடினான். போர்த்துக்கேயர் தமிழ் மன்னனின் வீரத்துக்கு முன் நின்று பிடிக்க முடியாது ஓட்டம் பிடித்தனர். செகராசசேகரனென்னும் இம் முதலாவது சங்கிலிக்குப் பின்னால் புவிராச பண்டாரமென்பவன் சிங்காதனத் தேறினான்.


செகாரசேகரன் சிறந்த வீரன் என்பதையும் யாழ்ப்பாணத்தன்னரசின் நலத்திலும் விடுதலையிலும் தீராத வேட்கை கொண்ட உத்தமனென்பதையும் அவனைப்பற்றி நாம் அறியும் இக்குறிப்புகள் நமக்கு நன்குணர்த்துகின்றன. இத்தகைய பண்பு நலன் வாய்ந்த ஒரு ஆண்டகையைத் தலைவனாகக் கொண்டு நாடகம் புனைதல் மிகவும் ஏற்புடைய ஒன்றேயாகும். "யாழ்ப்பாண வைபவ மாலை" போன்ற ஓரிரு பழைய நூல்களைக்கற்பாரேயன்றி ஏனையோர் சங்கிலியின் பெயரைத்தானும் அறியாது மயங்கக்கூடிய இன்றைய இலங்கைத் தமிழகத்தில் பண்டைய யாழ்ப்பாணத்தின் வீரத்தனயரின் சிறப்பான ஒருவனை மக்கள் நினைவிலே மறையாது நிறுத்த இந்நூல் பேருதவியாகும் என்பதில் ஐயப்பாடில்லை. முதற் சங்கிலியைப்பற்றி நாடகத் தமிழ் நூல் செய்த நல்லாசிரியர் கணபதிப்பிள்ளை கடைசித் தமிழ் மன்னனாகிய இரண்டாவது சங்கிலியைப் பற்றியும் ஒரு நாடகம் எழுதி உதவ வேண்டுமென்று நாம் விரும்புகிறோம்.

ஆசிரியர் கணபதிப்பிள்ளை நாடகத்துக் கதையைப் பொருத்தமாக அமைத்து, யாழ்ப்பாணத்தில் வழக்காற்றிலுள்ள பேச்சுத் தமிழையும் இடமறிந்து நன்கு புகுத்தி சுவையான முறையில், படிப்பதற்கு மட்டுமல்ல நடிப்பதற்கும் ஏற்றவாறு இந் நாடகத்தைப் புனைந்திருக்கிறார்.

நாடக நூலுக்கு ஆசிரியர் எழுதியிருக்கும் முகவுரை சாலச்சிறந்ததாகும். அம் முகவுரையை ஒரு தனி நூல் என்றுகூட கூறிவிடலாம். "இலங்கை வாழ் தமிழர் வரலாறு" என்ற மகுடத்துடன் எழுதப் பட்டிருக்கும் இம்முகவுரையில் சரித்திர காலத்துக்கு முன்னிருந்து யாழ்ப்பாணம் தன்னரசு மறைந்து கீழ் நிலையுற்று முதல் வெள்ளை ஏகாதிபத்தியத்தின் கீழ்—போர்த்துக்கேய ஆட்சியின்கீழ் வந்துற்ற காலை வரையுள்ள வரலாறு சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டிருக்கிறது. ஆசிரியர் திருகோணமலை, மட்டக்களப்பு முதலாம் பகுதியில் வாழும் தமிழர்களின் வரலாற்றையும் இவ்வாறே திரட்டித் தருதற்குத் திட்ட மிட்டுள்ளதாக அறிகிறோம். இலங்கை வாழ் தமிழர்கள் அதனைப பெரிதும் எதிர் பார்த்திருக்கிறார்கள்.

(அ. ந. க.)

---



யப்பானியப் பிரதமர் யானைமீதேறிவருவதில் அலாதி விருப்பமுள்ளவர். இலங்கைவந்ததும் யானைமீது சவாரி செய்ய அவர் மறக்கவில்லை.

# அரசகருமமொழி அலுவலகம்

(கல்விப் பிரிவு)

## வெளியீடுகள் :

கீழ்க்குறிப்பிடப்படும் கலைச்சொற்றொகுதிகள் தற்பொழுது பெறற்பாலன :

| | | |
|---|---|---|
| கணிதம் | தமிழ் | ரூ. 2.80 |
| இரசாயனவியல் | ,, | ரூ. 1.50 |
| புவியியல் | ,, | ரூ. 2.20 |
| பௌதிகவியல் | ,, | ரூ. 3.50 |
| கைப்பணி—பகுதி I (நெசவுத் தொழிலும் வனைதற்றொழிலும்) | ,, | ரூ. 1.00 |
| கைப்பணி—பகுதி II (மரவேலையும் அரக்கு வேலையும்) | ,, | ரூ. 1.40 |
| பொது விஞ்ஞானநூல்—பகுதி I | ,, | ரூ. 3.30 |
| ஐ. நா. க. வி. ப. வெளியீடு – நூல் I | ,, | ரூ. 0.70 |
| (ஐக்கியநாடுகள் அவையத்தையும் அதன் சிறப்புச் செயற்குழுக்களையும் பற்றிக் கற்பிப்பதற்கான சில குறிப்புரைகள்) | ,, | ரூ. 0.70 |

விற்பனையாளர்:

## எரிக்கரைப் புத்தகசாலையார்,

த. பெ. இல. 224, கொழும்பு.

# அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

| | | விலை ரூ. ச. | தபாற் செலவு ச. |
|---|---|---|---|
| 1. | இலங்கைக் கல்வி முறைச் சீர்திருத்தம் சம்பந்தமாய ஆலோசனைகள் .. .. .. | 55 .. | 10 |
| 2. | அரசாங்க பாஷைக் கொமிஷனின் நான்காவது இடையறிக்கை .. .. .. | 50 .. | 15 |
| 3. | அரசாங்க பாஷைக் கொமிஷனின் ஐந்தாவது இடையறிக்கை .. .. .. | 1.20 .. | 35 |
| 4. | இந்து ஆலயங்களும் தரும நம்பிக்கைச் சொத்துகளும் | 70 .. | 15 |
| 5. | இந்துமத அறநிலையங்கள், ஆதீனங்கள் முதலியவை பற்றிய விசேஷ விசாரணைச் சபையின் அறிக்கை 1951 ம் ஆண்டு ஜூன் மாதம் .. | 2.00 .. | 35 |
| 6. | இலங்கைக் குடிமதிப்பு—1946 .. .. | 5.00 .. | 35 |
| 7. | 6 ம், 7 ம், 8 ம் வகுப்புகளில் கல்வியூட்டும் மொழிகளாக தேசிய மொழிகளை இலகுவில் அமைத்துக்கொள்வதற்கான சிபார்சுகளைச் செய்தற்கு நியமிக்கப்பட்ட சபையின் அறிக்கை .. .. | 1.45 .. | 35 |
| 8. | இலங்கை அரசியற் சீர்திருத்த விசாரணைச் சபை அறிக்கை—1945 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் .. | 2.00 .. | 35 |
| 9. | சுகாதார சேவைகளின் பதில் அதிபரது 1953 ம் வருட நிர்வாக அறிக்கை .. .. | 1.55 .. | 35 |
| 10. | குடிமதிப்பு புள்ளிவிபர தற்காலீக அதிபரினது 1953 ம் வருட நிர்வாக அறிச்கை .. .. | 60 .. | 20 |
| 11. | இலங்கை பறவைகள்—சித்திரசகித நூல் .. | 5.00 .. | 35 |

அரசாங்க பிரசுர நிலைய அதிபர்,

தபால் பெட்டி நிர். 500,

கொழும்பு, 1.

என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகவற்பகுதியினருக்காக, இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.